# மொழியியல்

தொகுதி 5 ஏப்ரல் - ஜூன் எண் 4

பதிப்பாசிரியர்கள்
ச. அகத்தியலிங்கம்
கோ. சீனிவாசவர்மா
ஜெ. நீதிவாணன்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்
காலாண்டு இதழ்
1982

T13387
R005A07

# அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம்

பதிவு எண் 2 (1977)

## அண்ணாமலைநகர்

### செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் : | டாக்டர் மு. சண்முகம் பிள்ளை (மதுரை) |
| துணைத் தலைவர் | டாக்டர் மு. இஸ்ரேல் (மதுரை) |
| செயலாளர் : | டாக்டர் ச. அகத்தியலிங்கம் (அண்ணாமலைநகர்) |
| பொருளாளர் : | டாக்டர் க. முருகையன் (அண்ணாமலைநகர்) |
| உறுப்பினர்கள் : | டாக்டர் சு. இராசாராம் (மைசூர்) |
| | திரு சீ. அருணன் (அண்ணாமலைநகர்) |
| | டாக்டர் டி. எஸ். மாணிக்கம் (ஹைதராபாத்) |
| | டாக்டர் கே. மீனாட்சி (டெல்லி) |

## மொழியியல்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின்

காலாண்டு இதழ்

### கட்டணம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆயுள் கட்டணம் | ரூ 200-00 | US $ 50-00 |
| ஆயுள் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 300-00 | US $ 75-00 |
| ஆண்டுக் கட்டணம் | ரூ 20-00 | US $ 5-00 |
| ஆண்டுக் கட்டணம் (நிறுவனங்களுக்கு) | ரூ 30-00 | US $ 7-00 |
| ஆண்டுக் கட்டணம் (மாணவர்களுக்கு) | ரூ 10-00 | |

மொழியியல் 5, 4. (1982)

# தமிழ் இலக்கணம் கற்பித்தல்*

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்
தமிழாக்கம்: எம். சுசீலா
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

''எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

மாணவனாகவும், ஆசிரியனாகவும், பெற்றோராகவும், நெறியாளராகவும் வெவ்வேறு நிலைகளில் இருந்து அறிவுபூர்வமான நோக்கோடும் பயன்பாடான நோக்கோடும் உள்ளும் புறமுமாக தமிழ்க் கற்பித்தலைக் கவனிக்கவும் அனுபவப்படவும் நான் வாய்ப்பு பெற்றிருக்கிறேன். மிகச் சில திறன்வாய்ந்த தமிழாசிரியர்கள் நடத்தும் வகுப்புகளைத் தவிர்த்து சாதாரணமாக ஏனைய தமிழ் வகுப்புகள் சுறுசுறுப்பின்றியும் எந்த முக்கியத்துவமும் இல்லாமலும், விளங்கிக்கொள்ளாத மாணவர்களைக் கொண்டதாகவுமே விளங்குகின்றன. இந்நிலைக்கான அடிப்படைக்

* Prof. T. P. Meenakshisundaran, Sixty - First Birthday Commemoration Volume - இல் உள்ள 'The Teaching of Tamil Grammar' என்ற கட்டுரையின் தமிழாக்கம்.

காரணத்தைக் கண்டுபிடிக்க விரிவான ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. தமிழாசிரியர்கள் எதையும் சிந்தித்துப் பார்ப்பதில்லை; சில பாடத்திட்டங்களையொட்டி பவணந்தி மாமுனிவரின் சூத்திரங்களை மனனம் செய்யும்படி மாணவர்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். இதன் விளைவாகத் தமிழ் இலக்கணம் மாணவர்களை விருப்பமில்லாமல் ஆக்குகின்றது.

இலக்கணம் என்ற பெயரில் இப்போது கற்பிக்கப்படும் கல்விக்கு இவ்விதம் எதிர்ப்பு தெரிவிப்பது இலக்கணக் கல்வி குறித்த அறியாமையின் காரணமாகவே என்று கூறப்படுகிறது. ஆனால் இது உண்மை அல்ல. இத்தகைய பழமையான இலக்கணம் கற்பிக்கும் முறைக்குச் சாவுமணி அடித்தவர்கள் ஸ்கேட், ஜெஸ்பர்ஸன், விட்னி போன்ற புகழ்பெற்ற ஒப்பிலக்கண அறிஞர்களே. தமிழ் இலக்கணத்தின் மீது எனக்கு எவ்வித வெறுப்புமில்லை. அது என்றும் எனக்கு இனிமையான பொழுது போக்காகவே இருந்து வந்திருக்கிறது. பிழையற்ற உண்மையான இலக்கணம் கற்பித்தல் எனக்கு ஒரு சிக்கலாகவும் இருந்ததில்லை. ஏனெனில் பிழையின்றி எழுதுவதற்கான விதிகள் அடங்கிய ஒரு துணைநூலாகக் கருதாது உண்மையான மொழி அறிவு நூலாகவே இலக்கணநூலைக் கருதும்படி என் ஆசிரியர் எனக்குக் கற்பித்தார். காலம் காலமாக நாம் பின்பற்றிவந்த பிழையான ஓர் அணுகுமுறை காரணமாக, கீழ்த்திசைக் கல்லூரி மாணவர்கள் கூட இலக்கணம் கற்பதில் ஆர்வமிழந்து உள்ளூர அதன் மீது வெறுப்பை வளர்த்துவந்தனர். இதன் காரணமாகத் தொல்காப்பியம் கற்பதனால் கிடைக்கும் பயனையும் இழந்தனர்.

தொல்காப்பியமும் நன்னூலும் மிகச் சிறந்த அறிவுபூர்வமான விளக்கமுறை இலக்கண நூல்கள். ஒலிகள் குறித்த 'எழுத்து' என்னும் இயல் பின்வந்த தலைமுறைகளால் மறக்கப்பட்டுவிட்ட ஒலியனியலை விளக்குகிறது. சொல் குறித்த 'சொல்லியல்' உருபனியலையும், பொருள் அல்லது இலக்கியம் குறித்த 'பொருளியல்' யாப்பிலக்கணத்தையும், இலக்கியத் திறனாய்வையும் விளக்குகின்றன. தொல்காப்பிய உரைகளை அவற்றிற்குரிய சரியான கண்ணோட்டத்துடன் பயின்றால் காலங்கள்தோறும் தமிழ்

மொழி அடைந்த வளர்ச்சியினைக் காட்டிநிற்கக் காணலாம். ஆயினும் ஓர் உண்மையை ஒத்துக்கொள்ளவேண்டும். நீதிபதிகள் கூட சட்டவிதிகளை விளக்கும் சாக்கில் மாறும் சூழ்நிலைகளுக் கேற்ப அந்த விதிகளை மாற்றிப் புதிய விதிகளை உருவாக்கக் காண்கிறோம் இது போன்றே இந்திய உரையாசிரியர்களும் பழமையான நூல்களை விளக்கும் சாக்கில் தங்கள் கருத்துக்களை யும் விதிகளையும் உருவாக்கிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இது யாவரும் அறிந்த ஒன்று. இவ்விதம் உரையாசிரியர்கள் மூல ஆசிரியர்களாகவே மாறிவிடும் தன்மையை அறியாமல், உரையாசிரியர் என்ற முறையில் அவர்களிடம் விளக்கம் தேடிப் போகும்போது அளப்பரிய ஏமாற்றமே அடைய நேர்கிறது. தொல்காப்பியர் அவருடைய காலத்தில் கிடைத்த இலக்கண விதிகளைத் தொல்காப்பியத்தில் தொகுத்துக் கூறிச் சென்றிருக்கி றார். வாழும் மொழிகள் காலப்போக்கில் எப்போதும் மாற்றங் களையும் வளர்ச்சியையும் அடைந்துகொண்டே இருப்பவை, தொல்காப்பியரே இதனை எதிர்பார்த்து (கடி சொல் இல்லை காலத்துப்படினே) பல பழைய விதிகளைப் புறக்கணித்தும், புதிய பல விதிகளை உருவாக்கியும் சென்றிருக்கிறார். ஆயினும் உரையாசிரியர்கள் எந்தக் காலத்திலும் எந்தப் பாதிப்பினாலும் மாறாத, மாற இயலாத இலக்கணம் என்னும் கண்கட்டுவித்தை யைத் தங்கள் தந்திர உரைகள் மூலம் நிகழ்த்தி வருகின்றனர். இந்த உண்மையை உணர்ந்துகொண்டு உரைகளை ஆராய்ந்தால் காலத்திற்குக் காலம் மொழியின் பயணத்தை விரித்துக் கூறும் வரலாற்று இலக்கண நூல்களாக இவ்வுரைகள் திகழ்வதைக் காணலாம்.

இந்த நூற்றாண்டின் இருபதுகளின் தொடக்கக்காலத்தில் குழப்பம் விளைவிக்கும் இலக்கணக் கலைச் சொற்களைப் பற்றிய சிக்கல் கனல் தெறிக்க உரையாடப்பட்ட பொழுது ஆங்கில மன்ற (English Association) அங்கத்தினர் ஒருவர் எல்லா மொழிகளுக் கும் பொதுவான இலக்கண (Universal Grammar) விதிகளைப் பயன்படத்தக்க வகையில் குழந்தைகளுக்குக் கற்பிக்கலாம், வேறு ஒன்றும் தேவையில்லை என்ற ஒரு சுவையான கருத்தைத் தெரி வித்தார். நல்வாய்ப்பாக அத்தகைய ஒரு பொதுவிலக்கணம்

தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது. ஊண்ட் (Wundt) டின் காலத்திற்கு வெகுகாலம் முன்பே தொல்காப்பியம் எண்ணங்களின் கோவையே வாக்கியம் எனத் தொடங்கிச் செல்கிறது. தொடர்பு இயைபு தொடர்பான சில சிக்கல்களை விளக்கிய பிறகு பெயர்த் திரிபுகளின் ஆராய்ச்சியோடு தொல்காப்பியர் தம்முடைய சொல் லியலைத் தொடருகிறார். ஆறாம் வேற்றுமை உண்மையில் பெயர்ச் சொல்லின் நிரப்புப் பகுதி (Complement) என்பது உண் மையே. ஆனால் சில பெயர்த் தொடர்களில் உள்ளது போன்று ஆறாம் வேற்றுமை இடவேற்றுமையிலிருந்து தோன்றியதாயிருப் பின் ஆறாம் வேற்றுமையைக் கூட வினையின் நிரப்புப் பகுதியாக விளக்க இயலும். "ஆயெட்டென்ப தொழின் முதனிலையே" என முடியும் நூற்பா இதனை வலியுறுத்துகிறது. இதன் பிறகு வாக்கியம் எழுவாய் அல்லது பெயர்ச்சொல்லாகவும் பயனிலை அல்லது தொழிற்சொல்லாகவும் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகிறது. பெயர்ச்சொல், தொழிற்பெயர் இரண்டுமே நிரப்புப் பகுதிகளை எடுக்கக்கூடியவை. முதலாம், இரண்டாம், மூன்றாம் என்று சொற்களை வரிசைப்படுத்தும் ஜெஸ்பர்ஸனின் (Jesperson) வரிசைப் படுத்தும் கொள்கையையும் (Theory of Rank) ஒரு நூற்பாவில் காண்கிறோம். சொற்களைப் பெயர், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என வரிசைப்படுத்தியிருப்பது இதனையே சுட்டிக்காட்டுகிறது. தமிழ் ஓர் ஒட்டுநிலைமொழி. தமிழ்ச்சொற்கள் பகுபதங்களே. சில சொற்களை ஒரு குழந்தை கூட வேர்ச்சொல் அல்லது உரிச்சொல் எனவும், திரிபு அல்லது இடைச்சொல் எனவும் பகுத்து விடமுடியும். எல்லோருக்கும் கற் பிக்க வேண்டிய சொல்லியல் இதுதான். பெயருக்கும் வினைக்கும் இடையிலும், உரிச்சொல்லுக்கும் இடைச்சொல்லுக்கும் இடையி லும் உள்ள முக்கியமான வேறுபாட்டை தெய்வச்சிலையார், சேனாவரையர் போன்ற உரையாசிரியர்களின் விளக்கங்கள் இருந்தும் கூட நமது பழமையான இலக்கண ஆசிரியர்கள் முழுமையாக உணரத் தவறிவிட்டனர். வேறு விளக்கம் ஏதும் தேவையின்றி மிகத் தெளிவான விளக்கம் பொருந்திய இவை நமது இளைஞர்களைக் கண்ணைமூடிக்கொண்டு வழிநடத்தும் தலைவர்களான ஆசிரியர்களுக்கு ஒளி வழங்காமல் போயின.

தமிழ்மொழி வரலாற்றின் 'இருண்ட காலங்களில் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் அடக்குமுறையாளர்களாக மாறினர். ஒரு மொழி வழக்கு சரியானதா, இல்லையா என இறுதித் தீர்ப்பு வழங்கும் உயர்நீதிமன்றங்களாகத் தங்களை எண்ணிக் கொண்டார்கள். மனுநீதியை இயற்றிய மனு கூட வழக்குகளைத் தொகுத்து மட்டுமே வழங்கினார் என்பதையும், தாமே விதிமுறைகளை வகுக்கவில்லை என்பதையும் இவர்கள் மறந்தே போனார்கள். தொல்காப்பியர் தம்முடைய ஆழ்ந்த ஆய்வின் பயனாகத் தம் காலத்தில் வழக்கிலிருந்த மொழி வழக்கு விதிகளைத் தொகுத்தும் வகுத்தும் கூறிச் சென்றுள்ளார். ஒரு மொழி தனக்குரிய எழுத்து முறை ஒன்றைப் பெற்று எழுத்து மொழியாக மாறி தனக்கென ஓர் இலக்கணத்தையும் அடைந்த பின்னரே முழுமையடைகிறது எனலாம். ஆனால் நல்வாய்ப்பற்ற நிலையாக இந்த முழுமையே அதனுடைய வளர்ச்சிக்குத் தடையாகவும் அமைந்து விடுகிறது. மொழித்துறை மட்டுமின்றி எல்லாத் துறைகளிலும் எக்காலத்திலும் சுதந்திரத்திற்கும் ஒழுங்குமுறைக்கும் இடையே முடிவற்ற போராட்டம் நடந்துகொண்டே தான் இருக்கிறது. இவ்விரண்டிற்குமிடையே ஒரு சமன்பாடு காணத்தவறினால் அழிவுக்கே கொண்டு செல்லும். இலக்கண ஆசிரியர்களின் பாதிப்பையும் மீறி, சில சமயங்களில் சில மொழிகள் வாழத்தான் செய்கின்றன. ஆங்கில மொழி வரலாற்றில் ஜெஸ்பர்ஸன் கண்ட வளர்ச்சி, இலக்கணம் வகுக்கப்பட்ட பின்னர் ஒரு மொழியில் எப்போதும் காண இயலும் என்று கூறமுடியாது. விதிகளுக்கே முதன்மையான இடமளிக்கும் இலக்கண ஆசிரியர்களின் போக்கு இலக்கணம் குறித்த ஒரு தவறான நோக்கினை வளர்த்து விட்டிருக்கிறது. நிறுவப்பட்ட அறிவியலாக இலக்கணத்தைக் கருதுவது அடிப்படைத் தவறு. முன்னரே விதிக்கப்பட்ட எந்த வரன்முறைக்கும் உட்படாது, விவரித்தல், ஆய்தல், பகுத்தல் ஆகிய பருவங்களில் உள்ள மொழிக்கூறுகள் அடங்கிய அறிவியலே இலக்கணம். இதுவே இலக்கணம் என்பதன் உண்மையான பொருள் என்ற நிலையில், இலக்கண ஆசிரியர்கள் தாங்கள் சரியானது எனக் கருதும் மொழிவழக்குகளை விளக்குவதற்குப் பழைய இலக்கணநூல்களையே சான்றாகக் கொண்டு நிற்கிறார்கள் ; தற்கால அறிஞர்களின் நகைப்புக்கும் ஆளாகிறார்கள்.

மேற்கூறியவற்றால் மாணவர்களின் அறிவு ஒரு மொழியின், ஒரு இலக்கணத்தின் அடிப்படைக் கருத்துகளை அறியும் அறிவியல் தாகத்தைப் பெறாது இலக்கண ஆசிரியர்களின் பயனும் பொருளும் அற்ற கூற்றுகளின் அடக்குமுறை ஆட்சிக்கு உட்பட்ட ஒன்றாக்கப்பட்டது. மாணவர்கள் இலக்கணம் கற்பதில் உள்ள ஆர்வத்தையே இழந்தனர். ஒவ்வொரு இலக்கண விதியும் அல்லது ஒவ்வொரு இலக்கணநூலும் அவ்வக்காலத்தின் தேவைக்கும், வழக்குகளின் தேவைக்கும் ஏற்ப சமுதாயத்தில் தோன்றுபவையே. இது தருக்கவாதமல்ல ; வழிவழியாகத் தொடர்ந்து வரும் ஒரு நடைமுறைத் தத்துவம் தான். இதனை மொழியியல் சிக்கலுக்கு ஒரு தீர்வாகக் கருதி நோக்கினால் வறண்ட எலும்புக் கூடாக இன்று தோற்றம் அளிக்கும். இலக்கணம் தசையும் குருதியும் கொண்ட உயிர் ததும்பும் எழில் வடிவாகக் காட்சியளிக்கும். எடுத்துக்காட்டாக இந்தக் கண்ணோட்டத்தில் நோக்குகையில் வழூவமைதி விதிகள், அதாவது விதிவிலக்காக வழங்கும் மரபுவழித் தொடர்கள் (idiomatic usages) விடுகதைகளை விடுவிப்பதைப் போன்று ஆராய்வதற்குச் சுவை வாய்ந்தவையாக இருப்பதைக் காணலாம். ஓர் எடுத்துக்காட்டினைக் காண்போம். தொலைவில் ஒரு மனித உருவம் தென்படுகிறது; ஆனால் ஆணா, பெண்ணா என்று தெளிவாகத் தெரியவில்லை என்று வைத்துக்கொள்வோம். ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான ஒருசொல் தமிழில் இல்லாத நிலையில் இதனை எப்படித் தெரிவிப்பது என்பது ஒரு சுவையான சிக்கல். 'உருவம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி இச் சிக்கலுக்குத் தீர்வு காண்கிறோம். 'அவன் ஓர் ஆணா, பெண்ணா ?' அல்லது 'அவள் ஓர் ஆணா, பெண்ணா ?, ஆகியவை தமிழில் தவறான வழக்குகள். 'அந்த உருவம் ஆணா, பெண்ணா' என்ற வழக்கு, இலக்கண விதிகளுக்குப் புறம்பானதாக இருப்பினும், மக்களின் வழக்கத்தில் ஒத்துக் கொள்ளப்பட்டதாக அமைந்துவிட்டிருக்கிறது. உண்மையில் ஒரு மொழியை அமைப்பவர்கள் மக்களே. இந்த உணர்வுடனேயே நமது பழைய இலக்கண நூலார் விதிகளை அமைத்துச் சென்றனர். அவர்கள் கூறிச்சென்றுள்ள நூற்பாக்கள் விளங்கிக் கொள்வதற்குக் கடினமானவை. குருகுலங்களில் பயின்ற தங்கள் மாணவர்களுக்கு அவர்கள் கற்பித்த பாடங்களுக்குப் பல்வேறு

உரைகள் இருந்தன. வழுவமைதி விதிகளைப் போன்றே புணர்ச்சி அல்லது சந்தி விதிகளும் முக்கியமான சில ஒலியியல் சிக்கல் களுக்குத் தீர்வு அளிப்பவையாக உள்ளன. இவை பல ஒலியியல் விதிகளின் செயற்பாட்டை விளக்குகின்றன. உடம்படுமெய் இணைப்பு, ஓரினமாக்கம், வேற்றினமாக்கம், கருத்துப் பரிமாற்றத் தொடர்புக்குத் தேவையான கூறுகள், மிகையான கூறுகளின் தவிர்வு ஆகியவையும் இவற்றிற்கு மேலும் இவ்விதிகளில் கூறப் படுகின்றன. நல்வாய்ப்பில்லா நிலையில் இவை அறிவு வேட்கை கொண்ட மாணவர்களுக்கு விளக்கப்படாமலே உள்ளன.

இதயத்தை நோகச் செய்வதாக இன்று உள்ள இலக்கணத்தை ஆன்மாவைத் தட்டி எழுப்பும் கலையாகவும் இலக்கியப் படைப் பினைக் கற்பிக்கும் அறிவியலாகவும் மாற்றி அமைக்க வேண்டியது மிக நீண்ட கால இன்றியமையாத் தேவையாகும். நல்வாய்ப்பாகத் தொல்காப்பியர் பயன்படுத்திய 'செய்யுள்' என்னும் சொல் உரை நடை அல்லது கவிதை வடிவில் உள்ள இலக்கியப் படைப்பையே சுட்டிக்காட்டுகிறது. இவ்விதம் தொல்காப்பியர் செய்யுள் நடைக்கும் உரைநடைக்கும் இடையே உள்ள உண்மையான வேற்றுமை குறித்து வினாவெழுப்பி அவிழ்க்கக் கடினமான இந்தச் சிக்கலை மிகத் துணிவுடனும் சுருக்கமான முறையிலும் தீர்த்துச் சென்றுள்ளார் யாப்பிலக்கண விதிகளைக் காட்டிலும் செய்யுள் இலயத்திற்கே அவர் இன்றியமையாமை தந்து செல்கிறார். நல்வாய்ப்பின்மை யால் நம்முடைய இலக்கண ஆசிரியர்கள் இந்த உண்மையை இன்னும் அறிந்து கொள்ளவில்லை. செவிவழி ஒலிகளைக் கேட்டறி வதிலும் ஒலிகளை உண்டாக்குவதிலும் போதிய அளவு பயிற்சி கொடுக்கப் பட்டால் குழந்தைகள் உச்சரிப்பு, ஒலி ஏற்ற இறக்கம், இசை நயம் ஆகிய பல்வேறு நுணுக்கங்களை மகிழ்ச்சியோடு உணர்ந்து கொள்வார்கள். ஆறாம் வகுப்பில் பயிலும் சிறுவர் சிறுமியர் தாங்கள் அறிந்த திரைப்படப் பாடல்களின் இசைகளில் பல்வேறு செய்திகளைக் கவிதைகளாகப் புனைந்து இசைப்பதை நான் கண்டிருக்கிறேன். இந்தத் திறனை அவர்களிடம் உண்டா க்கும் திரைப்படங்களுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். இத் தகைய திறனை நம்முடைய பள்ளிகளில் வளர்ப்பதாக நம்மால் முழுமனத்துடன் சொல்ல முடியுமா? ஒருகாலத்தில் கவிதைகள்

எழுதுவது வீணானவேலை என்று பலராலும் கண்டிக்கப்பட்டு வந்தது. போலியான இலக்கணங்கள் கற்பிக்கப்பட்டு வந்ததன் விளைவே இந்தக் கண்டனங்கள்.

தொல்காப்பியர் இலக்கியப் படைப்புகளை அக அனுபவம், புற அனுபவம் (அகம், புறம்) என இரண்டாகப் பகுக்கின்றார். அறிவுபூர்வமானது (Subjective), பயன்பாடு பூர்வமானது (Objective) எனப் பிரிப்பதைக் காட்டிலும் அகம், புறம் எனப் பகுப்பது மிக நுணுக்கமான பகுப்பு. இவ்விரு பகுப்புகளின் பல்வேறு பிரிவுகள் கொடுக்கப்பட்டிருப்பது எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குவதற்காகவே. இந்த அடிப்படை நோக்கத்தை மறந்து விட்டு, பிற்காலத் தமிழர்கள் இந்த எடுத்துக்காட்டுக்களையே செய்யுள் வடிவங்கள் என்று தொகுத்து இதற்கு மாறானவை செய்யுள்கள் அல்ல என்று கொண்டனர்; தன்னிச்சையாகப் புதிய வடிவங்களில் செய்யுள் இயற்றுவதையும், எடுத்துக்காட்டுக்கள் தருவதையும் மறுத்தனர். இதன் விளைவாக உயிரோட்டம் நிறைந்து பொலிய வேண்டிய செய்யுள் இலக்கியம் பழமையான கட்டுத்திட்ட விதிகளுக்கு உட்படுத்தப்பட்டு உயிர்க்களை இழந்து நிற்கிறது.

உணர்வுளே (மெய்ப்பாடு அல்லது இரசம்) செய்யுள் இலக்கியத்தின் உயிர்நாடி. தொல்காப்பியர் எட்டுவகை உணர்வுகளைக் கூறிச் செல்கிறார். இவை அடிமனத்தில் உறைந்து கிடக்கும் உணர்வுகளை விடுவித்து செய்யுளில் அடக்குபவை. தொல்காப்பியர் சொல் அலங்கார உத்திகளைப் புற இணைப்புகளாகவோ, வெறும் அணி அலங்காரங்களாகவோ கருதாமல் செய்யுள் இலக்கியத்தின் உள் அமைப்பிலேயே உடன் அமைந்த ஒன்றாகக் கருதுகிறார். உணர்வுகளை வெளிப்படுத்தும் முறைகளே-இலக்கியக் கருவின் வடிவமே இந்த உத்திகள்தாம். தொல்காப்பியர் இந்த உத்திகளின் எண்ணிக்கையை வரையறுத்துக் கூறிச் செல்லவில்லை. எண்ணிக்கைகளுக்குள் வரையறுக்கப்பட்ட ஒன்று அடிப்படையான உண்மையை வெளிப்படுத்தவோ, செய்யுள் வடிவங்களின் இடையறாத ஆற்றோட்டமான போக்கை முழுமையாகத் தெரிவிக்கவோ இயலாது. பல்வேறு சொல் உத்திகளும் உவமை அணியின் பல்வேறு வகைப்பாடுகளே என்ற அப்பைய தீட்சிதர் கூற்றை அவருக்கு

முன்பே தொல்காப்பியர் கூறிச் சென்றிருக்கிறார். உணர்வு களை அடுத்து, கவி கற்பனையில் உருவாகும் இலக்கியக் கரு செய்யுள் இலக்கியத்தின் உயிர்மூச்சாக விளங்குகிறது. தொல்காப் பியர் கூறிச்சென்ற இந்த விலைமதிப்பு மிக்க கருத்தையும் பின்வந்த தலைமுறையினர் மறந்தனர். இலக்கியப்படைப்பின் அடிப்படைத் தத்துவங்களைக் கண்டு ஒரு சில வரிகளில் தொல்காப்பியர் அவற்றைக் கூறிச் சென்றுள்ள விதம் உண்மையில் மிகவும் வியக் கத்தக்கது. இந்த உண்மைகள்தாம் தகுந்த முறையில் நமது குழந்தைகளின் மனத்தில் பதியச்செய்யவேண்டியவை. 'படுதிரை வையம்' (948) என்ற தொல்காப்பியரின் கூற்று தமிழகத்தை மட்டுமே குறிக்கிறது. தொல்காப்பியம் தமிழுக்கு மட்டுமே உரியது என்று குறுகிய நோக்கம் கொண்ட பிற்காலத் தமிழர்கள் விளக் குவதற்கு முயன்று வந்தாலும், அவர் இந்தத் தொடரின் வழியாக தம்முடைய கருத்துக்கள் உலகம் முழுமைக்கும் ஏற்புடையவை என்றே அறிவித்துச் செல்கிறார். அவர் கூறிச் சென்ற உண்மை களைப் புறக்கணித்ததனால் இந்த நாடு அடைந்துள்ள இழப்பை அளவிட்டுக் கூற முடியாது. தமிழ்நாட்டின் கல்விக்கூடங்களில், இலக்கியப்படைப்பின் அடிப்படை உண்மைகளை உணர மறுக்கும் நிலையில் தமிழகத்தின் எதிர்காலம் நம்பிக்கை தருவதாக இருக்க இயலாது. தமிழ் எழுத்தாளர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் அகன்று கொண்டே போகும் பிளவை இப்போதே, இந்தக் கணமே இணைக்காவிட்டால், பின் எப்போது இணைக்கப் போகிறோம்?

உருசியப் புரட்சிக்குப் பின்னர் ஒரு புதிய கருத்து பரவலாகத் தோன்றியுள்ளது. திட்டமிடுதல் இயற்கையான நடைமுறைப் போக்கைப் பாதிப்பதாகும் என்ற எண்ணம் மறைந்து ஒவ்வொரு நாட்டிலும் திட்டங்கள் அமைத்தல் என்னும் கொள்கை வேரூன்றி யிருக்கக் காண்கிறோம். திட்டமிடுதல் தேவையற்றவற்றை அகற்றி இயற்கையான வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. இந்தத் திட்ட மிடும் கொள்கை தன்னை அறியாமலே மொழித் துறையிலும் செயல்படத் துவங்கியுள்ளது. மொழியியல் அறிஞர்கள் ஓர் உலகப் பொது மொழியைக் காண எப்போதும் திட்டமிட்டு வந்துள்ளனர். அடிப்படை ஆங்கிலக் கல்வி இந்தத் திட்டதின் செயல்பாட்டையே குறிக்கிறது. நம்முடைய பாடநூல்களும் இந்த முயற்சியையே

தெரிவிக்கின்றன அல்லவா? நல்வாய்ப்பின்மையால் பெரும்பாலோர் இன்னும் இதனை அறிந்துகொள்ள வில்லை. தெருவோடு போகும் பாமர மனிதன் படிக்கும் தமிழ்ச் செய்தி இதழ்கள் கூட 5000 சொற்களுக்கு மேல் கொண்டிருக்கும்போது, குழந்தைப் பருவத்திலிருந்து தொடக்கக்கல்விக்கூடத்தின் இறுதி வகுப்பு வரை முறையாகப் பயின்றும் 1000 அல்லது இரண்டாயிரம் சொற்களுக்கு மேல் ஒரு குழந்தை கற்றுக்கொள்வதில்லை என்றால் இந்தப் பாடநூல்களின் பயன்தான் என்ன? வாழ்வு நடத்தும் திறனைப் பெறாது, குறைந்த அளவு செய்தி இதழ்கள் படிக்கும் திறனை யாவது பெறாது இத்தகையக் கல்விக் கூடங்களில் குழந்தைகள் ஆண்டுகளைக் கழிப்பது காலத்தை வீணாக்குவதாகு மல்லவா? இதனைப் போக்க திட்டமிடும் வழி ஏதும் இல்லையா?

ஆங்கிலமொழிக்கு தாண்டைக் (Thorndike) தாயாரித்ததைப் போன்ற சொல்லடைவு தமிழ்மொழிக்கு இன்னும் தயாரிக்கப்பட வில்லை. வளரும் குழந்தைகளின் பல்வேறு உடற் பருவங்களுக் கேற்ப அவர்களுக்கு உண்டாகும் மொழியியல் சிக்கல்களையும், அந்தந்தப் பருவங்களில் அவர்கள் செய்யும் பிழைகளையும் இது வரை யாரும் முறையாகவும் அறிவியல் நோக்கிலும் ஆராய்ச்சி செய்யவும் இல்லை. இவ்விதம் செய்தால சாதாரணமாக மொழி வழக்கில் ஏற்படும் தவறுகளைத் தவிர்க்கும் வகையில் ஒரு பாட முறையைத் திட்டமிடுதல் கடினமல்ல. பேச்சு மொழியில் ஒரு சொல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படும் எண்ணிக்கை, மொழியில் அந்தச் சொல்லின் நிலைத்த தன்மை, சொல்லின் இன்றியமையாமை, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு மொழிக்கும் சொல்லடைவு தயாரிக்கப்பட வேண்டியதன் தேவையைத் திரு. பாமர் அவர்கள் வலியுறுத்துகிறார். தற்காலத்தில் கூறப் படுவது போன்று இலக்கணம் என்பது நேரடியாகக் கற்பிக்கப்பட வேண்டியது அன்று, இதற்கு மாறாக இலக்கண விதிகள் மனத்தின் அடித்தளத்தில் வடிவெடுக்கப்பட வேண்டியவை. இவ்விதம் மனத்தில் பதிந்துவிட்டதன் விளைவாகவும் மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் விரிவான அளவில் படிக்கவும் பேசவும் செய்வதனாலுமே தடுமாற்றமற்ற பேச்சும் எழுத்தும் அடையப்பட வேண்டியவை என்று ஒத்துக்கொள்ளப்பட்டு விட்டால் இலக்கணக் கல்வியில் மொழித்திட்டமிடுதல் மிக அவசியமாகிறது.

சொல்லடைவு ஒரு மொழியின் வரலாற்றில் காலத்திற்குக் காலம் மாறுதலடைகிறது. தனி மனிதர்களின் வாழ்விலும் வயது கூடக் கூட சொல்லடைவிலுள்ள சொற்களும் கூடுகின்றன. உளவியல் சோதனைகள் நிறைந்த தற்காலத்தில் இந்த உண்மையை வலியுறுத்திக் கூறத் தேவையில்லை. எந்த ஒருசெய்தியின் உட்பொருளையும் அறியும் உண்மையான ஆற்றல் கைவரப்பெற்ற தொல்காப்பியர் தம்முடைய நூலில் உரிச்சொல் என்னும் அதிகாரத்தில் ஒரு சில அரிய கருத்துக்களை எடுத்துரைக்கிறார். ஒரு சொல்லை மற்றொருசொல்லாலும், அந்தச் சொல்லை மூன்றாவதாக ஒரு சொல்லாலும் இவ்விதமே மேலும் மேலும் விளக்கிக் கொண்டே போனால் அதற்கு ஒரு முடிவு இருக்காது என்று விளக்குகிறார் ('பொருட்குப் பொருள் தெரியின் அது வரம் பின்றே' சூத்திரம்-847). இந்தப் பயனற்ற முறையை நாம் கடைப் பிடிக்க வேண்டிய அவசியமில்லை. மேலைநாட்டு அறிஞரான பாமர் ஒரு சொல்லின் பொருளைத் தெரிவிப்பதற்கு மொழி பெயர்ப்பு, வரையறுத்துக் கூறும் விளக்கம், சூழல் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறார். தொல்காப்பியரும் இதனையே ஒரு சொல்லின் பொருளை வேறு வழிகளில் உணர்த்த முடியுமானால் எந்த மாற்றமுமின்றி அந்தப் பொருளை அறிவுறுத்த முடியும் 'பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்' சூத்திரம் 875) எனக்கூறிச் செல்கிறார். மேலும் அவர் இவ்விதம் கற்பித்தலுக்கும் விளக்குவதற்கும் ஓர் எல்லை, மாணவர்களின் அனுபவ எல்லைக்குத் தக உண்டாகும் திறனின் எல்லை இருக்கிறது ('உணர்ச்சி வாயில் உணர்வோர் வளத்தே' சூத்திரம்-876) எனவும் கூறிச் செல்கிறார். ஒரு குறிப்பிட்ட பருவத்தை அடைந்த பிறகே சில கருத்துக்களையும் கதைகளையும் புரிந்துகொள்ள முடியும் என்று உளவியல் சோதனைகள் காட்டுகின்றன. குழந்தையின் உளவியல் வளர்ச்சியை விரைவுபடுத்துவது அபாயம் என்று கூற முடியாவிட்டாலும் அறிவுடைமை என்று கூற முடியாது. ஒரு நான்கு வயதுக்குழந்தைக்கு எழுவாய், செயப்படுபொருள் போன்றவற்றைப் புரிந்துகொள்ளச் செய்வது இயலாத காரியம். நம்முடைய பாடநூல்கள் இந்த முக்கியமான உண்மையைக் கவனத்தில் கொண்டுள்ளனவா?

தமிழ்நாட்டுக் குழந்தைகளின் இலக்கண அறிவு வளர்ச்சியை ஆராய்வதற்கு இதுவரை யாரும் எவ்வித முயற்சியும் செய்ய வில்லை. ஆனால் ஏனைய நாடுகள் நமக்கு வழி காண்பிக்கின் றன. அயோவா குழந்தைகள் நல ஆய்வு நிறுவனம் மொழிவளர்ச் சியில் காணப்படும் படிப்படியான வளர்ச்சி நிலைகளை விளக்கி ஒரு குறிப்புத் தந்துள்ளது (Little, N. P. and William F. M. An Analytical Scale of Language Achievement, University of Iowa Studies in Child Welfare, 1937, 13 No. 2: 88-94).

குழந்தை

1. ஒரு இலக்கின்றி ஒலியெழுப்புதல் - பொருளற்ற ஒலிகள்

2. மற்றவர்கள் பேசுவதைத் தலையைத் திருப்பிப் பார்த்து ஒலியெழுப்பும் முறையைக் கவனித்தல்

3. ஒரு இலக்கில்லாமல் ஒலியெழுப்புவதன் மூலம் ஒரு மெய் யெழுத்தும் ஓர் உயிரெழுத்தும் அடங்கிய அசைகளைக் கூறல்

4. மற்றவர்கள் பேசுவதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஒலி யெழுப்புதல்

5. பெரியவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக விடைபெறும் சமயத்தில் வற்புறுத்தினால் கையாட்டி விடை தரல்

6. அசைகளின் இறுதி மெய்யெழுத்தை உச்சரித்தல்

7. பொருளைக் குறிக்கும் ஓர் ஒலிக்குறிப்பைப் பயன் படுத்துதல்

8. மற்றவர்கள் பேச்சில் காணும் ஒலி ஏற்ற இறக்கத்தைக் கவனித்து அவ்விதமே செய்தல்

9. பொருள்களைக் குறிக்கும் ஐந்து ஒலிக்குறிப்புகளைப் பயன்படுத்துதல்

10. பொருள்களைக் குறிக்கும் பத்து ஒலிக்குறிப்புகளைப் பயன்படுத்துதல்

11. தான் அறியாத மனிதரும் புரிந்துகொள்ளும் வகையில் ஒரு பொருளைக் குறிக்க இரண்டு சொற்கள் அல்லது ஒலிக்குறிப்புகளைக் கூட்டிச் சொல்லுதல்

12. ஆறு சொற்களைச் சரியாகப் பயன்படுத்துதல் (உச்சரிப்பு தெளிவாக இருக்கவேண்டிய அவசியமில்லை; ஆனால் குழந்தைக்குத் தெரியாத மனிதரும் புரிந்துகொள்ளும் வகையில் இருத்தல் அவசியம்)

13. எழுவாய் - பயனிலை, செயப்படுபொருள் – பயனிலைத் தொடர்களைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டு - கார் ஓட்டு, அதை அடி போன்றவை.

14. பெயர், வினை அல்லது வினை, செயப்படுபொருள் அமைப்புக்களைத் திருத்தமாகப் பயன்படுத்துதல்

15. பிரதிப்பெயர்களைப் பயன்படுத்துதல்

16. வேற்றுமை உருபுகளைப் பயன்படுத்துதல். 'டவுன் போ' என்ற தொடருக்குப் பதில், டவுனுக்குப் போ; 'கார் போ' என்பதற்குப் பதில், காரில் போ

17. பெயர்ச் சொற்களுக்குப் பெயரடைகளைப் பயன்படுத்துதல்

18. வினைச் சொற்களுக்கு வினையடைகளைப் பயன் படுத்துதல்

19. துணைவினைகள் பயன்படுத்தல்

20. ஒழுங்கான பன்மை விகுதிகள், பெயர்ச் சொற்களில் பன்மை பயன்படுத்தல்

21. நிகழ்காலத்தைத் தவிர இதர காலங்களை ஒழுங்கின்றிப் பயன்படுத்தல்.

22. கூட்டுப்பெயர்த் தொடர்களைப் பயன்படுத்தல்

23. இறந்தகாலத்தை ஒழுங்காகப் பயன்படுத்தல்

24. கூட்டு வாக்கியங்களைப் பயன்படுத்தல்

25. துணைவாக்கியங்களைத் திருத்தமாகப் பயன்படுத்திக் கலப்பு வாக்கியங்களைப் பயன்படுத்தல்

26. எதிர்காலத்தை ஒழுங்காகப் பயன்படுத்தல்

27. ஒப்பீட்டுப் பெயரடைக்ளைச் சரியாகப் பயன்படுத்தல்

28. சிறப்பான பெயரடை (superlative) களைப் பயன் படுத்துதல்

29. ஒழுங்கற்ற பன்மை விகுதிகள் கொண்ட பெயர்ச் சொற்களில் பன்மையைப் பயன்படுத்தல்

30. கலப்புக் கூட்டுவாக்கியங்களைப் பயன்படுத்தல்

31. சிறப்பான வினையடைகளைப் பயன்படுத்தல்

32. முற்றுப்பெற்ற இறந்தகாலத்தைச் சரியாகப் பயன்படுத்தல்

33. முற்றுப்பெற்ற இறப்பில்காலத்தைச் சரியாகப் பயன் படுத்தல்

இந்தப் பட்டியலின் உதவியோடு தமிழ்நாட்டுக் குழந்தைகளின் வளர்ச்சியைக் கவனித்துத் தமிழ்நாட்டுக் குழந்தைகளின் மொழி வளர்ச்சியில் வெவ்வேறு கட்டங்களைப் பட்டியலிடவேண்டும். இப் பட்டியலைக் குழந்தைகளின் வயது வளர்ச்சியோடு ஒப்பிட்ட பிறகே அவர்களின் கல்வி அல்லது பேச்சுப் பயிற்சி பற்றித் திட்டம் தயாரித்தல் வேண்டும். இத்தகைய ஒரு திட்டத்தின் அவசியத்தைக் குறித்து மேலும் சொல்லவேண்டிய அவசியமில்லை. நல்வாய்ப்பின்மையால் நம் நாட்டில் இத்தகைய முயற்சிகள் ஏதும் செய்யப்படவில்லை. ஆகையால் ஆசிரியர்கள் நூற்பாக்களின் அடிப்படையில் இலக்கணம் கற்பிக்கத் தொடங்கும்போது, அது

குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை மீறிய ஒன்றாகிவிடுகிறது; குழந்தைகளும் இலக்கணத்தையும் அதனைக் கற்பிக்கும் ஆசிரியரையுமே வெறுக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

தற்காலத்தில் சொல்லடைவு மிக அதிகமான அளவு சொற்களைக் கொண்டுள்ளது. இதற்கு நாம் நம்முடைய தற்கால நவீன சாதனங்களின் வளர்ச்சிக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். நம்முடைய தமிழ் போன்ற பழமையான மொழிகள் இன்றைய அறிவியல், இயந்திர யுகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் தகுந்த மொழியியல் திட்டம் வகுத்தபின்னரே அது சாத்தியமாகும். எந்த எந்தத் துறைகளில் தமிழ்ச்சொற்கள் பயன்படுத்தப்படவேண்டும், பயன்படுத்தப்படவேண்டிய கலைச் சொற்கள் எவை, இந்தப் புதிய கலைச்சொற்களை உருவாக்குவதில் பின்பற்றப்படவேண்டிய விதிகள் எவை என்பனவற்றைக் குறித்து ஒரு திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக, நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழியே கல்வி மொழியாகச் செயல்படினும் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதில் ஓர் ஒழுங்குமுறை இன்னும் தோன்றவில்லை. சமஸ்கிருதவாதிகள், தூய தமிழ்வாதிகள் இவர்களிடையே உள்ள வேறுபாடுகளின் காரணமாக நமது மாணவர்கள் படும் துன்பத்தில் நம்முடைய இன்றையக் கல்வி முயற்சிகளின் துன்பகரமான பிரதிபலிப்பைக் காணலாம். தமிழ்மொழியின் சொல்லியல் அமைப்பு மிகத் தெளிவானது. இதன் துணை கொண்டு புத்திசாலியான எந்தத் தமிழ் மாணவனும் அறிவியல் கலைச்சொற்களை உருவாக்கமுடியும். ஆகவே கருத்துக்களை வெளிப்படுத்தும் வெவ்வேறு முறைகளையும் மாணவனுக்குத் தெரிவிக்கும் வகையில் கல்விமுறை திட்டமிடப்பட வேண்டும்.

இன்றைய மொழியியல் வளர்ச்சியின் பின்னணியில் நோக்கும் போது,

''கடிசொல் இல்லை காலத்துப்படினே'' (935) (கால ஓட்டத்தில் வழக்கில் வந்த எந்தச் சொல்லும் புறக்கணிக்கத் தக்கதல்ல) என்ற தொல்காப்பியச் சூத்திரமும்,

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே''

(பழமையான வழக்கு மறைதலும், புதிய வழக்கு மொழியில் புகுதலும் காலத்தின் செயல்கள்; இதில் பிழை ஏதும் இல்லை).

''பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்''

(பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்ற ஆறுவகைகளில் பிரிக்கப்படின் சொற்கள் அனைத்தும் சிறப்பான வகையில் ஆராயப்பட முடியும்)

என்னும் பவணந்தியின் நூற்பாக்களும் இலக்கண ஆசிரியர்கள் கட்டிவிட்ட கல்லறைகளில் புதையுண்டுபோன எலும்புக்கூடுகளாக இல்லாமல், சமுதாய இயந்திரத்தை அதன் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செலுத்துவதற்குத் தேவையான இலட்சக்கணக்கான கிலோவாட் மனோசக்தியைத் தரக்கூடிய மின்சக்தியை உலகனைத்துக்கும் வழங்கும் மின்பொறிகளாகவே காட்சி தருகின்றன. இந்த அணுயுகத்தில் (சின்னஞ்சிறு அணுவில் மறைந்துள்ள சக்தியை உணர்ந்துள்ள யுகத்தில்) சொற்களில் புதைந்து கிடக்கும் சக்தியை நாம் மறந்துபோகக்கூடாது. ஒரு குற்றமும் அற்ற ஓரசைச்சொல் கூட (எடுத்துக்காட்டு - ஆங்கிலத்தில் 'ஆஸ்' = கழுதை) வசைச்சொல்லாகப் பயன்படுத்தப்படும்போது பேசுபவரிடத்திலும், பேசப்படுபவரிடத்திலும் சொல்லப்பட்ட நொடியிலேயே உணர்ச்சி அலைகளை எழுப்பி விடுகிறது. இந்தக் கண்கொண்டு உணர்ந்து சுவைக்கையில் மொழிவரலாறு முழுதும் மறைந்திருக்கும் அற்புதங்கள் நிறைந்தவையாக இருப்பதைக் காணலாம். மொழியை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தால் மொழி மறைவுகளைப் பகுத்தறிவின் அடிப்படையில் விளக்கி மொழியின் அடிப்படை உண்மைகளை வெளிக்கொணர இயலும். அட்க்கு முறை யுகம் முடிவுற்றுவிட்டதாக நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம். வலியற்ற சிறிய சோளக்கொல்லைப் பொம்மையை

ஒத்த ஒரு ஹிட்லரின் கர்ஜனை பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக உலகம் முழுதும் எதிரொலித்து மனித சமுதாயத்தின், அதன் நாகரிகத்தின அடிப்படையையே ஆட்டங்காணச் செய்தது. பயன்பாட்டு நோக்கில் பார்க்கும்போதும் குடியரசு யுகத்தில் பேச்சுமொழியின் ஆய்வு இன்றியமையாதது. தொல்காப்பியம் போன்ற பழமையான இலக்கணங்கள் உச்சரிப்பு குறித்த ஒலியியல் விதிகளை வகுத்துச் சென்றுள்ளபோதிலும் பேச்சுச் சிறப்பையும் வலியுறுத்துகின்றன. இருப்பினும் ''இலக்கணம் செய்ததெல்லாம் பேச்சுமொழியின் வளர்ச்சியைத் தடை செய்ததுதான்'' என்று இலக்கணம் உலகின் முன்னர்க் குற்றம் சாட்டப்பட்டு நிற்கிறது.

நல்வாய்ப்பின்மையால் உயிரோட்டமும் விளக்கமும் நிரம்பிய இந்தப் பழமையான இலக்கண நூல்களைக் கற்பது என்பது, பொருளற்ற கல்வி என்னும் பாலைவனத்தில் செய்யக்கூடிய வீர தீரப் பயணம் என்பதாக மாற்றப்பட்டிருக்கிறது. இத்தகைய பயணம் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிலராலேயே செய்யக்கூடியது. பள்ளி ஆசிரியர்கள், தேர்வுப் பரிசோதகர்கள் ஆகியோர் கைக ளில் இலக்கியக் கன்னி விழுந்தது வினைப்பயனே; அவர்கள் அவள் அழகைவிட அவள் கொண்டுவரக்கூடிய சீதனத்தையே மிகவும் மதிக்கிறார்கள். இலக்கியப் பாடத்தின் உடனடியான பயன் அதை அனுபவித்து ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் தொடர்புதான் என்று கூறலாம். நாளடைவில் ஆழமான தொடர்பு களும் ஏற்படலாம். ஆனால் இதற்கு நாம் அன்பு, விருப்பம் ஆகிய பாதைகளில் பயணம் செய்ய வேண்டும். ''இலக்கியம், கற்கும் பாடமாக இருக்கலாம்; ஆனால் அதுவே நாம் முதன்மை யாக நேசிக்கும் பொருளாக இருத்தல் அவசியம்'' என்று சாம்ஸன் கூறியதில் வியப்பேதுமில்லை. காலம் சென்ற தமிழ்ப் பெரியார் டி. வி. உலகநாத முதலியார் நினைவுமலரில் தான் எழுதிய கட்டுரை ஒன்றில் செல்வி டி. இ. இராஜேஸ்வரி தொல்காப்பியத்தில் காணும் நகைச்சுவையை எடுத்துக்காட்டியுள் ளார். பழமையான இலக்கணத்தின் இந்தப் பகுதி மிக அரிதாகவே வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. பின்னர் வந்த நம்முடைய இலக்கண நூலார்தான் உண்மையில் இயந்திரயுகத்தின் முன்னோ டிகள்; இவர்கள் இயந்திரங்கள் பொருள்களை அரைத்துக் கூழாக்

குவது போல் மானிட அறிவுகளையும் வெற்றிகரமாக அரைத்துச் சமன் தட்டிவிட்டார்கள். அவர்களுடைய அடக்குமுறைப் போக்கின் காரணமாக அவர்கள் கூற்றுகளை மாணவர்கள் அப்படியே அடிமைகளாக ஒத்துக்கொள்ள நேர்ந்தது. உரையாசிரியர்களின் ஆவிகளும், இலக்கண ஆசிரியர்களின் சூனியவித்தைகளும் வகுப்பறைகளை ஆக்கிரமித்தன. இந்நிலையில் நம் இந்தியநாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டதில் என்ன வியப்பு? புனிதமான வகுப்பறைகளிலேயே கருத்துச் சுதந்திரம் இல்லையென்றால் மற்ற இடங்களில் எப்படிச் சுதத்திரம் செழித்தோங்க முடியும்? "சுயமான சிந்தனைக் கருத்துகள் அற்ற கல்வி பயனற்றது மட்டுமல்ல; மிகவும் தீங்கானதுமாகும்". இப்போதும் கூட நம்முடைய கல்லூரிகளில் வளமான எந்த மூளையும் செரித்துக் கொள்ள முடியாத வகையில் பலவந்தமாகப் புகட்டல் நடந்து கொண்டுதான் இருக்கிறது. செரிக்கப்பட்டாலும், அதிகப்படியான கொழுப்புச்சத்து உடலின் எடையை அதிகரித்து கட்டுக்கோப்பான அழகைக் குலைத்து இறுதியில் நோயிலும் அழிவிலும் கொண்டுவிடுவது போன்று, இத்தகைய கல்வியறிவும் மனிதமூளையின் சீரமைப்பைக் குலைத்து அழிவில் கொண்டுவிடுகின்றது. கிரஹாம் வாலரின் 'ஆர்ட் ஆஃப் தாட்' (Art of Thought) என்னும் நூலைப் படித்தவர்கள் மேற்கூறிய பழமையான முறையில் பயின்ற மாணவர்கள் முதல்தரமானவர்களாயினும் கூட அவர்களுடைய சுய அறிவுத்திறனில் நம்பிக்கையிழந்து விடுவர். சுயமான சிந்தனை செழித்தோங்கும் காலத்தில் தான் சுதந்திரமும் செழித்தோங்கும். சுதந்திரமான ஆராய்ச்சிகளேநமது கல்வித்துறைகளுக்கு உயிரளிக்கும். கருத்துச் சுதந்திரமே எல்லா நாகரிகத்திற்கும் அடிப்படையும் சிகரமும் ஆகும்.

இதுவரை, கீழ்வகுப்புகளில் இலக்கணம் கற்பித்தலைக் குறித்துக் கலந்தாயாமல் கலைக்கல்லூரிகளில் இலக்கணம் கற்பித்தலைப் பற்றியே விளக்கிக்கூற முயற்சி செய்யப்பட்டது. இங்குதான் எதிர்கால ஆசிரியர்கள் உருவாக்கப்படுகிறார்கள். உருவாகும் நிலையிலேயே சீர்குலைக்கப்பட்டால் வளர்ச்சியை எதிர்பார்க்கமுடியாது. நேரான போக்கு வளர்க்கப்படவேண்டும்; தகுந்த அணுகுமுறை

ஊக்குவிக்கப்படவேண்டும். கல்வி என்பதை ஆசிரியர், மாணவன், பாடம் ஆகிய மூன்று கோணங்களைக் கொண்ட ஒரு முக்கோணம் எனக் கொள்ளலாம். இந்த முக்கோணத்தில் ஆசிரியரும் பாடமும் ஒரு பக்கத்திலும் ஆசிரியரும் மாணவனும் மற்றொரு பக்கத்திலும் இணைக்கப்பட்டிருக்கின்றனர். மாணவனுக்கும் பாடத்திற்கும் இடையில் உள்ள ஆசிரியரின் திறமையின் விளைவாக மாணவனுக்கும் பாடத்திற்கும் இடையே ஓர் இணைப்பை வளர்ப்பத கல்வியின் நோக்கம். ஆகையால் மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்குவதும் அழிப்பதும் ஆசிரியர் கையில்தான் உள்ளது என்பது தெளிவு. அவரே வழிகாட்டியும் நண்பரும் ஆவார். குழந்தைகள் கல்வியின் நிமித்தம் தங்கள் வாழ்வையே அர்ப்பணித்த மாண்டிசோரி போன்ற அறிஞர்களைத் தந்ததற்காக மேலைநாடுகள் பெருமைப்பட முடியும். ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக மேலை நாட்டவர் இந்தத் துறையில் மிகுதியான பணிகள் செய்திருந்த போதிலும் 'எதிர்கால நாகரிகம் சிறந்த கல்விக் கூடங்களையே சார்ந்துள்ளது' என்று அவர்கள் விட்டுச் சென்ற செய்தியின் இன்றியமையாமையை உலகம் இன்னும் முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. நம்முடைய இன்றைய நாகரிக உலகு தன்னுடைய கல்விமுறையை முழுமையாக்குவதற்குப் பதிலாக அணுஆயுத வளர்ச்சியை முழுமையாக்குவதில் தன் சக்தியை வீணாக்கிக் கொண்டிருக்கிறது.

தொடக்கப் பாடத்திட்டத்தில் வளர்ச்சி கண்டிருப்பினும் கூட இந்தியாவில் கல்வி நிலைமை மிகவும் வருத்தம் தரக்கூடிய வகையிலேயே உள்ளது. இங்கு கல்விப்பணிக்கு அதற்குரிய மதிப்பு தரப்படுவதில்லை. கல்விப்பணியில் ஈடுபடுபவரும் மிகச் சிலரே. கீழ்வகுப்புகளைப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் கண்மூடிச் சிறுவர்களை வழிநடத்தும் கண்மூடி ஆசிரியர்களாவே உள்ளனர். தமிழ்மொழி, இலக்கியம், நாடு, தமிழர் நாகரிகம் ஆகியவற்றின் மீது ஆழ்ந்த பற்றுகொண்டு பரந்த நோக்குடனும் அன்புநோக்குடனும் பணியாற்றும் ஒரு தொண்டர் கூட்டமே இப்போது நமது நாட்டுக்குத் தேவை. மனிதர்களையும் அவர்கள் ஆற்றல் திறனையும் காட்டிலும் கல்லையும் சுண்ணாம்பையும் கொண்டு கட்டப்பட்ட கட்டிடங்களையும், கரும்பலகைகளையும்

புத்தகங்களையும் அதிகமாக நம்பும் ஒரு வருந்தத்தக்க நிலையில் நாம் இன்று இருக்கிறோம். இந்த உயிரற்ற பொருள்களுக்கு உயிர்தரவேண்டியவர்கள் ஆசிரியர்களே. தங்கள் ஆற்றல்திறனால் இந்தக் கற்களும் மரப்பொருள்களும் அவர்கள் கற்றுத் தரும் பாடல்களை இசைக்கவும், எதிர்கால மன்னர்களான சிறுவர் சிறுமியர் அதற்கேற்ப ஆடவும் செய்யவேண்டும். இது அவர்கள் பொறுப்பே. பிறர் உணர்வுகளைக் கற்பனை செய்யும் கற்பனைத் திறனும், நம்பிக்கையும் ஒரு ஆசிரியருக்கு மிகவும் தேவை. ஆர்வமும் உற்சாகமும் எவரையும் கவரக்கூடியவை. எந்த ஒரு பாடத்திலும் ஆர்வத்தை ஊட்டக்கூடியவர்கள் ஆசிரியர்களே. ''அன்னியமொழியில் இயற்கையான-சரளமான பேச்சுத்திறனும், விரைவில் புரிந்துகொள்ளும் திறமையும் வாழ்வோடு தொடர்பு டைய எல்லாவற்றிலும் ஆர்வமும் ஓர் ஆசிரியருக்கு மிகவும் தேவை''— டாக்டர் மன்ச். பாமர் (Palmer). ஒரு மொழி கற்பிக்கும் ஆசிரியனின் தகுதிகளையும் கடமைகளையும் கீழ்க் கண்டவண்ணம் விவரிக்கிறார். ''அந்நியமொழி அறிவு, மாண வனின் தாய்மொழி அறிவு, தகுதியான பாடங்களைத் தேர்ந் தெடுத்துப் பாடத்திட்டத்தை வகுக்கும் திறன், மாணவர்களுக்குப் பாடங்களைப் புகட்டும் திறமை ஆகியவை ஒரு சிறந்த ஆசிரியனின் முதன்மையான தகுதிகள். தகுந்த விளக்கங்கள் தந்து கற்பிப் பதும் ஆசிரியரின் மற்றொரு முக்கியமான பணி. கற்பிக்கும் மொழி மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறன்களை வளர்த்து ஊக்குவிப்பதாக இருத்தல் அவசியம். ஆசிரியனின் இதர பணிகள்: (அ) மாணவர்களை வேலைசெய்யத் தூண்டுதல் (ஆ) கற்கும் மொழியைப்பிறர் பேசக் கேட்கும் வாய்ப்புகளை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் தருதல், அவர்களைப் பேசச் செய்து கேட்டல் (இ) பிழைகளைத் திருத்துதல், மதிப்பெண்கள் அளித்தல், கல்வி யின் தரக்குறைவுகளுக்கு எதிராக ஆசிரியர்கள் செயல்படுதல் முதலியன நடைபெற வேண்டும்.''

இவை அந்நிய மொழி கற்பிக்கும் ஆசிரியனுக்கென கூறப் பட்டவை. தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியனின் தேவைகளுக் கேற்ப இவற்றை மாற்றியமைக்கவேண்டும். தமிழ் தெரியாத,

வாழ்வில் கண்ட தோல்வியினால் நம்பிக்கை இழந்து நிற்கும் ஆசிரியர்கள் கற்பிக்க, கற்கும் சிறுவர்சிறுமியர் எந்தவேலையிலும் ஆர்வமிழந்தவர்களாகி விடுகின்றனர். முறையற்ற பேச்சுவழக்கு களையும் தமதாக்கிக்கொள்கின்றனர். இவற்றிலிருந்து ஆயுள் முழுதும் அவர்கள் விடுபடுவதில்லை.

ஜேம்ஸ் தன்னுடைய புகழ்பெற்ற 'டாக்ஸ் டு டீச்சர்ஸ்' (Talks to Teachers)-இல் கல்வி நிலையங்களுக்கு வரும் சிறுவர் சிறுமியரிடம் நல்ல பழக்கங்களை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை மிகவும் வலியுறுத்துகிறார். இந்தப் பழக்கங்களில், இலக்கணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கும் போது, மாணவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் பழக்கங்களை இலக்கணத்தோடு தொடர்புடையவனவாகக் கருதலாம். தற்கால சினிமா உலகம் காதுகளை விட கண்களைப் பயன்படுத்தும் போக்குடையது. நம் முடைய இன்றைய நாகரிகம் பேசும் சொல்லைவிட எழுதும் எழுத் துக்கு அதிக மதிப்பளிக்கிறது. பண்பாட்டை விட கல்வி அறிவிற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மூன்று அடிப்படைத் தேவைகளில் படிப்பிற்கும், எழுத்திற்கும் இடமளிக்கப்படவில்லை. ஏனெனில் அதற்குக் கற்கவேண்டிய அவசியமில்லை என்று கருதப்படுகிறது. இவ்வாறு நம்முடைய கல்வித் திட்டம் வழி மாறிப் போயிருக் கிறது. 'மூன்று அடிப்படைத் தேவைகள்' என்ற சொற்றொடரே பொருளியல் யுகத்தின் விளைவாகப் பிறந்ததுதான் இந்தப் பொரு ளியல் யுகத்தில் படிப்பின் நோக்கம் முற்றிலும் பொருளாதாரப் பயன்பாடு என்று ஆகிவிட்டது. ஆகவே கல்வி என்பது அரசாங்க இயந்திரத்தை இயக்குபவர்களைப் படைப்பதாகி விட்டது. பேச்சே உண்மை; எழுத்து என்பது அதனுடைய நிழல் அல்லது அடை யாளச்சின்னம், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பதஞ்சலி சுட்டிக் காட்டிச் சென்றது போன்று நல்லபேச்சு என்பது பண்பாட்டையும், சிறப்பான வளர்ச்சியையும் காட்டும் சின்னமாகும். 'மொழி முதலில், அதிலும் முக்கியமாகப் பேசப்படும் ஒன்று, எழுதப்படும் ஒன்றல்ல' — பல்லர்ட் (Ballard) என்ற உண்மை நம் நினைவில் இருப்ப தில்லை. மொழியையும் இலக்கணத்தையும் கற்பிப்பதற்குரிய சரியான முறை சிறுவர்களைப் பயிற்றுவித்தலே என இன்றைய கல்வியியல் எழுத்தாளர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். ''நடை

முறையிலுள்ள ஒரு மொழியை எழுதவும், படிக்கவும், பேசவும் கற்றுக்கொள்வதே நம் குறிக்கோள் எனில் பேச்சுமொழியில் நம்முடைய முழு கவனத்தையும் நிலை நிறுத்துவதான மிக இயற்கையான, நேரடியான முறையின் மூலம் இதனை நாம் அடைய வேண்டும்'' — கிட்ஸன் (Kitt‹on).

பேசுபவனுடைய இனத்தைத் தெளிவாகக் காட்டக்கூடிய பேச்சுமொழிச் சொற்களைத் (ஒவ்வொரு வகை இனத்தைச் சேர்ந்தவர் தம் இனத்திற்கே உரிய சில சொற்களைக் கொண்டுள்ளனர். அவற்றைக் கொண்டு அவர் இன்ன இனத்தினைச் சேர்ந்தவர் எனப் பிரித்தறியலாம்.) தவிர்த்துக் குறுகிய நோக்கங்களுக்குப் பதில் ஒற்றுமை உணர்வை வளர்க்கவேண்டிய இந்தக் குடியரசு யுகத்தில், நல்ல பண்பாடுகளை வளர்க்கக் கூடிய வளமான குடும்பச்சூழல்களும் இல்லாத நிலையில் நம்முடைய கல்வி நிலையங்கள் பேசும் கலையை மிக முக்கியமாகக் கற்பிக்க வேண்டும். பள்ளிக்கு வரும் குழந்தை தமிழ்தான் பேசுகிறது. ஆனால் அது திருத்தமான தமிழிலிருந்து மிகவும் மாறு பட்டிருப்பதால், திருத்தமான தமிழ் அந்நிய மொழி போன்றே குழந்தைக்குத் தோன்றுகிறது. எப்போதுமே தொடக்க நிலைதான் மிகவும் சிக்கலானது. சாக்ரடீஸ் கூறுகிறார் — ''எதிலும் தொடக்கம் தான் முக்கியமானது. அதிலும் இளமையான நிலையில் இது மிக முக்கியமானது. ஏனெனில் அந்தச் சமயத்தில் மிக எளிதாக வளையக் கூடிய நிலையில் உள்ளதால் எந்த முத்திரையைப் பதிக்க விரும்புகிறோமோ அது மிக ஆழமாகப் பதிந்துவிடுகிறது.'' இந்த முறையில் குழந்தைகளை அணுகுவதற்குப் பேச்சுமொழிகளை அறிவதும் அவசியம். உணர்ந்து மதிப்பளிக்கும் உணர்வுடன் பேச்சு மொழிகளை அணுகுதல் வேண்டும். மொழியைச் சீர்குலைப்பதை மறக்கவேண்டும். மெல்ல மெல்ல திருத்தமான பேச்சு மொழியை அறிமுகப் படுத்த வேண்டும்.

இனிமையான ஒலிகளைக் காதுகளில் பொழிந்து கல்வி கற்பிக்கும் இந்த இயற்கையான கல்வி முறையைப் பாசம் மிக்க அன்னை அன்பும் ஆதரவும் மிக்க தாலாட்டுப் பாடல்களைப் பாடி தொட்டிலிலேயே மிக நல்ல மங்கல வாழ்த்துக்களுடன் தொடங்கி

வைக்கிறாள். இவ்விதம் துவக்கிவைக்கப்பட்ட கல்வி நம்முடைய கல்விநிலையங்களில் தொடரப்படாமல் நின்றுவிடுவது வினைப் பயனே. ஆசிரியர்கள் அனைவரிலும் மிகச் சிறந்த ஆசிரியர் அன்னையே என்பதை நாம் மறந்துவிட்டோம். சமுதாயத்தில் பெண்களின் நிலை தாழ்ந்துபோன காரணத்தினால் கல்வியாளர் கள் வீட்டுக்கு வெளியே உண்மையைத்தேட வேண்டியவர்களா னார்கள். அன்னையரையும் மங்கையரையும் மீண்டும் அவர் களுடைய இல்லற அரியணையில் அமர்த்தவேண்டும். உயிரற்ற பொருள்களின் கண்காட்சியாக விளங்கும் இலக்கிய பரம்பரை, மக்கள் பேசும் மொழியாக வழக்கிலுள்ள மொழியின் தன்மைகளை மக்களே புறக்கணிக்கும்படிச் செய்திருக்கிறது. பிராகிருதம், சமஸ்கிருதம், இன்னும் இவை போன்ற வழக்கிழந்த இலக்கிய மொழிகள் கல்விப் பாடங்களில் மட்டுமே வாழும் மொழிகள். ஆனால் நடைமுறை வழக்கிலுள்ள மொழியிலோ தம் எண்ணங் களை வெளிப்படுத்தும் சக்தி அவரவர் திறனுக்கேற்ப புதைந்து கிடக்கிறது. செயல்முறையைக் கைக்கொண்டு நாம் கற்கிறோம். இம்மொழி பாடத்திட்டத்தில் மட்டுமே உள்ளதாக இன்றி நம் திறனிலும் உள்ளதாக விளங்குகிறது. ஆகவே இது ஒரு கலை யாகவும் மிளிர்கிறது. தண்ணீரில் இறங்கி நீந்தாமல் நீச்சல் கற்றுக்கொள்ளமுடியாது. இவ்விதமே ஒரு மொழியைப் பேசாமல் அதைக் கற்றுக் கொள்வதும் இயலாது.

ஒருவர் ஓர் ஒலியை உச்சரிக்கும்போது காதினால் மட்டுமின்றி தலை எலும்பின் வழியாகவும் அதனைக் கேட்பதால் மற்றவர்கள் காதில் ஒலிப்பதைவிட மாறுபட்டே அவர்காதில் அந்த ஒலி ஒலிக் கும். இதனை ஆசிரியர்களில் பலர் உணர்வதில்லை. ஆகையால் தொடக்கத்திலிருந்தே திருத்தமான ஒலி உச்சரிப்பை வளர்க்கத் தவறி விடுகிறார்கள். அவசியமான ஒலி ஏற்ற இறக்கங்கள், இசை யமைப்பு முதலியவற்றில் பயிற்சி அளித்தால் குழந்தைகள் வசன நடையின் அமைப்பிற்கும், கவிதைநடையின் சந்த அமைப்பிற்கும் இடையே உள்ள வேற்றுமையைப் புரிந்துகொண்டு இரசித்துக் கற்பார்கள். இவ்விதச் சூழ்நிலையில் செய்யுள் இயற்றல் குழந்தை களுக்கு ஒரு விளையாட்டாகவே இருக்கும். சேரியில் வளரும் குழந்தைகளுக்குச் சரியான உச்சரிப்பு வருமா என்று யாரும்

கவலைப்படவேண்டாம். இந்த இளஞ்சிறுவர்களுக்குத் தெய்வ வடிவாகக் காட்சி தரும் ஆசிரியர் ஒருமுறை உச்சரித்த உடனே சேரியில் தன்னோடு உள்ளவர்கள் உச்சரிக்கும் பிழையான உச்சரிப்பைக் கைவிட்டு ஆசிரியரின் திருத்தமான உச்சரிப்பைக் கைக்கொள்வார்கள். ஆயினும், முன்னரே கூறியபடி, தன்னுடைய தனிப்பட்ட கிளைமொழிப் பேச்சுவழக்கைக் குறித்து சிறுவர் களுக்குத்தாழ்வு மனப்பான்மை ஏற்படாதிருத்தல் அவசியம். ழ, ள, ல, ற, ர, ந, ண, ன ஆகிய உச்சரிப்புகள் கூட்டாகப் பயிற்சி செய்வதன் மூலம் கற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். சில சமயங்களில் மிக உயர்ந்த பட்டங்கள் பெற்ற கல்வி அறிஞர்கள் கூட இந்த எழுத்துக்களின் திருத்தமான உச்சரிப்பை அறியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்க நிலை. எந்த ஒரு இலக்கணத்திலும் ஒலியியல் மிக முக்கியமான பகுதி. தொல்காப்பியர் போன்ற பழம்பெரும் இலக்கண ஆசிரியர்கள் ஒலிப் பயிற்சியின் அவசியத்தை உணர்ந் திருந்தார்கள். அவர்கள் கற்பிக்கும் முதல் பாடம் அதுவாகவே இருந்தது. ஆனால் நல்வாய்ப்பின்மையால் பின்னர் இந்தப் பயிற்சி புறக்கணிக்கப்பட்டுவிட்டது

அடுத்துச் செய்யவேண்டியது குழந்தைகளைச் சரளமாகப் பேசப் பழக்குதல். தவறுகளைப் பொருட்படுத்தாது தாய் குழந்தையோடு பேசுவது போலப் பேசி, சரளமான பேச்சுக்குக் குழந்தைகளைப் பழக்க வேண்டும். குழந்தை பேசத் தயங்கும்போது அதனுடைய தவறுகளைத் திருத்திக்கொண்டேயிருந்தால் குழந்தையின் பேச்சு நிரந்தரமாகத் தடைப்பட்டுவிடும். ஆகையால் அறிவு நிரம்பிய ஓர் ஆசிரியர் எப்போது பாராட்டவேண்டும், எப்போது கண்டிக்க வேண்டும் என அறிந்து காலப்போக்கில் தவறுகளைத் திருத்தி விட முடியும் என்ற நம்பிக்கையுடன் செயல்படவேண்டும்.

எவ்வளவு தவறுகள் இருந்தாலும் பேச ஆரம்பித்துவிடுவது அவசியம். ''நன்கு பேச விரும்புகிறவன் மொழியைக் கொலை செய்தே ஆகவேண்டும்'' என ஸ்லாவிஷ் மொழியில் ஒரு பழமொழி உண்டு. அதே போன்று 'ஆயிரம்பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்' என ஒரு தமிழ்ப் பழமொழியும் கூறுகிறது.

குழந்தை பேச ஆரம்பிக்கும் தருணத்தில் இலக்கணம் கற்பித்தல் தீங்கு தருவதாகும். ஆகையால்தான் ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் குழந்தைகளுக்கு இலக்கணம் கற்பிக்கும் அடிப்படை அறிவீனத்தைக் கண்டனம் செய்கிறார். 'இலக்கண விதிகள், பேசும் வாக்கியங்களின் பொருளிலிருந்து குழந்தையின் கவனத்தைத் திருப்பிவிடவே பயன்படுகின்றன. ஆகையால் விதிகளையும், பட்டியல்களையும் தூக்கி எறிந்து விட்டு, திருத்தமானது எதுவோ அதையே மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யுங்கள்' என்று ஜெஸ்பர்ஸன் கூறியதையே நாமும் வலியுறுத்தவேண்டியிருக்கிறது.

பள்ளியில் மாணவர்கள் செயல்திறனுடனும் செயல்திறனற்றும் செயல்படுகிறார்கள். அடிமனத்தின் தேவையை நிறைவு செய்யுமளவிற்குப் பயிற்சி அளிக்கவேண்டும் எனப் பாமர் கூறுகிறார்.

குழந்தைகளின் மனவளர்ச்சியில் உருவமற்று ஒரு நிலையிலிருந்து உருவத்திற்கும் அமைப்பிற்கும் தொடர்புடைய அடுத்த நிலை உருவாகிறது. இயற்கை சிக்கனத்தைக் கடைபிடிக்கவில்லை. அமைப்புநிலை அளவிற்கு மனம் வளர்ந்தபின் கல்வி கற்பதை ஒரு கலையாகக் கொண்டு முயற்சி சுருக்கத்தை விரும்பலாம். கல்விக்கலையும், செயற்கையும் இணைந்தே செயல்படுகிறது. ஆனால் பள்ளிகளில் நாம் என்ன கற்பிக்கிறோம்? ஒரு பாடநூல் விதிக்கப்படுகிறது; அது ஒன்றையே வேதப் புத்தகமாகக் கொண்டு அதைக் கொண்டே எல்லாவகைக் கல்விப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. வாக்கியங்கள் சிறு சிறு பகுதிகளாக உடைக்கப்படுகின்றன. இதனால் படிப்பை இரசித்து மகிழும் வாய்ப்பே குழந்தைக்கு இல்லாமல் போய்விடுகிறது. அவ்வப்போது தரப்படும் விளக்கங்களுக்கிடையே குழந்தை விடைகள் தரவேண்டியிருக்கிறது; தானே சுயமாக எழுதவும் வேண்டியிருக்கிறது. மைக்கேல் வெஸ்ட் கல்வியை, (1) பேசுதல் (2) படித்தல் (3) வாய்மொழிக் கட்டுரைப் பயிற்சி (4) எழுத்து வழி கட்டுரைப் பயிற்சி என நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கற்பிக்க வேண்டிய அவசியத்தை நிரூபித்திருக்கிறார். இவை நான்கும் நான்குவகையான கலைகள். அவற்றை அப்படியே ஒன்றோடொன்று கலக்காமல் வளர்க்கவேண்டும். இந்த அற்புதமான

கண்டுபிடிப்பு தமிழ்நாட்டில் முழுமையான அளவில் பயன்படுத்தப் படவில்லை. இந்த முறையைக் கடைப்பிடித்தால் தான் சிறுவர் சிறுமியர் உணர்ந்துகொள்வதிலும், தங்கள் உணர்வுகளை வெளிப் படுத்துவதிலும் ஆர்வம் கொண்டு மகிழ்ச்சி அடைவார்கள்.

மொழியைக் கற்பிக்கும் போது தனித்தனிப் பிரிவுகளாகக் கற்பிக்கவேண்டியதன் அவசியத்தைப் பாமரும் (Palmer) வலி யுறுத்துகிறார். ''கல்வி கற்பிக்கும் ஆரம்பகாலத்தில் குழப் பத்தைத் தவிர்ப்பதற்கு மொழியின் ஒலிவடிவம், எழுத்து வடிவம், வேர்ச்சொல் அமைப்பு, பொருள் ஆகிய பல்வேறு அம்சங்களையும் தனித்தனியே பிரித்துக் கற்பித்தல் அவசியம்; பின்னால் அப்படிப் பிரித்துக் கற்பிப்பது இயலக்கூடியதும் அல்ல ; விரும்பத்தக்கதும் அல்ல.'' ஒரு அயல் மொழியைக் கற்பிப்பதற்கு இந்த அறிவுரை தரப்பட்டுள்ளது; உயர்நிலைக்கல்வி நிலையிலேயே இதனைப் பின்பற்ற இயலும். இலக்கணத்துக்கும் மொழிவழக்குகளுக்கு மிடையே வரையறுத்துப் பிரிவினை செய்யவேண்டிய அவசிய மில்லை. சாதாரண இலக்கணவிதிகள் அவர்கள் கல்விக்கு உறு துணையாக இருக்கும். தனித்தனியே பிரித்துக் கற்பிப்பதைப் போன்றே சிலவற்றை இணைத்துக் கற்பித்தலும் அவசியமே. இலக்கணம் மொழிக்கூறுகளை வகுத்து ஒப்பீடு செய்கிறது. குழந்தையின் அறிவுநிலை சரியான வளர்ச்சி பெற்றவுடன் தன்னையறியாமல்தான் கல்வி மொழிக் கூறுகளை இலக்கணத் தின் உதவிகொண்டு குழந்தை புரிந்துகொள்கிறது. இலக்கணவிதி களை மனப்பாடமாக அறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனால் மொழி அறிவு அல்லது உணர்வு வளர்க்கப்படவேண்டும். வாழ்வோடு தொடர்புடைய பல செய்திகளை தன்கைப்படுத்திக் கொள்ள குழந்தைக்குக் கற்பிக்கவேண்டும். அப்போது இலக்கண அறிவு தன்னையறியாமலே வளர்ச்சி பெறும். நூற்பாக்களை மனப்பாடம் செய்வதைக் கண்டனம் செய்வதால் கடந்தகாலத்தை ஒதுக்கித் தள்ளவேண்டும் என்று கூறுவதாகக் கொள்ளுதல் தவறு. மொழியில், கடந்தகாலம் என்பது நிகழ்காலத்தில் வாழும் ஒன்று. ஆனால் நூற்பாக்களை மனப்பாடம் செய்தல் என்பது அறிவுபூர் வமானது அல்ல. நூற்பாக்கள் இலக்கணத்தை நினைவில் இருத்திக்கொள்ள உதவி செய்பவை. அவற்றை தெய்வீகமான

தாகவும், இன்றியமையாததாகவும் கருதுவது தவறு. இலக்கண விதிகள் நம்முடைய பயன்பாட்டுக்காகவே என்பதை நாம் மறக்கக் கூடாது. மனத்தில் வாங்கிக்கொள்ளாமல் கற்பது மிகத் தவறு. மனத்தில் புரிந்து கொண்டு கற்பது மொழியியல் கல்விக்கு அடிப் படையானது. ஏனெனில் சொல்லப்படும் அல்லது எழுதப்படும் ஒவ்வொரு வாக்கியமும் மனத்தால் உணர்ந்தே கற்கப்பட்டிருக் கிறது அல்லது ஏற்கனவே மனதால் உணர்ந்து கற்கப்பட்ட சிறிய சிறிய சொற்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. பாமர் சொற்களையும் அவற்றின் பொருளையும் திரும்பச் சொல்லும் திறன் இலக்கியத் தைக் கற்று மகிழ மிக அவசியம். பெருக்கல் வாய்ப்பாடுகள் போன்ற சிலவற்றை மனப்பாடம் செய்தே ஆகவேண்டும். இவையும் கூட பல்லர்ட் (Ballard) கூறுவது போல அன்றாடப் பயன்பாடு கருதியே மனப்பாடம் செய்யப்படவேண்டியவை. ஆகவே பயிற்சி கொடுத்தல் என்பது குழந்தை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் கொடுக்கப்படல்வேண்டும். இலக்கியப் பயன்பாடோ, மொழியியல் நோக்கோ இன்றி இலக்கணத்திற்கா கவே இலக்கணப் பயிற்சி அளித்தல் தீங்கு பயப்பதாகும். இலக் கணப் பயிற்சிகளின் விளைவாகப் போதுமான பயன் கிடைத்தாலும் நடைமுறையில் பேசும் போதும் எழுதும் போதும் கற்றவற்றைப் பயன்ப ததுவதில்லை.

இலக்கணத்தின் அடக்குமுறைப் போக்கு, பொருளற்ற தலை வெடிக்கச் செய்யும் வேற்றுமைகள், பழைய விதிகளையே இன் றைய வாழும் மொழிக்கும் கற்பித்தல், இலக்கியத்தின் மீதே அது உண்டாக்கும் வெறுப்பு, திருத்தமான பேச்சும் எழுத்தும் உண்டாக்குவதற்குத் துணையாக அது பயன்படாமல் போதல், மொழியின் உண்மைக் காவலனாக நடித்தல் ஆகியவற்றின் காரண மாகவே இலக்கணத்திற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன. ஆகவே இன்றைய இலக்கண ஆசிரியர்கள் தங்கள் உரிமையை ஓரளவு குறைத்துக் கொண்டுள்ளனர். ஒருமுறை கற்றவுடனே மேலும் தவறுகள் செய்யாவண்ணம் பாதுகாக்கும் மாயசத்தி இலக் கணவிதிக்கு உண்டு என்பது மூடநம்பிக்கை என்று இன்று உணரப் பட்டுவிட்டது. இன்றைய இலக்கணம் மிக எளிமையான தெளி வான விளக்கங்களையே தருகிறது. மிகச் சிக்கலான பயிற்சிகள்

தவிர்க்கப்படுகின்றன. இதர பாடத்திட்டங்களுடன் ஒன்றி நின்றே இலக்கணம் ஒழுங்குமுறையை வளர்க்கிறது. இலக்கண ஆசிரியர்களும் இலக்கணத்தின் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறுவதற்குப் பதில் வரையறை இலக்கணம் முழுதுமாகப் பயனற்றது என்று கூறிவிடமுடியாது; எனினும் மொழி தொடர்பான ஒரு கருத்தை வளர்ப்பதற்கு இலக்கணம் உதவி செய்கிறது என்பதுடன் நிறைவு பெறுகின்றனர். உயர்வகுப்புக்களில் தான் இலக்கணம் கற்றுத் தரப்படவேண்டும் என்பதும் இன்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. மொழிக் கூறுகளை இணைத்துக் கற்பதும் இன்று வலியுறுத்தப்படுகிறது. எழுவாய், செயப்படுபொருள்,பயனிலை போன்று குழந்தைகளுக்கு ஆர்வம் நிறைந்த புரிந்துகொள்ளக்கூடிய இலக்கணக்கூறுகளையே, அதுவும் திருத்தமாகப் புரிந்துகொண்டு எழுதவும் பேசவும் அவை தேவைப்படும்போது கற்பிக்கவேண்டும்.

கல்வி கற்பிக்கும் பல்வேறு முறைகளில் சூழ்நிலைக்குத்தக மிகச் சிறந்த முறையினைக் கைக்கொள்ளல் அவசியம். செய்முறைப் பயிற்சியையும் விடாது செய்தல் வேண்டும். இலக்கணம் கற்பித்தலுக்குத் துணைசெய்வது மனோவியலே; தருக்கவிதிகள் அலல. மொழி என்பது உண்மையாக உலகில் இருக்கும் பொருள்களுடன் தொடர்புடைய உயிரோட்டம் நிரம்பிய ஒன்று அடிப்படைக் கல்விச் சித்தாந்தங்களை வகுப்பதற்கு மொழியின் இயற்கைத் தன்மையைத் திருத்தமாக உணர்ந்து கொள்வது அவசியம். இலக்கணம் என்பது நம்மை ஆளும் சர்வாதிகாரி அல்ல; மொழியை நிர்ணயிப்பதில் நமக்கு உதவி செய்யும் துணை. பேசுவதாலும் எழுதுவதாலும் தாய்மொழி குறித்து அலசி ஆராயும் அறிவு உண்டாகிறது என்பதை இன்றைய இலக்கண ஆசிரியர்கள் ஒத்துக்கொள்கின்றனர். இவ்வகைக் கல்வியினால் திரட்டப்பட்ட இலக்கண அறிவு சொல், அதன் வரலாறு, சொற்களின் கூட்டு, அவற்றின் பல்வேறுபட்ட பொருள்கள் ஆகியவற்றில் ஆர்வம் ஊட்டுகிறது. இந்த ஆர்வம் வந்தவுடன் மொழி ஆராய்ச்சியும் மிகவும் ஆர்வம் நிரம்பியதாகி விடுகிறது (**Wyatt, Chubb**, Carpenter, Baker Scott).

இன்றைய இலக்கணம் மாணவர்களை வருத்தாத இயற்கையான இலக்கணமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

கூயினுடைய (Gouin) இலக்கணமுறை இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. இருப்பினும், இன்று இலக்கணம் என்ற சொல்லே வெறுப்புக்குரிய சொல்லாகிவிட்டது. கார்ல் ப்ரூயல் (Karl Breu) "இளைஞர்களுக்கு இலக்கணத்தைக் கவர்ச்சிகரமானதாக்க முடியாதா?" என்று கேட்டு அவரே பதிலும் சொல்கிறார்; "முடியும் என்றே நான் நினைக்கிறேன். எல்லாம் ஆசிரியர் அறிமுகப் படுத்தும் முறையைச் சார்ந்திருக்கிறது." விளையாட்டாகவே கற்பிக்கும் முறை பின்பற்றப்பட்ட இடங்களில் எல்லாம் கல்வி முறையில் புரட்சி நடந்திருக்கிறது. குக் (Cook)கின் நூல் எல்லோராலும் போற்றிப் புகழப்படும் ஒரு நூலாகவே ஆகிவிட்டது. ரைபர்ன் (Ryburn) தன்னுடைய நூலில் இந்தியச் சூழ்நிலைகளுக்குத் தகுந்த மொழியியல் விளையாட்டுக்கள் அடங்கிய ஓர் ஆர்வமுட்டும் திட்டத்தை வகுத்திருக்கிறார். இதில் கண்பொத்தி விளையாட்டு, சீட்டு விளையாட்டு, தந்தி, சொற்கட்டு, வாக்கியக் கட்டு ஆகியவையும் மேலும் பல குழந்தைகளுக்கு ஆர்வமூட்டும் விளையாட்டுக்களும் தரப்பட்டுள்ளன.

பாமர் பல்வேறு ஆர்வமூட்டும் பயிற்சிகளையும், விளையாட்டுக்களையும் தந்துசெல்கிறார். அவற்றில் ஒன்றான லிவிங் எர்கானிக்ஸ் (living ergonics) உண்மையில் ஆர்வமுள்ளது. வாக்கியங்களைப் பிரிக்காமல் ஒரு தொகுதியாகக் கற்பிக்கவேண்டும்; பல்வேறு மாதிரி வாக்கியங்களைக் கற்று சொற்களையும், சொற்றொடர்களையும் ஒன்றுக்குப் பதில் மற்றொன்று இட்டு நிரப்பக் கற்பித்தல் வேண்டும் என்பதை இன்று அனைவரும் ஒத்துக் கொள்கிறார்கள்.

மேலே கூறிய புகழ்பெற்ற எழுத்தாளர்கள் மொழியியல் விளையாட்டுக்கள் அடங்கிய முழுத் திட்ட விளக்கமும் தயாரித்துச் சென்றுள்ளபோதிலும், குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவகையில் புகழ் பெற்ற ஆசிரியர்கள் அதனை அறிந்திருந்தபோதிலும், தமிழ் நாட்டில் உள்ள ஒரு சில கல்வி நிறுவனங்களே விளையாட்டாகவே கற்பிக்கும் இந்த முறையைக் கடைப்பிடிக்கின்றன. ஆசிரியர்களுக்கு இந்த முறையில் ஆர்வம் ஊட்டுவதுதான் பெரிய சிக்கல். மனோவியல் முறையில் இதனை அணுகுவதற்கு மிக அரிதாகவே முயற்சிகள் செய்யப்படுகின்றன.

''மொழியியலாளர்கள் பேச்சுமொழியில் எது சரி, எது தப்பு என்பதை நிர்ணயிக்கும் நீதிபதிகள் அல்ல ; அவர்கள் பேச்சுமொழி வழக்கைப் பதிவு செய்துகொள்ளும் இயந்திரங்கள் மட்டுமே'' — விட்னி (Whitney). இத்துடன் திருப்தியடையாமல், பல்லர்டும் (Ballard) மொழி கற்றலில் கசப்பு ஏற்படுவதைத் தடுக்க விரும்பிய மற்றவர்களும் இலக்கணத்திற்குப் பதில் செய்யுள் யாப்பு முறை கற்பித்தல் சிறப்பானது என்றே கருதுகிறார்கள். தொல்காப்பியர் ஏற்கனவே இவ்வகையான பாதையை அமைத்துச் சென்றுள்ளார். அவருடைய நூலை வெறும் இலக்கண நூல் என்று கூறிவிடமுடியாது. இலக்கியத் திறனாய்வு, செய்யுள் யாப்பு ஆகியவற்றோடு தொடர்புடைய ஒரு ஆய்வுநூல் என்றே கருதவேண்டும். ஆகையால் தொல்காப்பியத்தைப் பயனுறப் பயின்ற எந்த ஒரு மாணவனுக்கும் மேலே கண்ட கல்விமுறை எளிதாகவே இருக்கும். திருவள்ளுவர் எழுத்தைக் 'கண்' என்று குறிப்பிடும்போது இதனைக் கருத்தில் கொண்டே கூறியிருக்க வேண்டும்.

ஆசிரியர் கூறுவதைக் கவனிப்பதோடு மட்டுமில்லாமல் மாணவர்கள் தாமே செய்முறைப் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும். விளையாட்டுமுறைக் கல்வி, திட்டமிட்ட முறைக்கல்வி, டால்டனின் பாடத்திட்டமுறை ஆகியவை மிக முக்கியமானவை. மாணவர்களிடையே கலந்துரையாடல்கள், தான் கற்றதை மற்றவருக்குக் கற்பித்தல் ஆகியவை நம் தமிழ்நாட்டு முன்னோர்களின் கருத்துப்படி கல்வியை முழுமை பெறச் செய்கின்றன. இதனைக் கீழ் வரும் வரிகள் நன்கு புலப்படுத்தும்:

ஆசான் கூறியவை அமைவறக் கொளினும்
காற் கூறல்லது பற்றலனாகும்
அவ்வினையாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத்தாம்

''ஆசிரியர் கூறியன எல்லாவற்றையும் ஒரு மாணவன் மனத்தில் வாங்கிக்கொண்டான் என்றால் அவன் 25% கல்வி அறிவு

பெறுவான்; அறிவு பெறவேண்டி மற்ற மாணவர்களுடன் தான் பெற்ற கல்வியறிவைப் பரிமாறிக் கொண்டால் அவன் இன்னும் ஒரு 25% கல்வி அறிவு பெறுகிறான். வெற்றிகரமாக அவன் மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது மீதி 50% கல்வி அறிவையும் பெறுகிறான். அவனுடைய கல்வி அறிவு பழுதற்றதாக முற்றுப்பெறுகிறது.''

மாணவர்களுக்கு அதிகமான பொறுப்புக்களும், ஆர்வமும் அளிக்கப்பட வேண்டும். மாணவர்களைச் சுலபமாக எழுதத் தூண்டுகையில் இவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பல்லர்டின் கருத்துப்படி பொதுமேடைகளில் பேசவும், வாதங்களில் கலந்து கொள்ளவும் கூடிய திறனைப்பெறப் பயிற்சியளிக்க வேண்டும். குடியரசு யுகத்தில் பொதுமேடைப் பேச்சின் இன்றியமையாமையை யார்தான் மறுக்கமுடியும்? தகுந்த முறையில் அணுகினால் குழந்தைகளிடம் அளவிட முடியாத திறன்களை வளர்க்க இயலும்.

கல்வியின் அடுத்த முக்கிய குறிக்கோள் எழுத்தாளர்களை உருவாக்குவது. நம்முடைய எண்ணங்களைச் சரியான முறையில் வெளிப்படுத்துவதன் மூலம் நம்மை நாமே முழுமையாக்கிக் கொள்கிறோம். ஆனால் இன்று சுயமாக எழுதும் திறனைப்பெறுவதைவிட வகுப்பறைகளின் முக்கிய இலக்கணமாக விளங்கும் தேர்வுக் காய்ச்சலே இன்றியமையாததாக விளங்குகிறது. புதிய தேர்வு முறையை ஒரு சில ஆசிரியர்களே அறிந்திருக்கிறார்கள். குழந்தைகள் நினைத்தமாத்திரத்தில் அடித்தல் திருத்தல் இல்லாமல் கட்டுரை எழுதக்கூடியதாக இருக்க வேண்டியிருக்கிறது. ஜுபிடரின் தலையிலிருந்து மினர்வா புறப்பட்டு வருவது போன்று இளம் மூளையிலிருந்து ஆக்கத்திறன் புறப்படவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். நம்முடைய, மொழியாசிரியர்கள் ஷேக்ஸ்பியரையும், நியூமெனையும் கூட மந்தபுத்திக்காரர்கள் என்று கண்டித்து ஒதுக்கிவிடுவார்கள்! இதனாலேயே பல்லர்ட் முன்கூட்டியே கருத்துகளைத் தயார் செய்தல், மறுபரிசீலனை செய்தல், எழுதியதைத் தானே திறனாய்வுசெய்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறார். சாதாரண பள்ளிக்கூட பாடப்புத்தகங்களை விடுத்து,

பள்ளிக் கையெழுத்துப் பத்திரிகையைக் கவனிக்கும்போது இதன் உண்மை விளங்கும். இவற்றில் ஆர்வமுள்ள துணுக்குகளும், சிறுகதைகளும், சுற்றுலா விளக்கங்களும் ஒழுங்காக நிரம்பியிருக்கக் காணலாம். குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டி விட்டால் என்னென்ன சாதிக்கமுடியும் என்று இவை காட்டுகின்றன. இம் முறையில்தான் சுய ஆக்கத்திறன் வளரும். இங்கே நம்முடைய இன்றைய உலகில் காணும் போட்டி உணர்வுகள் இருப்பதில்லை. புதுயுகத்தின் ஒருங்கிணைந்த முயற்சியே இங்குக் காணப்படுகிறது.

சர் பிலிப் ஹார்ட்டாக்(Sir Philip Hartog) யாருக்காகவோ, எதைப்பற்றியோ ஏதாவது ஒன்றை எழுதும், அதனாலேயே எழுதுவதிலேயே ஆர்வமிழக்கச் செய்யும், இன்றைய இயற்கைக்கு முரணான கல்விமுறையைக் கண்டனம் செய்கிறார். எழுதுவது என்பது ஒரு எழுத்துச்சான்று என்பதோடு ஒரு செய்தியைத் தெரிவிப்பதும் ஆகும். ஆகவே ஹார்ட்டாக்கின் முதன்மையான கருத்து எழுதுபவன் எழுத்தைப் படிப்பவனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது. இரண்டாவதாக, கட்டுரை எழுதுவதற்கு முன்பு அதனுடைய வரிவடிவம் ஒன்று தயார் செய்யவேண்டும். மூன்றவதாக, குழந்தைகள் எழுதும் முன்பு ஆசிரியருடன் கருத்துக் களைப் பரிமாறிக்கொள்ளவேண்டும். இவ்வாறு வரையறுக்கப் பட்ட இலக்கணத்தில் கூறப்படும் இலக்கணப் பயிற்சிகள் இன்றியே இலக்கண உணர்வோடு கூடிய ஆக்கத்திறன் வளர்க்கப்படுகிறது. ''விழிப்புணர்வும், எச்சரிக்கை உணர்வும் குடியரசின் தொடக்க அடிப்படைகள்''- பல்லர்ட். இந்த உணர்வோடுதான் பழைய தமிழ்ப்பாடல் ஒன்று முழுச்சுதந்திரம் வழங்கி இந்த ஆக்கத் திறனைக் குறித்துப் பேசுகிறது.

> ''எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
> மொழித்திறத்தின் முட்டறுத்தான் ஆகும்-மொழித் திறத்தின்
> முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
> கட்டறுத்து வீடு பெறும்''

மொழியியல் 5. 4. (1982)

# முதற் சங்கத் தமிழ் : நின்மெய் ஸாஅர

**கி. லோகனாத முத்தரையன்**
மலேசியப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.

ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன், திக்ரிஸ் யூப்ராடிஸ் எனப்படும் நதிகள் ஓடும் நாட்டிலே கிழக்கிலிருந்து குடியேறிய கருத்த இனத்தவர்கள், உலகப் பண்பாட்டு வரலாற்றினைப் புதியதோர் நிலைக்கு இட்டுச் சென்ற சுமேரு நாரிகத்தைத் தோற்றுவித்தனர். வாய்மொழியினை எழுதுவதற்கு நல்லதோர் எழுத்துமுறையினைக் கண்டுபிடித்த பெருமை இவர்களது. S. N. Kramer என்ற அறிஞரின் கூற்றுப்படி, பண்பாடு எனப்படுவதின் முக்கியக் கூறுகளைத் திறன்பட நாட்டியவர்களும் இவர்களே எனத் தெரிகிறது, கோலெழுத்து முறையில் இவர்கள் எழுதிய இலக்கியங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டு வாசித்து, பொருளும் காணப்பட்டு வருகிறது. இனி, இவர்களது இலக்கியங்களைப் படித்த பொழுது தமிழின் சாயல் தென்படவே, அகப்பட்ட இலக்கியங்களைத் தீவிரமாக சில ஆண்டுகள் ஆராய்ந்தோம். சங்க இலக்கியங்களுடனும் பிற திராவிட மொழிகளுடனும் ஒப்பிட்டுக்

காணுகையில், சுமேரு மொழி குமரித் தமிழே என்று தெரிய வந்தது. இவற்றின் விரிவெல்லாம் எமது பிறகட்டுரைகளில் கண்டு கொள்க[1] சொல்லொற்றுமை, சொல்லிலக்கண வொற்றுமை, சமய பண்பாட்டு பழக்கவழக்க ஒற்றுமைகள் என்று ஒற்றுமைகள் பல. ஆராய்ச்சிகள் பெறுகுமெனில் இன்னும் பல ஒற்றுமைக் கூறுகள் தெரியவரும்.

இனி இங்கு தரப்படுவது, W. Hallo, J. Van Dijk என்ற அறிஞர்கள் பெரிதும் முயன்று கோலெழுத்து வட்டுகளை ஒன்று சேர்த்துக் கோவையாக்கி, மொழியினை வாசித்துப் பொருளும் கண்டு உலகிற்கு அளித்த 'நின் மெய் ஸாஅர' என்ற நூலே. இஃது நூற்று ஐம்பத்தேழு வரிகளைக் கொண்ட, பரிபாடல் வகையைச் சேர்ந்த கொற்றவையைப் பற்றிய அழகியதோர் பாடல். இந்நூலின் தலைப்பு இவ்வறிஞர்களால் இடப்பட்டது, பாட்டின் முதல் அடியாகவும் வருவது. 'நின்' என்றால் அன்னை. 'மெய்' என்றால் உண்மையான பொருள், அதாவது தத்துவம். 'ஸாஅர' (šar-ra) என்ற சொல் 'எல்லா' என்ற கருத்துடையது. இந்தச் சொல்லே வடமொழியில்'சகஸ்ரம்' 'சர்வம்' என்றாகி, பின் தமிழில் 'ஆயிரம்' என்றாயிற்று என்று சொல்வதற்கு இடம் உண்டு. இத் தலைப்பின் பொருள் : சர்வ மெய்களின் அன்னை நீயே என்பது.

இங்கு நாற்பத்தி இரண்டு அடிகளையுடைய முதல் ஐந்து பாட்டுகளே தரப்படுகிறது. இவ்வைந்து பாடல்களில் அன்னையின் குணநலங்கள் பல பெரிதும் போற்றப்படுகின்றன. அவள் தெள்ளிய ஒளியினால் அண்ணலது கிழத்தி, விண்ணிலும் மண்ணிலும் விளங்கும் அனைத்து உயிர்களாலும் விரும்பப்படுகிறவள், பெரும் அணிகலங்களைப் பூண்டவள், இறைவி, எல்லா மெய்களையும் தனது கரத்திலும் ஆகத்திலும் நிறுத்தி அவற்றைக் காப்பவள், மாபெரும் விஷப்பாம்பினைப் போன்று நாக்கில் விஷத்தைக் கொட்டுபவள், கோர இடியினைப்போன்று அஞ்சுவரு ஓசையைச் செய்பவள், மலைகளிலிருந்து பெருகி வரும் வெள்ளம் அவள். எரியினை நாட்டின்மேல் வீசுபவள், மாவில் ஏறி ஊர்பவள், புலி எறி நாட்டினைக் காண்பவள், அண்ணலுக்கு அடங்கி

யவள், அச்சம் தரு கண்களையும் முகத்தினையும் உடையவள், அவளது கண்முன்னால் சொல்லுவதற்கு அனைவரும் அஞ்சுவர், போர்க்களத்தில் அனைத்துமே அவளால் அழிக்கப்படுகின்றன. ஆனினங்களின் தலைவி இவளே, இவளைக்கண்டு அனைத்து தெய்வங்களும் அஞ்சியோடும் என்றெல்லாம் கொற்றவை இங்கு புகழப்படுகிறாள்.

இங்கு புகழ்ந்து துதிக்கப்படும் தெய்வம் கொற்றவையே என்பது மேற்கூறிய குணநலங்களால் தெளிவு. இதனால் 'ஆண்' என்று அழைக்கப்படும் **அண்ணல்** சிவபெருமானே என்பதுவும் தெளிவு.

இந்த அழகிய பரிபாடலை எழுதிய அம்மையார் ஏண்யிடு அண்ணா என்பவர். இங்கு, 'ஏன்' (e:n) என்ற சொல் தெய்வ பதம் குறிக்கும் ஓர் அடையாகும். ஓர் கோயிலின் தலைவியாக இருந்த பெருமைக்குரியாரை இவ்வடை கொடுத்து அழைத்தல் அக்காலத்து வழக்கம் போலும். இப்பாடல் ஆக்கப்பட்ட காலம் சற்றேறக்குறைய கி. மு. 2000 ஆகும். வடமொழித் தொடர்பு ஒருசிறிதும் இல்லாத தூயதமிழ். இதன் வழி இன்று வடமொழிச் சொற்கள் என்று நம்பப்படுகிற பல சொற்கள் தூயதமிழே என்பதுவும் தெரியவருகிறது. காட்டாக, 'விஷம்' 'சர்வம்' 'கருமம்' 'அமிர்தம்' போன்றவை. இன்னும் பலவுண்டு.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நூலில் விளங்கும் மொழி பெரிதும் மாறுபட்டு விளங்குவது ஒவ்வுவதே. மேலும் வாசிப்பி லும் பொருள் காண்பதிலும் பிழைகள் பல வுண்டு என்று சுமேரு மொழி அறிஞர்களே ஒத்துக் கொள்கின்றனர். (2) இவ் வாறு செப்பமிலா இந்நிலையினும் நித்திலங்களென, நித்திலக் கோவைகளென, பலதமிழ்ச் சொற்களும், தொடர்களும் உருவினும் பொருளினும் மாறுபடாது இப்பாடலில் விளங்குவது திகைப்புக் குரியதே. மெய், ஆன் (வான்), ஓர், ஊர், ஒ, மெய், குறு, கூறு. கீழ்), தைப்பீ, தள், தள்ளிம்மினி, மோ, இ(ல்), ஈர், கார், தெள்ளிய, கொல், கோ, களம், சீக்கு, சேக்கு, குப்பு போன்றவை உருவிலும் பொருளிலும் மாறுபடாதவை. மாறுபட்டு இருப்பவை யும் பல.

'ž' என்ற ஒலியன் (ஜி) ஆங்கு விளங்குகிறது. கடைச்சங்கம் முதற்கொண்டு விளங்குகிற தமிழில் அவ்வொலியில்லை. இவ்வொலி கெட்டு ழகரம், நகரம், சகரம் என்றவாறு பிரிந்து இசைக்கிறது. இவ்வாறே š (ஷ, ஸ) என்ற ஒலியன் டகரம், சகரமாக மாறிவந்துள்ளது. கெட்டு ஒழிந்த இடங்களும் உண்டு.

வினைச்சொற்களில் விளங்கும் பகுதி விகுதிகள், முறைமை மாறி திகழ்கின்றன. இவ்வாறே அடைகள், பெயர்களுக்கு முன்னில்லாது பெயர்களுக்குப் பின் நிற்கின்றன. ஆயின் வேற்றுமையுருபுகள் பெரும்பாலும் பெயர்களின் ஈற்றிலேயே விளங்குகின்றன. இவ்விலக்கண. க் கூறுபாடுகளை யெல்லாம் பிறிதொரு கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளேன். கண்டு கொள்க.

இங்கு தரப்பட்டுள்ள வரிகள் பெரிதும் மூலத்தையே ஒட்டியன. உரையில் பொருளினையும், இலக்கணக் குறிப்புக்கள் போன்றவற்றையும் கொடுத்துள்ளேன். இதன் மூலம் தமிழ் அறிந்தவர்களால் கொடுக்கப்பட்ட வாசிப்பும், பொருளும் அல்ல என்பதை நினைவில் நிறுத்தித் தமிழறிஞர்கள் இதை ஆராய்வார்களாக. தெளிவான, பிழையற்ற மூலம் இனிமேல் தான் ஆக்கப்படவேண்டும். இஃதை நம் தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதுவோமாக.

### நின் மெய் ஸாஅர

முதற்பாட்டு

| | | |
|---|---|---|
| 1. | nin-me-šar-ra | u-dalla-è-a |
| | (Lady of all the meys | resplendent light) |
| | நின் மெய் ஸாஅர | ஒள் தெள்ளயிய |

உரை: இதன் பொருள்: அனைத்து மெய்களின் அன்னை நீயே, தெள்ளிய ஒளியே' என்பது.

šar-ra > sahasra (?) > ஆயிர. வடமொழி 'சர்வம்' என்ற சொல்லும் இதனடியாகப் பிறந்திருக்கலாம்.

me > மெய்: உண்மைகள், தத்துவங்கள்.

u > ஒள்: ஒளி. உகாரம் பல விடங்களில் ஓகாரமாய்த் திரிந்து னகர, லகர வாக்கியங்களைப் பெற்று முடிகின்றது. சுமேருவில் ஒகாரக் குறிப்பு இல்லையெனத் தெரிகிறது.

dalla-é-a > தெள்-யி-ய: பெயரெச்ச வினைச்சொல்.

பெயரெச்சங்களைக் குறிக்கும் அகர ஈறு சுமேருவிற்கும் கடைச்சங்கத் தமிழிற்கும் உள்ள நல்லதோர் இலக்கண ஒற்றுமை. யகரவொலி இருந்ததாகத் தெரிகிறது-ஆயினும் எழுதப்படவில்லை. சுமேருமொழியையொட்டி எழுந்த அக்காடிய(Akkadian)மொழியில் இடையின யகர வகரங்கள் உண்டு. ஆயின் சுமேருவில் அக்குறிப்பு யில்லை. காண்க: (su) lú (Akkadian) awielu, u-dallo-é-a > ஒள் தெள்யிய → தெள்-யி-ய. ஒள் இவ்வாறு முறை பிறழ்ந்து நிற்பதே பண்டைய நிலைபோலும். சங்க இலக்கியங்களில் சில இடங்களில் அடைகள் முறை பெயர்ந்து நிற்றலைக் காணலாம். முன்றில் = முன், இல் → இல். முன்.

அகம் (301)

பாடு. இன் தெங்கிணை

பாடு. இன் → இனிய பாடு

nin: நின் ‘nim’ என்ற சுமேருச்சொல், நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் குன்றுகளைக் குறிக்கும். நெட்டுயர்ந்த பொருள் என்ற கருத்துடையது. ‘நிமிர்’ ‘நிவர்’ என்ற சொற்களுடன் தொடர்புடையது. ‘nin’ என்ற சொல்லின் கருத்தை ‘உயர்ந்தோள்’ என்று கொள்வோமெனில், ‘அன்னை’ (அன்-அ) என்ற சொல்லின் பொருளுடன் ஒன்றுவதைக் காண்க.

2. mī - ǵi me - làm gúr - ru ki - àga - an - uraš - a
(Righteous woman clothed in radiance beloved of Heaven and Earth)

மைஜீ மெள்ளம் நோற்று காஅங்க ஆன்-ஊரஷ்ய

உரை : திருநிறைமாதே, வெள்ளியது உடையோளே, வானது ஊரது, உயிர்களால் காமீயோளே, என்பது இதன் பொருள்.

mí > மை. gí > mí = மை : கருமை. mí - u - na : மையூன-இரவில் என்ற பொருளில் பிறவிடங்களில் வருகிறது.

gÍ > கரி, கர், கன். முலம் 'ஙி' என்றாதல் கூடும்.

'g' என்று எழுதப்படும் எழுத்து ஙகரமாகவும் நகரமாகவும் வாசித்தல் ஒல்லும் என்று சுமேரு மொழி அறிஞர்கள் கூறுவர்.

'மை' என்றது இங்கு ஆகுபெயராய்க் கருமை நிறத்தவளாகிய அன்னையைக் குறித்தது – 'மைய' போன்று.

ξi = ஜீ > சீ: திரு, அழகு, உயர்வு என்ற பல பொருள் களைக் கொண்டது. வடஇந்திய மொழிகளில் (பாபு. ஜீ) என்ற வாறு இருப்பதைக் காண்க.

(su) mul = முல், முள் : வெள்ளியது, விண்மீன்.

mulàn > melàm = மெள்ளம் : ஒளிருவது, வெள்ளியது.

gúr - ru > ஙோற்று* > நோற்று : பொருள் தெரியவில்லை.

குற்று, கொற்று, கோற்று என்றும் இது ஆகும்.

ki - àga > ki - ànga > காஅங்க > காம்ம > காம

- ng - > - mm - என்றான இடம் பல. காட்டாக,

குமரித் தமிழிலேயே dingir > dimmer > diwer (தேவர்) என்றாகி இருக்கிறது. மேலும் 'காங்கை' என்றசொல் வெப்பத் தினைக் குறித்து இன்னும் வழக்குமொழியில் பயில்கிறது.

an > ஆன > வான்

uraša > ஊரஷ்ய : ஊர் . ஷ்ய. இங்கு 'ஷ்' சாரியையாக விளங்குகிறது போலும். 'உயிர்கள்' என்று குறித்தலும் கூடும். வடமொழியில் இவ்வாறு வருதல் மிகுதி.

an — ur - aš - a = an - aš - a

அகர ஈறு, 'கால' 'மரத்த' என்ற சொற்களின் அகர ஈறு போன்று, சுட்டுச் சொல்லாய், குறிக்கப்படும் இடத்தில், பொருளில் இருப்பவற்றைக் குறிக்கும் - அஃதாவது பண்டறி சுட்டு.

3. nu - gig - an - na suh - kešda - gal - la
(Heerodule of An (you) of all the great ornaments)
நுங்கி அண்ண சூஹ் கஷ்ட கள்கள்ள

உரை: அண்ணலது உயிர்க்கிழத்தி, பெரும் பெரும் அணிகளைப் பூண்டவள் என்பது இதன் கருத்து.

nu - gig > nu(n) - gi = நுண் - கி ? மிகவும் நெருங்கிய, ஏனையோர்க்கும் மேலானது மாது எனப் பொருள்படும்போலத் தெரிகிறது.

an - na = அண் - அ — அண்ணலது. இங்கு 'அண்' எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய பரன், சிவபிரான். அகர ஈறு இங்கு உடைமைப்பொருளில் வரும் வேற்றுமை உருபு.

suh = சூஹ். சிகை?

kešda > கஷ்ட > கட்ட. suh kešd > சிகை கட்டு - அ: கேசத்தில் கட்டப்படுவது, பூணப்படுவது — அணிகலங்கள். gal-gal - la > கள்கள்ள. 'கள' குமரித்தமிழில் பெருமையானது, உயர்ந்தது என்ற குறிப்பினை மாத்திரம் கொண்டிருக்கும். பன்மைக் குறிப்பு ஆங்கில்லை.

கள்கள்ள: குறிப்புவினைப் பெயரெச்சம். அகர ஈறு பெயரெச்சமாதலைக் குறிக்கும்.

4. aga - ji - de ki - àga nam - en - na túm - ma
(Enamored of the appro - suitable for the high priest - hood)
priate - tiara

அணஜீத்தே கிஆங்க ஏண்ணநம் தொஉம்ம

உரை: திருமுடியணிந்து ஏண்ணநம் பொருந்தியவளாய் இருப்பளே, என்பது இதன் கருத்து.

aga - $\xi i$ = ana - $\xi i$ > அணஜீ > சீர்அணி

- dé: — தே = து. ஏ? ஏகாரம் இங்கு கருவி வேற்றுமை உருபாய் நிற்கிறது போலும்.

nam - en - na > ஏண்ணநம். 'நம்' என்னும் பெயர்சொல் ஆக்கி, முறைபிறழ்ந்து கிடக்கிறது. ஏண் = ஏ. உயர்வு இங்கு ஐயனாம் தன்மையைக் குறிக்கும்.

túm - ma > தொஉம்ம > தகும்ம (?)
ma > mu - a : அகர ஈறு சுட்டுச் சொல்.

5. me - imin - bé šu sà - du - ga
( (all) the seven meis whose hand has attained)

மெய் இமின்பே செய் சாஅடுக

உரை: ஏழு மெய்களையும் கையில் சூடியவளே! என்பது பொருள். imin > இமின் (?) > இம்மி (?) சுமேருவில் ஏழு என்ற எண்ணைக் குறிக்கும். அக்காலத்தில் மெய்களின்-தத்துவங்களின் தொகை, ஏழாகக் கணக்கிடப்பட்டது இதனால் தெரிய வருகிறது. பிற்காலத்தில் இருபத்தைந்து என்றும், முப்பத்தாறு என்றும் விரிந்தது.

me-imin-bé→imin me bé > இமின் மெய்பே

ஏகார ஈறு இரண்டாம் வேற்றுமைப் பொருளில் இங்கு விளங்குகிறது.

é > ai

šu > செய் > கை கரம்

śa -du-ga > சூடுக. '-ga': உயர்திணைச் சுட்டுபோலும்.

6. nin-mu me-gal-gal-la sag-keśda $\xi$e-e-me-en
(oh my lady of all the great meis you are the guardian)

நின்மோ மெய்கள்கள்ள சாங்க கஷ்டபி ஜாயே மெய்யன்

உரை: எம் அன்னையே, பெரும் பெரும் மெய்களைக் கட்டிக் காப்பவள் நீயே. nin-mu > நின்மோ. mu>மோ: இடமும், எண்ணும், உளப்பாட்டு வேறுபாட்டுதன்மையும் பாக உயர்திணைப் பெயர். இங்கு ஒருமை தன்மை உயர்திணையைச் சுட்டு, குறிப்பாய் உணர்த்தப்படுகிறது.

ξa-c-me-en > நுவ்வே மெய்யன். இங்கு னகர ஈறு உயர் திணையைச் சுட்டும்—பால் பகாதது.

'x' மெய்யன்: 'x' என்பதை மெய்யாக உடையவன் உடையவள். '-bi'; முன்கூறப்பட்ட மெய்களைக் குறிக்கும் சுட்டு.

மெய்கள்கள்ள V அதினை

me gal-gal-la V bi

இறந்துபட்ட ஓர் இலக்கணக் கூறுபோலும்.

7. me mu-il (you have picked up the me's

me śu-ξu še mu-e-lā you have hung the me's on your hand)

மெய் மோ எழ் மெய் செய்ஜூ சேய் மோ இழை

உரை: மெய்களை எடுத்தாய் நீ, மெய்களை நும் கரங்களில் இழைத்தாய் நீ, என்பது இதன் பொருள்.

mu-il > மோ எழ்: mu > மோ: இங்கு ஒருமை முன்னிலைச் சுட்டு. il > எழ், எடு: அக்காடியத்தில் (Akkadian) elu என்றே குறிக்கப்படுகிறது.

śu-ξu- śe > செய்நும்சேய் = நும்கைசேய் = நும்கைமிசை. -e: இங்கு இடப்பொருள் வேற்றுமை உருபு. பிற விடங்களில் நான்காம் வேற்றுமை உருபாகவும் விளங்கும். e-lā > இழை எள(?); 'அல' என்றும் கொள்ளலாம்.

8. me mu-ur me gaba-ju bi-tab
(you have gathered up the me's you have clasped the me's to your breast)

மெய் மோ ஓர் மெய்கபஜு தைப்பீ

உரை: மெய்களை ஒன்றினாய் நீ, மெய்களை நும் பாகத்தில் தைத்தாய் நீ, என்பது இதன் பொருள்.

ur>ஓர் goba> பாகம் bî-tab>தைப்பீ.

ஈகார ஈறு, 'என்றீ' என்பனபோன்ற சொற்களில் உள்ள ஈகாரம் போலும்— ஒருமை முன்னிலை சுட்ட, இறந்த காலக் குறிப்புடன் வருவது. இனி பெண்பால் உணர்த்தும் சுட்டுச் சொல்லாதலும் கூடும்.

இரண்டாம் பாட்டு

9. ušumgal-gim kur-ra ǔs ba-e-si
(Like a dragon on the land you have deposited venons)

உஷும்கள்ஙிம் குற்ற உஷ சீயிப

உரை: பெரும் அரவின் நாட்டில் விஷம் ஈந்தாய் நீ என்பது இதன் பொருள்.

'உஷ்' என்ற ஓசை அடியாகப் பிறந்து, அதனைச்செய்யும் அரவத்தைக் குறித்தது போலும். uš>விஷம்:

விஷத்தை வெளிப்படுத்துவது (உம்முதல்) என்னுமாம்.

kur-ra>குற, குன்ற: நாட்டில். 'அ' எனும் வேற்றுமை இங்கு இடப்பொருளில் வந்தது.

bî-e-sa = சீயிப: si>ஈ: கொடுத்தல்.

sĭ > சீ: கொடுத்தல், நிறைத்தல் என்னுமாம். சீ, தனம். சீர், வரிசை என்ற சொற்களிலுள்ள சீ, சீர் என்ற பகுதிகளைக் காண்க.

வடமொழியில் 'ஸி' என்று பயில்கிறது.

-e-> -இ-: இறந்தகால இடைச்சொல்?

-ba> ப: ஒருமை படர்க்கை சுட்டு, தொல்காப்பிய காலத்து, பன்மை உயர்திணை சுட்டாயிற்று போலும்.

-gin, -gim> ஙின், ஙின்> இன் : உவம உருபு. பிற இடங்களில் a-gim, a-gin (அங்ஙிம், ஆங்ஙிம், ஆங்ஙிள், ஆங்ஙின்) என்றும் பயில்கிறது. ஆங்கண், அங்ஙனம் என்ற சொற்களின் மூலம் இவை எனக் கொள்ளலாம்.

கொற்றவை இங்கு அனைத்து உயிர்களையும் சங்காரம் செய்கிறவளாகக் கொள்ளப்படுகிறாள். இதன் வழியே பிற்காலத்து, கருத்துமாறி, நஞ்சினை உண்டவள், நீலக்கண்டி என்றெல்லாம் விளிக்கப்படுகிறாள். இவளைத் தமது ஓர் பாகமாகக் கொண்ட அண்ணலும் நஞ்சுண்ட நீலகண்டன் ஆகின்றான்.

10. Iškur-gim ki-sig-gi-ja cjinu la-ba-ši-gàl
(When you roar at the earth like Thunder, no vegetation can stand up to you).

இஷ்கோர்ஙிம் கீழ்சீக்கிஜா எஜினு இல கால்செய்ப

உரை: கோரஇடியின் கிழம் சீக்கும் நும்மால், எழினி கால் செய்ப யில என்பது இதன் கருத்து.

iškur > இஷ்கோர் > கோரஇடி

ki > கீழ், கிழம் : தளம், நாடு.

sig-gi > சீக்கி சீக்கல் — அழித்தல். காண்க.

(ஐங். 19) பெருஞ்சினை ... வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்

(ஐங். 20) தும்பி ... தாமரைப் பூச்சினை சீக்கும்

Ejinu > எஜினு > எழினி 'மழை, மேகம். இப்பொருளும் இங்கு பொருந்துவதைக் காண்க.

—la > இல. பிறவிடங்களில் na, na-an, nu, ni, nu-un என்றெல்லாம் இவ்வின்மை சொல் விளங்கும். வடமொழியில் உள்ளதைப் போன்றே, வினைச் சொற்களின் ஈற்றிலோ அல்லது இடையிலோ தோன்றாது குமரித் தமிழில் முன்னிலேயே தோன்றும் la–ba–ši–gàl > கால் செய்ப இல.

gál > கால் : நிற்றல் ši > செய் : நிகழ்த்தல், துணை வினை.

11. ama-ru kur-bi-ta e–dé

(A flood descending from its mountain)

அமரு குறுபித்து இழ்யிடே

உரை : குன்றிலிருந்து இழிந்திடும் அருவி, வெள்ளம் நீயே என்பது பொருள்.

ama-ru > அமரு. ஆரவாரம் குறிக்கும் 'அமர்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்திருக்கவேண்டும். காண்க பாவாணர் 'வேர் சொல் கட்டுரைகள்' பக்கம் (5). தமிழ் 'அலமரு' இதனுடன் ஒப்பத்தக்கது. வடமொழி 'அமிர்தம்' இதனடியாகப் பிறந்திருக்கக்கூடும்.

—ta : 'யிலிருந்து' என்னும் இடவேற்றுமை (Ablativecase) காண்க. (குறு. 27) நிலத்து ஊக்காங்கு.

(குறு. 49) ஓங்கு வரை அடுக்கத்து பாய்ந்துயிர் செகுக்கும் ...

e-dé = e-e-du–e > இழ்யிடே : இழிந்திடு. அ (?)

—du = இடு — செய், பண்ணு, என்பது போன்ற துணை வினை.

அமரி = காளி என்பதைக் காண்க.

12. sag-kal an-ki-a inanna-bi-me-en.

(Oh Foemost one, you are the Inanna of heaven and earth)

சாங்கள் ஆன்கீழ். அ இன்னணணா (அ) வின் மெய்யன்

உரை: தலைசிறந்தோளே, வானது கீழது இன்னண்ணா நீயே என்பது இதன் பொருள்.

sag-kal > sang-kal: சாங்கள் > தாங்கள் (?)

san > சான் > நான்; உயர்திணை படர்க்கை சுட்டு.

13. Iji-ne-ne-ra kalam-e šeg-gà
(The fanned fire down upon the nation raining)

இஜியினே நிரை களம்மே சேக்குக

உரை: நிறைந்த எரியினை களமது சேக்குவோளே என்பது இதன் கருத்து.

iji > எரி. iji-ne > எரியினை. -n-: சாரியை.

e > ஐ: இரண்டாம் வேற்றுமை உருபு.

ne-ra > நிரை: பெருகிய. Kalam > களம்: நாடு

šeg > சேக்உ: சேர்த்தல், தங்கச் செய்தல்.

காண்க. (குறு 13) பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்

14. an-né me-si-ma nin ur-ra u-a
(Endowed with me's by An lady mounted on a beast)

அண்ணே மெய் சிம்ம நின் ஊர ஓஅ

உரை: அண்ணலால் மெய்கள் கொடுக்கப்பட்டவள், ஊர்வ தொன்றில் ஏறி நிற்பவள்.

an-né > அண்ணே: ஏகாரம் 'ஆல்' என்னும் கருவி வேற்றுமை.

ur-ra > ஊர்வ: ஊர்ந்து செல்லும் ஒன்று - விலங்கு.

u-a > ஓ-அள்: ஏறி அமர்ந்தவள்.

15. Inim-kú-an-na-ta Inim-du-du
(At the holy command of An make decisons)

எனம்கோ அண்ணத்து எனம்தூஉது

உரை: அண்ணலது திரு ஆணைகளின் வழி சொற்களை செப்புவள் என்பது கருத்து.

Inim, ene-em > இனிம், எனம்: சொற்கள், 'எனல்' என்னும் வினைச் சொல் இதனடியாகப் பிறந்திருக்க வேண்டும்.

kú > கோ: தெய்விக, ஆசுயில் (pure)

du-du = du (g)- du(g) > தூ(க்)உ) தூ(க்)உ > தூஉது-செப்பல், சொல்லல், பிற்காலத்து 'தூக்கு', யாப்பு என்ற கருத்துடையதாயிற்று.

16. billuda - gal - gal - la ni - ju a - ba mu - un - ju
( (you) of all the great rites who can fathom what is yours)

பில்லுதகள்கள்ள நீகுஜூ யாப முன்ஜூ

உரை: பெரும் சரியைகளில் பெரியோளே, உன்னை முற்றிலும் உணர்வர் யார்? என்பது கருத்து.

billuda > (அ). பில்லுதம்: அபிஷேகம். வடமொழியில் விளங்குகிறது.

காண்க : அமருதேனாப்லுநம் சீருத்ரம் - லகுள்யாஸம்.

ni > நீஇ > நிதி : பொருட்செல்வம் - இங்கு உடமைகள்.

a - ba > யாப யாவன் : mu - un > முன் > மன்

ju > ஜு > நூல் (?) : உணர்தல், அறிதல்.

ju > நுவ் 'நும்' 'நுவல்' : என்னும் பொருள் தருவதைக் காண்க.

நூல் > நுவல் : அறிவுறுத்தல், அறிதல், அறிவு.

மூன்றாம் பாட்டு

17. Kur - gul - gul u - dê ā ba - e - śi
(Devastrix of the lands you are lent wings storm)

குரு கொல் கொல் ஊயித்தே ஆ சீயி

உரை : நாட்டை அழிப்பவளே, வலியினால் ஆற்றல் பெற்றோளே என்பது கருத்து,

gul – gul > குல் குல் > கொல் கொல்: குலைதல், அழித்தல்.

u > ஊ : காற்று, உலவை, ஊது என்பன போன்ற சொற்களைக் காண்க. ā > ஆ > ஆற்றல் (?).

18. ki – āga en - lil - lā kalam - ma im - mi - ni- dal
(Beloved of Enlil you fly about in the nation)

காஅங்க ஏண்லில்ல களம்ம தள்யிம்மினி

உரை : ஏண்லில்லால் காமியோளே, களத்து மேல் தள்ளுவோளே.

en - lil > ஏண்ளில் lil > வளி. வடமொலி 'லீலை' இதன் வழியாக பிறந்திருக்கக் கூடும்.

im - mi - ni - dal > தள் - யிம் - மினி. இங்கு 'im' காலங் குறிக்கும் கடைச்சொல். mi - ni > மினி = மின். இ (?) முன்னிலை உயர்திணை சுட்டு.

19. ā - āga - an (a) - ka ba - gub – be - en
(At the decrees of An you are at the service)

ஆ ஆணை அண்ணக்கே (அப்) ப குப்பியென்

உரை : அண்ணலது ஆணை அவற்றிக்கு குப்புவோளே. āga = āna > ஆணை.

gub - be - en > குப்பியென் gub > குப்உ : தலைக்குவித் தல், அடங்குதல். 'கு' எனும் வேற்றுமை கிழமைப் பொருளில் நிற்கிறது.

20. nin - mu ja - pa - āg - ju -šé kur í-gurum gurum-e
(Oh my lady, at the sound of you the lands bow down)

நின்மோ ஜப ஆக்உஜூசேய் குறு ஈ குறூஉம் குறூஉம்மே

உரை : எம் அன்னையே, நீ ஜபங்கள் செய்யும்பொழுது, அனைத்து நாடுகளும் குறுகி அடங்குமே என்பது கருத்து.

Ja - pa > ஜபம் : ஓசை. தமிழிலிருந்து இது வடமொழிக்கு சென்றுள்ளது. àg > ஆக்கு : செய்தல் — துணைவினை.

gurum - gurum > குற்.உம் குற்.உம் > குறூஉம் குறூஉம் — குறுகல், அடங்குவதைக் காட்டும். > ஈ இவை வெறும் சுட்டு (?) அல்லது 'ஈ' - கொடுத்தல் என்னும் கருத்துப்பட வரும் துணைவினையாதலும் கூடும். பிறவிடங்களில் இறந்தகால இடைநிலையாக வருகிறது.

21. nì - me - lām u - lu - da nam - in - u - in
(when mankind comes before you)

22. ni - me - gar - huš - bi ù - mu - re - gin
(In fear and trembling at (your) tempestuous radiance)

23. me - ta me - huš - bi šu ba - e - re - ti
(they receive from you their just deserts)

நீ மெள்ளம் உழையிட உளுநம் உழை
நோய் மெய் கார் உஷ்பி உழ் (ஏ)கின்மோரே
மெய்த்த மெய்உஷ்பி செய் தில்பயிரே.

உரை : நிவக்கும் ஒளிபொருந்திய உன்னுழை ஆட்கள், நோயும் அச்சம் மெய் நிற்க ஏகும் பொழுது, பொருந்திய மெய் களை உன்னிடமிருந்து பெறுவர்.

me - lām : மெள்ளம். ஒளி (su) mul = முல் : விண்மீன் mul > mel, ām = அம் : மிகுதியைக் குறித்தது. 'மிளிர்' 'மின்' என்ற சொற்களும் 'வெள்' 'வெண்' என்ற சொற்களும் குமரித் தமிழ் 'mul' (முல், முள்) என்ற சொற்களிலிருந்து பிறந் திருக்கவேண்டும்.

u - lu > உழை : முன்னிடம், முன்பக்கம்.

ni > நீ, நோய் : அச்சம், வருத்தம். ni > நீ > நிம், நிவ் : உயர்தல்.

ú > உழ் உழி = போது, பொழுது எனும் காலச்சொல்.

mu - re = mu - e - re > மோரே > மார். ஏ. உயர்திணை பன்மைப் படர்க்கைச் சுட்டு.

ba - e - ne > ba - e - re : பயிரே, பர். ஏ, பார். ஏ ; உயர் திணை பன்மைப் படர்க்கைச் சுட்டு.

24. i-lu -ir-ra -ke-gál ma-ra ab-še
(They weep, proferring a song of lamentation before you)

அழு ஈரக்சே கால் (உம்) மன்ற அபை சேய்

உரை: உம்முன்கண், ஈரம் கால் கொள்ள அழுவரே. i-lu > அழு ir-ra > ஈர். அ: கண்ணீரது.

ma - ra > மா(ன)ற; i - a > - da = உட; கிழமைப் பொருள் வேற்றுமை உருபு. ab > ஆப் > அவை : இடம், பக்கம், உழை še > சேய்: இங்கு இடவேற்றுமை.

25. è - a- nir - gal la sil - ba mu- re- gin
They walk toward you along the path of the house of all great signs)

இல் அந்நீர் கள்கள்ள சாலைப ஏகின்மோரே

உரை: மிகு கண்ணீர் மல்கும் இல்லது சாலயின் ஏகுமாரே

é > இல் : இல்லம். a (n) - nir > அந்நீர் : மிகுந்த நீர். sila > சாலை : தெரு.

நான்காம் பாட்டு

26. ξgi - me - ta ni má - ra - ta - si - ig
(in the van of the battle everything is struc down by you)

இங்கி அமைத்த நீஇ மன்றத்தா சீக்உ

உரை: அமர்கண் நிதிகள் யாவும் உம்மால் சீக்கப்படும்.

igi = ingi > இங்கி > இமை: கண்
mè > அமை, அமர்: போர்.

27. nin - mu à - ni - ξa KA-KA i-durud (kú)-e
(oh my lady, (propelled) on your own wings you peck away at the land)

நின்மோ ஆநிஜா **KA.KA** ஈ துருத்துவே

உரை :

KA·KA, kù என்பவை குறிகள்.

durud-e > துருத்து. ஏ: duıud > துருத்தல்: தூர்த்தல்

எம் அன்னையே உனது ஆற்றலாலேயே களத்தினைத் தூர்த்துவாய் என்பது பொருள்.

28. u-du-du-gim i-du-du-dè

(In the guise of a chraging storm you charge)

ஊ தொடு நிம் ஈ தொடுத்தே

உரை: தொடும் வளியினைப் போன்று தொடுத்தாய் நீயே என்பது பொருள். தொடுதல் : போர்த் தொடுதல்.

du - du > அடு அடு என்றும் அமையும்.

29. u gú - ra - ra - ta gù in - da - ab ra-ra

(with a roaring storm you roar)

ஊ கூ ஆரவாரத்த கூ ஆரவார யிம்மிட ஆப்

உரை : ஆரவாரிக்கும் உலவையிடம் நீயும் ஆரவாரிப்பாய்.

gú > கூ : கூவல், ra - ra > ஆர. ஆர = ஆரவார. குமரித்தமிழில் முதன்நிலை உயிர் எழுத்துக்கள் பலவிடங்களில் தொக்கியே எழுதப்படுகின்றன.

ab > ஆப் : நீ ? பொருள் தெளிவாக விளங்கவில்லை.
ab > am : அம், ஆம் > அய், ஆய் (?)

ra - ıa > இர-இர > இரை இரை எனினும் அமையும்.

30. iškur-da sig mu-da-an-gi-gi-in

(With thunder you continuously thunder)

இஷ்கோர்ட மோ சீக்கிடுஅன் ஙிஙியின்

உரை : கோரஇடியொடு கரங்கிகரங்கி நீ சீக்குவாய் என்பது பொருள்.

'gi' > என்ற சொல், கன்னல், கரி, திரும்பவும் என்பன போன்ற பல பொருட்களை உணர்த்துவது.

gi = ngi > ஙீ > நீல் : நீலம் - கருமை.
gi > ஙீ > mi > மை : கருமை.
gi > gir > கிர் > கர், கரி ; கரிய.
கர் > கன் : கன்னல்.
கர் > கரங்கு : சுழலல், திரும்புதல். 'கிரகம்' 'கரகம்' போன்ற சொற்கள் இதனடியாகப் பிறந்திருக்கவேண்டும்.

'—da' இங்கு 'ஒடு' எனும் உடன் வேற்றுமை (sociative case ).

31. im - hul im-hul-da im-da-kùš-ú-dè
(with all the evil winds you snort)

இயம்உல் இயம் உல்ட இயம்யிட குஷ்ஊத்தே

உரை : உல்கும் வளிகளோடு குறட்டையிடுவாய் நீ.

im > இயல் : இயங்குதற் கரு த்தில், ஆகுபெயராய் அதனைச் செய்து கொண்டே யிருக்கும் காற்றினைக் குறித்தது போலும்.

hul > உல் : உல்கும், வருத்தும்.
im - hul > hul - im : உல்லியம்.
kùš-ù > குசு : குசுத்தல் — ஈங்கு மூச்சு விடல் (?)
'குசுகுசுத்தல்' என்ற வழக்கினைக் காண்க.
kùš-ú > குஷ்ஊ > குட்டு > குறட்டு, குறட்டை (?)

32. giri-ja nu-kùš-ù i-in-si
(your feet are filled with restlessness)

(உ)கிர் ஜா நுகுஷ்ஊ சீ இயின்

உரை : உமது பாதங்கள் அமைதல் இலாமையால் நிரம்பப் பட்டிருக்கின்றன என்பது கருத்து.

giri > gir > உகிர் : இங்கு பாதங்கள்.
giri > கரம் (?)

nu-kŭ$_s$-ú = நுகுசு : 'நு'. இங்கு 'அல்' ஆகும். 'குசு' மேல் உறங்குவதைக் குறிப்பதால் 'குசு.அல்' உறங்காமையைக் குறித்து உழற்சிமேல் நிற்கும்.

33. balag-a-nir-ra-da i-lu mu-un-da-ab-bè
(to the accompaniments of the harp of sighs you give vent to a dirge)

பலங்கு அந்நீரட அழு அபையிடுமுன்

உரை : கண்ணீரது வங்கியத்துடன் அழுகை செய்திடுவாய் என்பது பொருள்.

balag > பலங்கு > வலங்கு : வலைந்தது என்ற பொருளுடையது.

- da - ab - bē > அபையிடு : வெளியில் நிறுத்தல்.
i-lu > அழு.

a-ñir-ra- balag da > அந்நீர வலங்கி யொடு. '— da' இங்கு கருவி வேற்றுமையுருபு.

mu-nu > முன் > மன் : அசைச்சொல் (?)

ஐந்தாம் பாட்டு

34. nin-mu a-nun-na dingir-gal-gal-e-ne
Oh my lady the Anunna the great gods

35. su-din mušen-dal-agim du-dè mu-e-si-ba-ra-a
Fluttering like bats fly off from before you to the clefts

நின்மோ ஆனுன்னா திங்கர் கள்கள்யினே

சூதின் முசன் தள்அஙிம்(வி)டுத்தே மோ புற-ஏ-செய்யிசு

உரை : எம் அன்னையே ஆனுன்னா! பெரும் பெரும் தெய்வங்கள்.

வௌவால்கள் அன்ன உம்மிடமிருந்து புறம் செல்வர்.

dingir > dimmer > diwer (Akkadian) : தேவர்.

—e-ne > இனம் : தொகுதி. e-ne > e-re : யிரே-யீந்ஏ > ஈர், அர், ஆர் : உயர்திணைப் பன்மைச் சொல்.

'— ன' என்னும் பன்மைச் சொல், பிற்காலத்து அஃறிணைப் பன்மையாயிற்று. சங்க காலத்து வினைச் சொற்களோடல்லாது பெயர்ச் சொற்கள் ஈற்றிலும் இது பயின்றது போலும். காண்க (குறு. 7) 'வில்லோன் காலன கழல்'

mušen > முசுன் > முசு : முகத்தை நீட்டிக் கொண்டிருப்பது. முசல் (முயல்), முகம், மூக்கு என்ற சொற்களைக் காண்க. du > விடு > விண்டு, விடர். 'வீடு' என்ற சொல்லும் இதனடியாகப் பிறந்திருக்கக் கூடும்.

ba-ra > பற > புற > புறம் : பிற விடம்.

— eš, -aš > யிசு, அசு : குமரித் தமிழில் விளங்கிய உயர்திணை அஃறிணை பன்மைச் சுட்டு போல் தெரிகிறது. வடமொழியில் 'ஏஷம்' என்று விளங்குகிறது.

36. igi-huš-a-ζa la-ba-su-ge-eš-a
(in your terrible glance they danre not walk)

இங்கி உஷ்அஜா இல(அ)ப சூழ்கி யிசுஅ

உரை : உம் உஷ்ண கண் முன் அவர்கள் சூழ்குவார் இல்லை என்பது பொருள்.

huš-a > உஷ்-அ > உஷ்ண : அனல் உமிழும். குமரித் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றுளது.

su-ge-eš > சூழ்கியிசு; செல்கியிசு எனினும் அமையும்.

37. sag-ki- huš-a-ξa sag nu-mu -un-dé -gà-gà
(Before your terrible countenance who dare not proceed)

சாங்கி உஷ்அஜா சான் நு கால்கால்யித்தே மன்

உரை: நும் உஷ்ண முகத்துமுன் யாவனும் நிற்பதில்லை என்பது பொருள்.

jag-ki = சாங்கி > சென்னி. sãg = san > சான் > தான்
gà(l) - gà(l) = கால் கால் : நிற்றல். இந்த வினைச்சொல் வழியாகத் தாளைக் குறிக்கும் 'கால்' வந்தது போலும்.

38. sâ-ib -ba-ξa a-ba i-te-en- te-en
(your ranging heart who can temper?)

சாஅ இவ்வ ஜா யாப ஈ தண் தண்?

உரை: கவரும் நும் நெஞ்சத்தை யாவர் தணிப்பர்? என்பது பொருள்.

sâ (g) = šà (?). வடமொழியில் சாஅ (ca) 'ஒருவன்' என்று கருத்துப்படும்.

ib-ba > இப்ப > இவ்வ > இவர்: சினந்தெழல்.
இவ்வம் > எவ்வம்: வருத்தம்.
i-te-en te-en > தண் தண் இ.

36. šá-hul -gãl-la-ξa te-en- te-bi mah-a
(your malevolent heart is beyond tempering)

சாஅ ஒல் கால்ல ஜா தண் தேய்பி மாஅ

உரை: ஒல்குதல் நிற்கும் உன் நெஞ்சம் தணிப்பதற்கு அடங்காப் பெருமையது.

mah-a > மகா: மிகப்பெரிய.

40. nin ur i-sǎ — nin sǎ i-hùl
(Lady (who) soothes the reins — lady (who) gladdens the heart)

நின் ஊர் சாயி — நின் சாஅ உவல்லி

உரை: உடலுறுப்புகளைச் சாந்தியடையச் செய்வளே; நெஞ்சங்களுக்கு உவகை அழிப்பளே!

ur > ஊர்: தொடை (?) i-sǎ > சாய். இ. -'இ'.
இங்கு உயர்திணை ஒருமை பெண்பால் (?) சுட்டு.
hùl > உவல்: இன்பம்.

41. ib- ba nu -te - en - te - en — dumu - gal - sù en - na
(whose rage is not tempered — oh eldest daughter of Suen)

இப்பு நு தண்தண் — தமுகள் சூஎன்ன

உரை : சூயென்னது மூத்த மகளே, உமது சினம் தணியவில்லை.

dumu > தமு. மகன், மகள். 'தமர்' என்ற சொல்லும், தமக்கை, தமையன், தம்பி போன்ற சொற்களிலுள்ள 'தம்' இதன் வழியாக வந்திருக்கக் கூடும்.

dumu - gal > தமு. அக்க > தமக்கை
தமு. அய்ய > தமையன்

42. nin kur - ra diri - ga — a - ba ki - ξa ba - an - tùm
(Lady Supreme over the land — who has (ever) denied (you) homage)

நின் குற்ற திரிகம் — யாப கீழ்ஜா தொஉம்பான்

உரை : நாடுகளை ஆளும் அன்னையே, உன் கீழ் படியாதார் யார் ?

diri - ga > திரிக : '-க' இங்கு உயர்திணைச் சுட்டுப்பெயர்.
ba - an - tùm > தொ உம்பான் : தொக்உபான் ?
tùm > தொஉம் > தொக்உ : இல்லாது செய்தல்.
முதல் ஐந்து பாடல்கள் முடிந்தன.

முடிவுரை : சுமேரு குமரித்தமிழே என்பதை ஐயறுவோர், இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்கள் வழி, தெளிவுறுவார்க ளென்று நம்புகிறோம். இவ்வளவு நெருங்கிய சொல்லொற்று மைகளும், இலக்கண வொற்றுமைகளும், அடிப்படைச் சமய வொற்றுமைகளும் சுமேரு மொழி, தமிழே என்பதைப் பறைசாற்று கின்றன. குமரித் தமிழ் சொற்கள் பல, வடமொழியில் ஆளுவதை யும் இம் மூலத்தின் வழியாகக் கண்டோம். வடமொழியே குமரித் தமிழின் அடிச்சுவட்டில், வடநாட்டில் ஒரு காலத்தில் மிக்கிருந்த தமிழர்களாலேயே படைக்கப்பட்ட மொழி என்பதைப் பிற கட்டுரை களில் விளக்குவோம்.

சுமேரு இலக்கியங்கள் பற்பல பதிக்கப்பட்டுளன. இனியா கிலும் தமிழறிஞர்கள் அவற்றை ஆராய்ந்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு அளிப்பாராக.

---

## மொழித் தூய்மை

மொழித் தூய்மை இலக்கியத் தமிழ் நூல்களுக்கே பொருந் தும் ; பொறியியல், அறிவியல் நூல்களுக்குப் பொருந்தாது என் பாரும் உள்ளனர். மொழித்தூய்மையை வற்புறுத்தினால் பொறி யியல், அறிவியல் நூல்களின் வளர்ச்சித் தடைபட்டுவிடும் என்றும் அஞ்சுகின்றனர். தமிழில் பிறமொழிச் சொற்கள் எப்போதுமே கலப்புறத் தேவையில்லை எனத் துணிந்து கூறுவேன். 'A nations strength ultimately consists in what it can do on its own and not in what it can borrow from others' என்னும் திருவாட்டி இந்திரா காந்தியின் கூற்று மொழி வலிமைக்கும் வளர்ச்சிக்கும் கூடப் பொருந்தும்.

இரா. கணேசன்

-அறிவியல் தமிழாக்க முறைகள்

பக்கம். 72, (1972). அறிவுத் தமிழ்ப்பணி மன்றம் : சென்னை.

குமரித் தமிழ் கிளவித்திரட்டு-பின்னிணைப்பு

சுமேரு எனப்படும் மொழி குமரித் தமிழே என்பது எம்முடிபு. நம் வரலாற்றை புதியதொரு எழுச்சிமிக்க கோணத்தில் காணச் செய்யும் இக்கொள்கையை நிறுத்தும்வழி சுமேரு இலக்கியங்களி லிருந்து சில கிளவித்தொடர்கள் இவண் தரப்படுகிறது. அவை கூறும் பொருள் நலம் கருதியும், கடைச்சங்கத் தமிழுடன் வெகுவாக பிறழாது இருக்கும் தன்மைகள் கருதியும் அவை இங்கு சில இலக்கணக் குறிப்புகளுடன் தரப்படுகின்றன.

I முதற் சங்கக் குறிப்புகள்

அறிஞர் S.N. Kramer அவர்கள் பதித்துள்ள, 'Lamentations over the Destruction of Ur' என்ற தொகுப்பிலிருந்து சில வரிகள் இங்கு தரப்படுகிறது. சாங்கீயம். சங்கம் போன்றவை தமிழ்ச் சொற்களே என்பதை மிகவும் தெளிவாய் இவ்வரிகள் உணர்த்து கின்றன.

150. an-e e-ne-em-bi ba-ra-mu-da-gur
Venly Anu turned not to this word
அண்ணே எனபிம்பி பிற கோயிடுமோ

விளக்கம்: ne-em = inim = en-em என்றெல்லாம் வரும். 'எனல்' 'என' என்ற சொற்களுடன் தொடர்புடையது. bara > பற > பிற, வேறு. mu > மோ: உயர்திணைச் சுட்டு.

151. mu-ul-lil-li i-šag-hé-âm-ba ša-mu ba-ra-mu-un-hun
Venly Enlil with its 'It is good; so be it' soothed not my heart.
மூல்லில்லே ஈ சாங்கீயம்ப சாஅமோ பிற குன்முன்

விளக்கம்: šag = šan > சாங்கி, சென்னி: தலை, முகம், ஒருவன் என்ற பல பொருண்மைகளையுடைய ஒரு சொல். sag-he-ám: சாங்கீயம் — தலைமை பற்றி வந்த நல்லது, உயர்ந்தது என்ற பொருள்தரும் சொல்.

kun > hun > குன், குள் > குளிர்: தணித்தல். 'சாங்கீய காரிகை' என்பது தமிழ் வழக்கு என்பதை இதனாற் பெறுகிறோம். 'காரிகை'

என்ற சொல்லும் 'கார்' எனவரும் 'செயல்' 'வினை' என்ற கருத்துப்படும் சொல்லின் வழி வந்ததே. கார்-இ-க > காரிகை. ஆகவே 'சாங்கீய காரிகை' என்பதின் பொருள் 'நல்லதை, உயர்ந்ததைச் செய்வது'-அஃதாவது உயர்ந்த நிலைக்கு ஒருவனை இட்டுச்செல்வது எனப்படும்.

152. min-kam-ma-šé pu ùḫ-ru-um sag ki-a bada- CA'L-la

For the second time, when the council had.........ed.

மின்காம்மசேய் பொரூஉம் சாங்கிய கால்யிடுப '?)

விளக்கம்: மின்: இரண்டு—இறந்துபட்ட சொல்வழக்கு.

-še > -சேய் இடவேற்றுமை உருபு. நான்காம் வேற்றுமை யுருபாதல் மிகுதி:

pu-ùh-ru-um: பொரூஉம்: கூடும், சேரும். பொருதுதல் கருத்தில் தோன்றிய சொல் என்று தெளிவாகத் தெரிகிறது.

-um: இங்கு எதிர்காலப் பெயரெச்ச வினைச்சொல் ஈறு.

sag-ki-a > சாங்கிய > சங்க, சங்கம். மக்கள் கூடியுள்ள இடம் என்று பொருள்படும். இதனாற் மக்கள் கூடும் சங்கம் அமைத்து, பல ஆய்வுகளை மேற்கொள்ளும் வழக்கம் குமரித் தமிழரிடையே இருந்தது என்பதுவும், சங்கம் தூயதமிழ்ச் சொல்லே என்பதும் தெளிவு.

இங்கு பொரூஉம் சங்கம், தெய்வங்களின் சங்கம் எனினும் பிற இடங்களில் அரசவையில் புலவர்கள் வீற்றிருந்த மன்றமும் இருந்ததைக் கிளக்கும் கிளவிகளைக் காண்போம்.

அறிஞர் G.R. Castellino அவர்கள் வெளியிட்டுள்ள 'Sulgi Hymn B & C' என்ற நூலிலிருந்து சில வரிகள், கீழே தரப்படுகின்றன. குமரி நாட்டிலே கல்வி அடைந்திருந்த மேன்மையை இவ்வரிகள் தெளிவாக உணர்த்தும்.

309. é gešt̆u-Nidaba-mul én-du-ĝà-ka

In the 'House of Learning' of Nidaba, the splendent, there are my songs.

இல் கெஷ்து நிடபைமுல் என்டுஉ ஙா(அ)கம்

விளக்கம்: é > இல், gesth > காது கேள்வி, mul > முல்: வெள்ளிய Nidaba > நிடபை, கலைமகள். én - du > என்டுஉ: செய்யப்பட்ட சொற்கள்—பாடல்கள். gá > ஙா > நா, யா.—எம்.

310. nim-še Nibru-a ki-gal-la bi-Du (up North, in Nippur they are entered into the "Large Place")

நிம்சேய் நிப்பூர் கீழ்கள்ள இடு-பி

விளக்கம்: nim > நீம் > நீள்: நிவர்ந்த, உயர்ந்த. gal-la > கள்ள: பெரிய, அகன்ற, உயர்ந்த. ki-gal-la > கள்ள: கீழ்: பெரிய இடம்.

311. šud é kur-ra ki ḫé-ús- sa-mu-uš

(In order that my homage should be establi hed in the Ekur)

312. dub-sar ḫé-du šu-ni ḫé-ib -dib-bé

The scribe will go and take them into his hand.

313. nar-ḫé-du gù ḫu-mu-un -ni-ri-dé

(The singer will go and perform them)

சூடு இல் குற்ற கீழ் சால் மோஉஷ் ஏய்யிச (?)
துப்பு சாற்ற ஏயிடு செய்நி அடைப்பி யிப்இ
நார் ஏயிடு கூ நிரித்தேவும் முன்

விளக்கம்: dub > துப்பு: களிமண் ஓடுகள். அக்காலத்து இத் தன்மைய ஓடுகளிலேயே கோல்களைக் கொண்டு எழுத்துக்கள் கீரப்பட்டன. இவ்வாறு எழுதுவதற்குச் சிறுவர்கள் கற்றுக்கொண்ட இடம் 'é- dub -ba' (> இல் துப்ப) — 'துப்பது இல்' எனப் பட்டது.

sar > சாற்று: வாசித்தல், dub-sar > துப்புசாற்று. ஆசிரியன், எழுத்தாளன். šar-ra > சாற்றன் > சாத்தன், (?)

šu > செய் > கை. dib-be > அடைப்பி.

hé-ib -dib-bé > அடைப்பியிப்பி; 'hè' இங்கு இறந்தகால இடைநிலை; -ib-. பிறவினை குறிக்கும் இடைநிலை (causative infix)

nar > நார்: பாட்டு, பாடுநன். இதனடியாகவே 'நாரதர்' என்ற வடச்சொல் வந்திருக்க வேண்டும்.

gu > கூ: பாட்டு. ni-ri-dé > நிரித்து. ஏ — 'நிருத்தம்' என்று வடமொழியில் வழங்குகிறது.

ni-ri-, ne-ri > நிறி, நெறி > நடி எனினும் அமையும்.

314 è-dub -ba-a da-ri ḫur nu-kur -ru-dam

In the edubba they will last, things never to be changed.

இல் துப்பய்ய தரி உரு நூ கூற்று தம்.

விளக்கம்: è-dub -ba-a > இல் துப்பய்ய: துப்பது இல்லது. இங்கு அகர ஈறு பெயரெச்ச வினைசொல்லின் ஈறாகவும், இட வேற்றுமை உருபாகவும் வருகிறது.

nu- > நூ. இன்மைச் சொல். பிறவிடங்களில் na, na-an, ni, ma-, la- என்றும் வரும். na- > la- > இல, அல. da-ri > தரி: தர்-இ (?) தர் — நிலைத்து நிற்பது. இதனடியாகத் 'தருமம்' என்ற சொல் வந்திருக்கக் கூடும்.

315. ki-umún da-ri ḫur nu-šilig-ge -dam

(In the "Academy" they will, be everlasting,
things never to be changed.)

கிழ்முன்உ தரி உரு நூ சிலைக்குதம்

விளக்கம் : ki - umún = ki > mún > கீழ்முன் : முன்னு கிழம் - மன்று. மக்கள் முன்னும் இடம் என்றோ மன்னது அவை என்றோ பொருள் படும். umún mún, = mu - un > மன், மன்னன் - அரசன். உரையாசிரியர்கள் 'முன்னும் இடம்' - அதா

வது கல்விச்சாலை என்றும் பொருள் கொள்வர். திரு காஸ்டலினோ அவர்கள் தமது உரையில் வேறொரு இடத்திலிருந்து கீழ் வரும் வரியையும் கொடுப்பர்.

sig - ba nar - lugal. ē - umùn - gu - la - ke ne
(wool stipends to the singers of the king in the great 'academy')
சிக்குப நார்உளுகள் இல்முன்உ கொழுகினே.

நார் உளுகள் - அரசனைப் பாடுவோர். பிற்காலத்து இத் தன்மையோர்களே பாடிப் பரிசில் பெறும் புலவர்களாவும் பாணர் களாயும் விறலிகளாவும் ஆகியிருக்கின்றனர் போல் தெரிகிறது.

இங்குக் குறிக்கப்படும் 'இல் முன்னு' தமிழ்ச் சங்கமாகப் பிற் காலத்து குறிக்கப்பட்டிருக்கவேண்டும். பல பெரும் நூற்களைக் கொண்டதும் புலவர்களைக் கொண்டதுமான ஓர் பெரும் பல் கலைகழகமே அது என்பதுவும் இவ்வரிகளால் தெரியவரும் உண்மைகள்.

முதற் சங்கம் இருந்ததை ஐயுற்று அரற்றுவோர் இனி மேலாவது உண்மையை உணர்ந்து தெளிவு பெறுவார்களாக. இரண்டாம் சங்கம் வடநாட்டில் இருந்தமையைத் தக்க சான்று களுடன் பிற கட்டுரைகளில் விளக்குவம்.

**II குமரி நாடு அழிந்ததை விளக்கும் சில வரிகள்**

இவ்வரிகளும் S. N Kramer அவர்களின் 'Lamentations over the Distruction of Ur' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

137. u - ba u - dé EN ba - sig - sig - ga - ba

(On that day, after the lord had been over come by the storms.)

ஊப ஊயித்தே ஏன் சீக்கு சீக்குப, அப்ப

விளக்கம் : u > ஊ : நாள், வளி என்ற பொருளை இங்கு தரும். 'உவா' 'ஊது' என்ற சொற்களைக் காண்க. šig > சீக்கு: அழித்தல். - ba > அப்ப : அப்பொழுது. ba - 'ப' - பன்மைச் சுட்டு.

138. Nin - da urù - ni ba - an - da - gul - la - ba

(After, inspite of the 'lady', her city has been destroyed)
நின் - ஒரு (?) ஊருநீ கொல்லயிடுபான் அப்ப.

விளக்கம் : gul > கொல், குல்: அழித்தல். -da- : 'இடு' எனும் துணைவினை. ba - an – பான் : உயர்திணைச் சுட்டு (?)

140. urù - mu gul - gul - lu - ba im - mi in NE-eš-a-ba
(After they had commanded the utter destruction of my city)

ஊருமோ கொல்கொல்லுப NE யிம்மின் யிசு அப்ப.

விளக்கம் : - eš > இசு : உயர்திணைப் பன்மைச் சுட்டு. 'NE' வாசிக்க வாரா குறி. - im - : இறந்தகால இடைநிலை. mi-in >மின் : உயர்திணை சுட்டு. mu > மோ : இங்கு தன்மை உயர்திணைச் சுட்டு.

142. ukù - bi ug - gi – da ā mu - un - ag - eš - a - ba

(After they had ordered that the people be killed)
உக்கு - பி உக்கிட ஆ(ணை) முன்ஆக்யிசு அப்ப

விளக்கம் :

ukù > உக்கு, உகம் : ukin lu > u - lu - kú > உலகு : மக்கள்.

ug - gi > உக்கு : மக்குதல், அழிதல். ā > ஆ, ஆணை.

145. āg > ஆக்கு : துணை வினை.

An - ra a - i - bi - mā me - e hé - im - ma - na - de

(To Anu the water of my eye verily I poured)

அன்ற ஆல்இபி மாஅ மெய்யே இடுயிம்மன

விளக்கம் : - ra > - ற > ட : இடம் = : மலையாளத்தில் - 'ற' என்ற இடவேற்றுமை உருபு இன்றும் வழங்குகிறது.

a - i - bi - mā = ஆல் இமை எம்ம ; a- > ஆல், ஆம், ஆம்: நீர் i - bi > i - mi : இமை — கண்கள். mā = mu - a > (எ)ம்ம.

147. urú - mù mam - ba - gul - lu hę – me – ne - dug
(Let not my city be destroyed', verily I said unto them)

ஊருமோ கொல்லு பாணாம் தூக்குயிம்மேனே

விளக்கம்: nam – ba > ba - nam = பாணாம் > வேணாம் > வேண்டாம். dug > தூக்கு = செப்பல். பிற்காலத்து இது 'கிளவி' என்ற குறிப்புடையதாயும், செய்யுள் உறுப்பு ஒன்றதாயும் பொருள் மாறிற்று போலும்.

163. ukú - bi ug - gi - da na-ām - ba ha - ba tar - ri - eš
(That its people be killed, as its fate verily they decreed)

உக்குபி உக்கிட நாஅம்ப அபன் தோற்றியிசு

விளக்கம் : na - ām > நாஅம், நாயம் > நியாயம்: ஆணை, விதி. இதுவும் குமரித் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்றதே. tar–ri > தோற்றி ; தேற்றி எனினும் அமையும்.

169. mu-ul-lil-li dug-ga-é a-ni šu nu-bal-e-dé
(Enlil alters not the command which he has issued)
மூல்லில்லே தூக்கியனை செய் நூ வலையித்தே.

விளக்கம் : bal-e > வலை — வலைத்தல். su > செய் > கை கீழ்க்காணும் வரிகளையும் காண்க.

77. nin-in-é ḫul-a-ta urú-ni Ir-ri ba-an-di-ni-Ib-gar

78. Nanna-in kalam-ba-an-da-til-la

79. urim-e a-nir-ra bar ba-da-an-tab

Because of the lord, whose house has been attacked, his city was given over to tears.

Because of Nanna, whose land had perished, Ur intensified its lament.

நின் உளு இல் ஒல்லியத் ந ஊருனே ஈரி(ல்) கார்த்தி னிப்பான்
நன்னன் உளு களம் தொலைத்தபன்
ஊரிம்மே அந்நீர பார் தபத்த அன்

விளக்கம் : lu > உளு > ஆளு ḫul > ஒல், ஒழ் - ஒழிந்த, உல்கிய iv > ஈச் : நீர் - இங்கு கண்ணீர். ? > இல், இடவேற்றுமை உருபு. gar > கார், கர் : செய் எனும் துணைவினை. இதனால் இம் முக்கிய சொல் தமிழ்ச் சொல்லே. குமரித் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்ற பழையதொரு சொல் என்பது தெளிவாகிறது. குமரித்தமிழில் வடமொழியிற் போன்று பல விடங்களில் துணைவினையாகப் பெரிதும் பயில்கிறது.

kalam > களம் : நிலம், நாடு. til - la tir - ra > தீர், தொலை - இல்லாதாதல்.

a - nir - ra > a (m) - nir - ra > அந்நீர், அய் 'அம்' இங்கு மிகுதியைக் குறிக்கும். bar > பார், பேர் : மிகவும். tab > தப > தவ : பெரிது படுத்துதல். தொல், உரி இயல் 'உறு தவ நனியென வரூஉம் மூன்றும். மிகுதி செய்யும் பொருள் என்ப'.

மேற் கொடுக்கப்பட்ட வரிகளால், இளங்கோவடிகளும் நக்கீரனாரும் குறிப்பிட்டது போன்று, குமரி நாடு அழிந்தமை ஓர் உண்மையான நிகழ்ச்சியே, பொய்யல்ல என்பது உறுதி

யாகிறது. நாடுகளும், வீடுகளும் உடமைகளும் எல்லாம் அழிந்தன; பெரும் புயல்கள் மக்களைச் சிதறியோடச் செய்தன, குழந்தைகள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டனர், கன்னிகளும் வாலிபர்களும் அடிமைகளாய் கொண்டு செல்லப்பட்டனர், கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் ஆறுகளையும் நீர்நிலை களையும் நிறைத்தன என்ற குறிப்பெல்லாம் பிற வரிகளில் கிடக்கிறது. இது நடந்தது சற்றேறக்குறைய கி. மு. 2000. இதற்குப் பின்னரே எஞ்சியோர் தாம் அறிந்து வைத்திருந்த, வாணிபத் தொடரால் தெரிந்து வைத்திருந்த பிற நாடுகளுக்கு சென்றிருத்தல் வேண்டும்.

இனி தமிழ்வடிவம் தெள்ளித்தாய் உணருவகையில் இருக் கின்ற சில வரிகளைக் காண்பம். இவ்வரிகள் Bendt Alster என்பார் உரை எழுதி வெளியிட்டுள்ள 'Dumuji's Dream' என்ற நூலிருந்து எடுக்கப்பட்டவை.

2. gurušša-ga-nè ஈர் im-si edin-šè ba-ra-é

The lad, his heart was filled with tears, he went out to the plain.

குறுசி சாஅகனே ஈர் சீயிம் ஏதின்சேய் புறஏய்

விளக்கம்: guruš > குறுசி: குறுமகள், குறுமகன என்ற சொற் களைக் காண்க. இங்கு '-ŝ' உயர்திணைச் சுட்டென தெரிகிறது.

im-si > சீயிம்; சீ— நிரைத்தல், கொடுத்தல் என்பன பொருளது. edi > ஏதின், ஏதில்: வெளிப்புறம் ba-ra > புறம் é > ஏய்: ஏழுதல்.

4. gidri gú-na mu-un-di-lá ilu mu-un-di-di

He cried a stick on his shoulder, and cried again and again,

திகிரி குவ்வுன அலயிடுமுன் அழு இடியிடு முன்

விளக்கம்: gidri > திகிரி — எழுத்து பிறழ்ச்சி lā > அல, உல -di- > இடு என்னும் துணைவினை. இரட்டித்து வருதல் தொடர்ச்சி குறிக்கும் போலும்.

6. edin lu gar-ù ambar gù gar-ú

o plain, set up a lament, o swamp set up a lament

ஏதின் அழு கருஉ ஆம்பர் கூ கருஉ

விளக்கம்: gar-u > கருஉ-செய். இங்கு '-ù' எனும் உகரம் ஏவல்நிலை வினைச் சொல்லெனக் காட்டும் போலும்.

ambar > ஆம்பர், ஆம்பல் சேறு நிறைந்த இடம் 'gar-u' வடமொழியில் 'குரு' என்றும், 'கர்' என்றும் விளங்கும்.

9. ama-mu dur-tur-mu gú ḫé-em-me
my mother, my Duttur, will call.

அம்மாமோ துர்த்துர்மோ கூவியும்மே

விளக்கம்: ama > அம்மா ḫé-em-me > யிம்மே 'ḫé-em' இங்கு எதிர்காலத்தைக் குறிக்கும் காலஇடைச்சொல்.

33. an ja-am-k-ùmu kak - ta-là-a kak-ta - ba-ra-an-si-ig
my pure drinking cup was tormdown from the peg where it hung

அஞ்சம் கோமோ கொக்கித்து அலையிய கொக்கித்து புறன் சிக்கு

விளக்கம்: an-ja-am > அஞ்சம் > அஞ்சனம்(?)

kù > கோ; மாசற்ற, தூய kak > கொக், கொகி.

50 lù-ḫul-gàl-e iji-a im-mu-e-né-dab-bé
The evil men catching you inside the enclosure

உளு ஒல் கள்ளே இஞ்சிய அடைப்பியிம்முயினே

விளக்கம்: Iji > இஞ்சி; சுவர்களால், சூழப்பெற்ற மனை.

'இஞ்சி சூழ் மதுரை' என்பன போன்ற சொற்களைக் காண்க.

-im- :இங்கு இறந்தகால இடைநிலை. mu-e-né- >mù-e-re >மோர். ஏ >மார்-ஏ. உயர்திணைப் பன்மைச் சுட்டு.

89. šeṣ-mu gal-á-ju imši-re-š sag ù-a sub-ù

My brother, It is your demon: coming against you!
Duck (your) head in the grass

சேய்மோ கள்ளர்நுவ் சேர்யிசுயிம் சாங்ஙி உர்அ சூப்பு

விளக்கம்: ṣeš >சேய்: பொருள் மாறியுள்ளது. 'சிசு' என்ற சொல்லையும் காண்க. gal-là கள்ளர் > ju >நு:நும். ši-re > சேர், சார், சரி (சரிதல்) என்றும் அமையும். ù>உர்: செடிகொடிகள்; புல் வடமொழியில் ஆள்கிறது. šub-ú> சூப்பு(?) 'சூம்பு' என்ற சொல்லையும் காண்க

91 nin mu sag ù-a ga-an-sub ki-mu na-ab-pà-dà

My sister! I will duck down (my) head in the grass. Show (them) not My place.

நின்மோ சாங்ஙி உர்அ சூப்புகான் கீழ்மோ நா அவ்பாஅயிடே

விளக்கம். ga-an> கான், ஙான்> நான். na> la = இல்-pà-dè > பாஅயிடே வெளியிடல்.

125+126. tukul-sag kud -a ur-rà la-a

lugal- ra du-mu- uri-ma min-àm mu-un-ši-re-eš

with head crusing maces pound to their loins, the two sons of Ur moved against the king.

சாங்ஙி துகள் குட ஊர்அ அலேய உலுகள்ன்ற தமுஊரிம்ம மின் ஆம் முன்சேர்யிசு

விளக்கம்: tukul-sag-kuet-a > சென்னிதுகள். குடம்: பொருள் வெளிப்படை ur > ஊர் : தொடை.

150. dumu-ji-dé e-a-ra-li-ka mu-ni-in-dab-bé-ne

They caught Dumuji in the ditches of Arali.

தமுழித்தே ஏஅரளியகம்(ம்) அடைப்பினே முனின்

விளக்கம் : e > ஏ > வாய் (?) -ka > அகம். பிறவிடங்களில் இவ்வேற்றுமை உருபு '*à* kam' என்றே வழங்குகிறது.

153. uru-a nin-mu mu-un-ti-le-en ku-li-mu mu-un-ug-ge-en

In the city my sister saved my life, but my friend caused my death.

ஊருஅ நின்மோ தில்லெயென்முன் குலிமோ உக்கியென்முன்

விளக்கம் : ti-le > தில்லே : தழைத்தல் நிலைப்பெறல். ku-li > குலி kul > குல், குலம் (?) 'இகுளி' 'கூளி' என்ற இதே பொருள்படும் சொற்களையும் காண்க.

154. dumu nin-e sila-a hé-en-gub lù-ne ḫé hé-su-ub-bé

Let (my) sister leave a child in the street, let it be kissed.

தமு நின்னே சாலைய குப்புகியென், உளுனேசசப்பே

விளக்கம் : sila > சாலே hé-en > இன்-ஏது நுதலியகிளவி உருபு. su-ub-be > சப்பே -- சப்புதல்.

157. gu mu-un-na-sur-ru-ne

They twisted a cord for him

கயிர் முன்ன சுற்றுயினே

விளக்கம். gu > க > கர் > கயிர் ! mu-un-na > முன்னி(?) sur-au > சுற்று : திரித்தல்.

இதுகாறும் கொடுக்கப்பட்டுள்ள வரிகளில் விளங்கும் மொழி தமிழே. இன்றும் வழங்கிவரும் பல தூய தமிழ்ச்சொற்கள் பொருளிலும் உருவிலும் மாற்றமில்லாது விளங்குவதைக் காண்க. இலக்கண விதிகளில் சில மாற்றங்கள், வேறுபாடுகள் இருப்பினும் ஒற்றுமைக் கூறுகளே மிகுதியாக இருப்பதைக் காண்க.

சுமேரு மக்கள் குமரித்தமிழர்களே, சுமேரு மொழி குமரித் தமிழே. ஐயம் போக்கி இனியாகிலும் தமிழ் மக்கள் ஆவன செய்தல் வேண்டும். தமிழ் மக்களது, திராவிட மக்களது வரலாற்றிலே இனி ஓர் புரட்சியே தோன்றும்.

குறிப்புகள்

1. காண்க Ref. 7. இக்கட்டுரையில் ஏறக்குறைய நானூறு சொற்கள் சுமேரு இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டு தமிழ், ஏனைய திராவிடமொழிச் சொற்களுடன் அவை உருவிலும் பொருளிலும் ஒன்றுவது விளக்கப்பட்டுள்ளது. எழுத்தாராய்வும் இலக்கண ஆராய்வும் சிறிது உண்டு.

2. S.N. Kramer, Ref. 6. பக்கங்கள் 6,7,&8. இங்குப் பண்டைய எழுத்தாளர்களின் தவறுகளும், வாசிப்பதில் சுமேரு அறிஞர்களால் கடைப்பிடிக்கப்பட்டுள்ள தவறான சில நியதிகளையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். சுமேரு அறிஞர்கள் சந்திகளால் ஏற்படும் ஒலியுருவ மாற்றங்களைத் தெளிவாக உணரவில்லை என்றும் தெரிகிறது. வாசிப்பதிலும் தடுமாற்றங்களும் ஐயங்களும் பல. 'ற' 'ர' வேற்றுமைகள் சுமேருவில் உண்டு. ஆயின் வாசிப்பில் இல்லை. 'g' என்று குறிக்கப்படும் ஒலி சில சமயங்களில் 'n' என்றும் குறிக்கப்படும். சிலர் 'g̃' என்றும் குறிக்கிறார்கள். இது 'ங' என்ற தமிழ் எழுத்து என்பதே இக்கூற்றுகளால் தெளிவுறும்.

3. சுமேரு மொழியின் பெயர்ச்சொல், வினைச்சொல் உள்ளமைப்புகளும், தொடரியல் நியதிகளும் ஆராயப்பட்டு வருகின்றன. இயக்கவிலக்கணம் கூறும் ஆய்வுநெறிகள் வழி, சுமேருவின் கிளவியாக்க நியதிகள் சங்கத்தமிழிற்கு முற்பட்ட ஓர் நிலையைக் குறிக்கிறது என்று தெளிவுறுத்தப்படும்.

## துணைநூல்கள்

1. தேவநேயப்பாவாணர், 1973
வேர்ச் சொற் கட்டுரைகள்,
கழக வெளியீடு : சென்னை.

2. Alster, Bendt, 1972
*Dumuzi's Dream*
Akacemisk Forlog: Copenhagen.

3. Castellino, G.R., 1972
*Two Sulqi Hymns B & C,*
Instituto Di Studi Del Vicino Oriente : Univ. D Roma.

4. Hallo, W. & J. Van Dijk, 1968
*Nin Me Sar-ra,* New Haven.

5. Kutscher, Raphael, 1975
*A-ab-ha hu-luh ha*
Yale University Press : New Haven & London.

6. Kramer. S.N.
*Lamentations over the Destruction of Ur*
The Oriental Inst. of the Univ. of Chicago, Assyriologial Studies, No. 12.

7. Loganatha Muttarayan, K., 1975
*Sumerian: Tamil of The First Cankam*
Journal of Tamil Studies, IITS : Madras.

## தேசியவாதிகளும் சொல்லாட்சியும்

சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் ஆகிய உயர்ந்த கொள்கைகளை மக்களிடையே பரப்பும் பணியைத் தேசியவாதிகள் மேற்கொண்டனராதலால், அந்தப் பணிக்கு வெற்றி தேடும் பிரச்சாரக் கருவியாக தமிழ் உரைநடையைப் பயன்படுத்தினராதலால் புதிய புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் படைத்துத் தமிழ் மொழியை வளர்த்தனர்.

மகாகவி பாரதியார் 'சுதந்திரம்' என்பதனை 'விடுதலை' என்றும் 'கம்யூனிசம்' என்பதனைப் 'பொதுவுடமை' என்றும் தமிழில் கூறினார். பாரதியார் புதிதாகத் தந்த இந்தச் சொற்கள் தமிழக அரசியல் வட்டாரத்திலே இன்று மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிட்டன.

திரு. வி. க. அவர்கள் 'பார்லிமெண்ட்' என்ற ஆங்கிலச் சொல்லைப் 'பாராளுமன்றம்' என்றும் 'மகாத்மா' என்பதனை 'அடிகள்' என்றும் தமிழ்ப்படுத்தினார். இன்னும் வ. உ. சிதம்பரனார், வ. வெ. சு. ஐயர், சுப்பிரமணியசிவா, 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகிய தேசியவாதிகள் ஏராளமான பிற மொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்தினர்.

பத்திரிகை உலகத்தை எடுத்துக்கொண்டால், கருத்தோட்டத்தையும் கவர்ச்சியையும் தரக்கூடிய எத்தனை எத்தனையோ புதிய சொற்களைப் படைத்துத் தந்த பெருமை தேசியவாதிகளுக்குண்டு. தேசியவாதிகள், உரைநடையில் - ஏன், கவிதைநடையில் எளிய மக்களுக்குப் பயன்படத்தக்கவகையில் மறுமலர்ச்சி கண்டில்லையானால், இந்தியாவிலுள்ள பிரதேச மொழிகள் எல்லாமே வளர்ச்சியற்றுப்போயிருக்கும். ஆங்கில ஆதிக்கம் இப்போதிருப்பதினும் இன்னும் அதிகக் கொடுமை மிக்கதாக இருந்திருக்கும். அந்த விபத்திலிருந்து பிரதேச மொழிகளைக் காத்து, வளர்த்து, அவற்றிற்குப் புதுவாழ்வளித்த பெருமை இந்திய தேசிய வாதிகளுக்கே உரியதாகும். ஆனால், இந்த உண்மை காலந்தோறும் தமிழ் வளர்ந்து வந்த வரலாற்றைக் கூறும் நூல்களிலே எந்த ஒன்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை.

டாக்டர் ம. பொ. சிவஞானம்

-விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு, பக்கம் 170-71 (1970), இன்பநிலையம்: சென்னை.

மொழியியல் 5, 4. (1982)

# ஒலியனியல் விதிகள்

என். இராமசாமி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்.

## விதிகள்

பிறப்பொலியனியலில் (generative phonology) ஒலியனியல் உள்அமைப் (underlying representation) பிலுள்ள வரன்முறை ஒலியன்களை வரன்முறை ஒலிகளாகக் கொண்டு வருவதற்குப் பயன்படும் விதிகளுக்கு ஒலியனியல் விதிகள் என்று பெயர். ஒலியனியல் விதிகளில் பல வகைகள் உள்ளன. மேலும் பலவித அடைப்புக்குறிகள் ஒலியனியல் விதிகளில் பயன்படுத்தப்படு கின்றன. எனவே, இக்கட்டுரையின் முதற்பகுதியில் சில ஒலி யனியல் விதிகளைப் பற்றியும் அவற்றில் பயன்படக்கூடிய அடைப்புக் குறிகளைப் பற்றியும் காணலாம். ஒலியனியல் விதிகள் ஒலியனியல் உள் அமைப்பில் செயல்பட்டுப் புறஅமைப்பைக் கொண்டு வரும்பொழுது வரிசைப்படிச் செயல்படுகின்றன. இக் கட்டுரையின் இரண்டாவது பகுதியில் ஒலியனியல் விதிகளின் வரிசையைப் (order) பற்றியும் சிறிது காணலாம்.

ஒரு மொழியிலுள்ள இரண்டு உருபன்கள் ஒன்று சேரும் பொழுது அவ்வுருபன்களின் ஒலியன்களில் சில மாற்றங்கள் நிகழ்கின்றன. இம்மாற்றம் புணர்ச்சி என்று சொல்லப்படுகிறது. இப்புணர்ச்சியில் ஒலியன்கள் அடையும் மாற்றம் பலவிதமாகக் கருதப்படுகின்றன. அவையாவன: 1. மெய்பிரிதாதல் (assimilation) 2. மிகுதல் (addition) 3. குன்றல் (loss) 4 இடமாற்றம் (metathesis) என்பனவாகும். இவை போன்ற மாற்றங்கள் ஏன் மொழிகளில் ஏற்பட வேண்டும்? அவை எவ்வாறு ஏற்படுகின்றன? என்றெல்லாம் எண்ணத் தோன்றும். இம்மாற்றங்களுக்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். 1. நாம் சொற்களை உச்சரிக்கும் போது எல்லா ஒலியன்களையும் சரியாக உச்சரிக்காதது. 2 ஒரு ஒலியனுக்கு அருகிலுள்ள ஒலியன்களின் தூண்டுதல் (influence). உதாரணமாக, உயிர் ஒலிகள் உலகிலுள்ள பெரும்பான்மையான மொழிகளில் ஒலிப்புள்ள ஒலிகளாக உள்ளன. இவ்வுயிர் ஒலிகளுக்கிடையில் வரும் ஒலிகள் பெரும்பாலும் ஒலிப்புள்ள ஒலிகளாகவோ அன்றித் தொடர் ஒலிகளாகவோ அமைந்திருக்கும். மேலும் மூக்கொலி (nasal) க்கு முன்னாலும் பின்னாலும் வரும் ஒலிகளில் மூக்கொலியின் தூண்டுதல் இருக்கும். இத்தூண்டுதல் தொடர்ந்தும் அதிகமாகவும் ஆகுமானால், அவ்வொலிகள் நாளடைவில் மூக்கின (nasalization) மாக மாறக்கூடும். இன்னும் கிளை (க் இ ள் ஐ), கிண்ணம் (க் இ ண் ண் அ ம்), கீற்று (க் ஈ ற் ற் உ) போன்ற சொற்களின் முதலில் வரும் [க்] என்ற பின்னண்ண ஒலிக்குப் பின்னால் வருவது [இ], [ஈ] போன்ற இடையண்ண ஒலிகள். இவ்விடையண்ண ஒலிகளின் தூண்டுதலால் [க்] என்ற பின்னண்ண ஒலியானது சரியாகப் பின்னண்ணத்தில் ஒலிக்காமல் சற்று முன்னால் தள்ளி ஒலிக்கப்படுகிறது. கூடு (க் ஊ ட் உ), கூந்தல் (க் ஊ ந் த் அ ல்) போன்ற சொற்களிலுள்ள [க்] என்ற பின்னண்ண ஒலிக்குப் பின்னால் வருவது [ஊ] என்ற பின்னண்ண ஒலி. எனவே, இங்கு [க்] சரியாகப் பின்னண்ணத்தில் ஒலிக்கப் படுகிறது. மேலும் 'படித்தான்' என்ற சொல்லிலுள்ள [த் த்] என்ற முன்னண்ண ஒலியன் முன்னால் உள்ள [இ] என்ற இடையண்ண ஒலியனின் தூண்டுதலால் [ச்ச்] என்ற ஒலியன்களாக 'படிச்சான்' என்று பேச்சு வழக்கில் மாறு

வதைக் காணலாம். எனவே ஒரு ஒலியனின் தூண்டுதலால் வேறு ஒரு ஒலியனில் மாற்றம் ஏற்படுவதை இவற்றின் மூலம் அறியலாம்.

இவ்வாறு ஒலியன்களில் ஏற்படும் மாற்றங்களை [த்] என்ற ஒலியன் [ச்] என்று மாறியது என்றும் [ஆ] என்ற ஒலியன் [ஆ] (ன்)என்ற மூக்கின ஒலியாக மாறியது என்றும் சொல்லலாம் அல்லது இவ்வொலியன்களைப் பயன்படுத்திக் கீழ்வருமாறு விதி கள் போலவும் சொல்லலாம்.

1. [த்த்] → [ச்ச்] / இ—

~

2. [ஆ] → [ஆ] ன்—

அல்லது அவ்வொலியன்களின் இயல்புகளைப் பயன்படுத்தி விதிகள் போலவும் சொல்லலாம். உதாரணமாக [த்] என்ற ஒலியன் [ச்] என்று மாறுவதை இவ்வொலியன்களின் சிறப்பியல்பு களைப் பயன் படுத்திப் பின்வருமாறு ஒலியனியல் விதியால் சொல்லலாம்.

3.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| +மெய் | | +மெய் | | | |
| +தடை | | +தடை | / | +உயிர் | |
| +அடைப்பு | | −அடைப்பு | | −மெய் | |
| +முன் | → | −முன் | | +மேல் | — |
| +அணரி | | +அணரி | | −குவி | |
| −தொடர் | | −தொடர் | | +நீள் | |
| −ஒலிப்பு | | −ஒலிப்பு | | | |

இங்கு முதல் வரிசையிலுள்ள சிறப்பியல்புகள் [த்] என்ற ஒலியனை யும் இரண்டாவது வரிசையிலுள்ள சிறப்பியல்புகள் [ச்] என்ற ஒலியனையும், மூன்றாவது வரிசையிலுள்ள சிறப்பியல்புகள் [இ] என்ற ஒலியனையும் குறிக்கும்.

'→'.இக்குறி ஒரு ஒலியன் மற்றொரு ஒலியனாக மாறுவதைக் குறிக்கிறது.

'—' இந்தக்கோடு எந்தச் சூழ்நிலையில் மேற்கூறிய மாற்றம் அடைந்தது என்பதைக் குறிக்கிறது.

விதி 3-ல் உள்ள சிறப்பியல்புகளில் முதல் வரிசையிலுள்ள சிறப்பியல்புகளையும் இரண்டாவது வரிசையிலுள்ள சிறப்பியல்பு களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் [அடைப்பு] [முன்] என்ற இரு சிறப்பியல்புகளில் மட்டுமே வேறுபாடுள்ளது. மற்ற இயல்புகளில் எந்தவித வேறுபாடும் இல்லை. இயல்புகளில் வேறுபாடு இல்லாதபொழுது எல்லா இயல்புகளையும் எழுத வேண்டும் என்பது அவசியம் இல்லை. எந்தெந்த சிறப்பியல்புகளில் மாற்றங்கள் உள்ளனவோ அவைகளை மட்டும் இரண்டாவது வரிசையில் எழுதினால் போதும். எனவே விதி - 3ஐ 4 - ஆல் கீழ்வருமாறு சொல்லலாம்.

$$\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{தடை} \\ +\text{அடைப்பு} \\ +\text{முன்} \\ +\text{அணரி} \\ -\text{தொடர்} \\ -\text{ஒலிப்பு} \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} -\text{அடைப்பு} \\ -\text{முன்} \end{bmatrix} \Big/ \begin{bmatrix} -\text{உயிர்} \\ +\text{மெய்} \\ +\text{மேல்} \\ -\text{குவி} \\ -\text{நீள்} \end{bmatrix} \text{---}$$

ஒரு மொழியிலுள்ள எல்லா அடைப்பொலிகளுமே அடைப்புரசொலிகளாக மாறுகிறது என்று வைத்துக்கொள்வோமானால் அப்பொழுது இம்மாற்றத்தை விதி 3-ஆலோ அல்லது விதி 4-ஆலோ சொல்லியுள்ளது போல அதிகமான இயல்புகளைப் பயன்படுத்தி விதிகளை எழுதாமல் ஒரு சில இயல்புகளைப் பயன்படுத்திக் கீழ்வருமாறு சொல்லலாம்.

$$5. \quad \begin{bmatrix} +\text{தடை} \\ +\text{அடைப்பு} \\ -\text{தொடர்} \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} -\text{அடைப்பு} \\ -\text{தொடர்} \end{bmatrix}$$

இவ்விதி, அடைப்பொலி அடைப்புரசொலியாக மாறுகிறது என்பதைக் குறிக்கிறது. இவ்விதியில் [+அடைப்பு] என்ற இயல்பு [-அடைப்பு] என்று மாறியுள்ளது. எனவே இம்மாற்றத்தைச் சொல்லும் ஒலியனியல் விதியை இயல்பு மாற்றுவிதி (feature changing rule) என்று சொல்கிறோம்.

தமிழிலுள்ள ஒலிப்பிலா அடைப்பொலிகள் (Voiceless Stops) மூக்கொலிகளுக்குப் பின்னால் வரும்போது ஒலிப்புள்ள ஒலிகளாக மாறுகின்றன. இம்மாற்றத்தைக் கீழ்வருமாறு சொல்லலாம்.

6. [ + அடைப்பு, - ஒலிப்பு ] → [ + ஒலிப்பு] / [ + மெய், + மூக்கு ] —

இவ்விதியில் [-ஒலிப்பு] என்ற இயல்பு [+ஒலிப்பு] என்று மாறுகிறது. எனவே இவ்விதியும் விதி 5-ஐப் போல இயல்பு மாற்று விதியாகும்.

பிரஞ்சு மொழியில் மூக்கொலியும் வேறொரு மெய்யொலியும் சேர்ந்த மெய்யொலி இனை (cluster)க்கு முன்னால் உயிர் ஒலி மூக்கினமாக மாறுகிறது. மேலும், உயிர் ஒலி சொல்லின் இறுதியில் வரும் மூக்கொலிக்கு முன்னால் வரும்பொழுதும் மூக்கினமாக மாறுகிறது. இவ்விரு மாற்றங்களையும் கீழ்வரும் இரண்டு விதிகளில் சொல்லலாம்.

7. [+ உயிர்] → [+ மூக்கு] / - [ + மெய், + மூக்கு ] [+மெய்]

8. [+ உயிர்] → [+ மூக்கு] / - [ + மெய், + மூக்கு ] #

விதிகள் 7-ம், 8-ம் ஒரே மாற்றத்தைத்தான் சொல்லுகின்றன. நாம் இங்கே ஒரே மாற்றத்தை இரண்டு விதிகளில் சொல்லியுள்ளோம். இரண்டு விதிகளில் சொல்லும்பொழுது இரண்டும் வெவ்வேறு மாற்றங்கள் என்ற ஐயத்தை உண்டாக்கும். எனவே இரண்டு விதிகளையும் ஒரே விதியில் சொல்லுவது நல்லது. ஏனெனில் இரண்டு விதிகளும் சொல்வது ஒரே மாற்றம்; ஆனால் சூழ்நிலைகள் வேறு வேறு. எனவே மேற்கூறிய இரண்டு விதிகளையும் கீழ்வருமாறு ஒரே விதியில் சொல்லலாம்.

9. [+ உயிர்] [+ மூக்கு] / — [ + மெய், + மூக்கு ] { [+ மெய்], # }

இவ்விதியானது, மூக்கொலியைத் தொடர்ந்து மெய்யொலியோ அல்லது சொல் வரம்போ வருமானால், இவைகளுக்கு முன்னால் வரும் உயிர் ஒலி மூக்கினமாக மாறுகிறது என்று கூறுகிறது. விதிகள் 7, 8 ஆகிய இரண்டிலும் உள்ள சூழ்நிலைகளைச் சுருக்கி விதி-9ல் கூறியுள்ளோம். இவ்வாறு இரண்டு சூழ்நிலைகளையும் ஒரே விதியில் சொல்வதற்கு இங்கு இணையடைப்பைப் (brace bracket) பயன்படுத்தியுள்ளோம். வெவ்வேறு சூழ்நிலைகளில் ஒரே ஒலியன் வேறு ஒரு ஒலியனாக மாறும்பொழுது இணையடைப் பைக் கொண்டு அம்மாற்றங்களை ஒரே விதியில் சொல்ல முடியும் என்பதை விதி-9 நமக்குக் காட்டுகிறது.

கீழேயுள்ள இரண்டு விதிகளைப் பாருங்கள்:

10. $[+\text{உயிர்}] \rightarrow [+\text{நீள்}] \,/\, — [+\text{மெய்}] \begin{bmatrix} +\text{உயிர்} \\ +\text{நீள்} \end{bmatrix} \#$

11. $[+\text{உயிர்}] \rightarrow [+\text{நீள்}] \,/\, — [+\text{மெய்}] \#$

இவ்விரு விதிகளும் ஒரு மொழியில் இருப்பதாகக் கொள் வோம். இவ்விரண்டு விதிகளும் ஒரே மாற்றத்தைதான் சொல்லு கின்றன. ஆனால் அவைகளின் சூழ்நிலைகள் வேறுபாடுடையவை யாக உள்ளன. இரண்டு விதிகளின் சூழ்நிலைகளிலும் மெய் யொலியோடு சொல்வரம்புள்ளது. ஒரு விதியில் மட்டும் ஒரு உயிர் ஒலி அதிகமாக உள்ளது. எனவே சூழ்நிலையில் சிறிது மாற்றம் இருந்தாலும் இரண்டு விதிகளிலும் சொல்லப்படும் மாற்றம் ஒன்றாக உள்ளதால் இரண்டு விதிகளையும் ஒரே விதியில் சொல்லுவது நல்லது. விதிகள் 10, 11 ஆகிய இரண் டையும் கீழ்வருமாறு ஒரே விதியில் சொல்லலாம்.

12. $[+\text{உயிர்}] \rightarrow [+\text{நீள்}] \,/\, — [+\text{மெய்}] \left( \begin{bmatrix} +\text{உயிர்} \\ +\text{நீள்} \end{bmatrix} \right) \#$

இவ்விதியில் பயன்படுத்தப்பட்டுள்ள ( ) அடைப்புக்குறிக்கு தனிநிலை அடைப்பு (parenthesis bracket) என்று பெயர்.

இணையடைப்பும் தனிநிலையடைப்பும் விதிகளின் ஒரு பகுதி ஒரே மாதிரியாகவும் மறுபகுதி வேறாகவும் உள்ள பொழுது பயன்படுத்தப்படுகின்றன. ஒன்றுவிட்டச் (alternate) சூழ்நிலைகள் உள்ளபொழுது இணையடைப்புப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரே மாதிரி (similar) யான இரண்டு விதிகளில் ஒன்றின் குறிப்பீடு மற்றதில் இல்லாதபொழுது தனி நிலையடைப்புப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு விதியில் காணப்படும் வரையறை (restriction) மற்ற விதியில் இல்லாதபொழுது இணையடைப்புப் பயன்படுத்தப்படுகின்றது. இரண்டு விதிகளில் ஒரு விதி மட்டும் கூடுதலான வரையறை உடையதாக இருக்கும்பொழுது தனி நிலையடைப்புப் பயன்படுத்தப்படுகின்றது.

தமிழில் பேச்சுவழக்கில் சில சொற்களின் இறுதியில் வரும் 'ல்', 'ள்' ஆகிய ஒலியன்கள் நீக்கப்படுகின்றன. உதாரணமாக 'போனால்', 'வந்தாள்' என்ற சொற்கள் பேச்சு வழக்கில் முறையே 'போனா', 'வந்தா' என்று வருகின்றன. அதாவது ஒரு சொல்லிலுள்ள ஒலியன்களில் ஒரு ஒலியன் குறைந்து ஒலிக்கிறது. பல ஒலியன்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைவதால் இம்மாற்றத்தைக் 'குன்றல்' என்று சொல்கிறோம். இது போன்று ஒலியன்கள் குறைவதைக் கூறும் விதி 'குன்றல் விதி' என்று சொல்லப்படுகிறது. 'ல்', 'ள்' ஆகிய இரு ஒலியன்களும் சொல்லின் இறுதியில் வரும்பொழுது குன்றுவதை ஒரு விதியால் சொல்லலாம்.

13. $\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \end{bmatrix} \rightarrow \phi \; / \; -\#$

சொல்லின் இறுதியில் வரும் மூக்கொலிகள் பேச்சு வழக்கில் நீக்கப்படுகின்றன. மூக்கொலிகளுக்கு முன்னால் உள்ள உயிர் ஒலிகள் மூக்கினமாக மாறுகின்றன. உதாரணமாக 'வந்தான்' என்ற சொல் 'வந்தா என்றும் 'போனான்' என்ற சொல் 'போனா' என்றும் மாறிவருகின்றன. இங்கு குறிப்பிட்டச் சொற்களான 'வந்தான்', 'போனான்' என்ற சொற்களின் இறுதியில் உள்ள மூக்கொலிகள் குறைந்து ஒலிப்பதால் இம்மாற்றமும் 'குன்றல்' ஆகும். இம்மாற்றத்தைச் சொல்லும் விதியும் 'குன்றல் விதி'யே யாகும்.

14. $\begin{bmatrix} + \text{மெய்} \\ + \text{மூக்கு} \end{bmatrix} \rightarrow \phi \; / \; -\#$

'தலை' என்ற சொல்லும் 'ஆல்' என்ற விகுதியும் ஒன்று சேரும்பொழுது 'ய்' என்ற உடம்படுமெய் இடையில் வருகிறது. அதாவது இரண்டு உயிர் ஒலிகளுக்கு நடுவில் உடம்படுமெய் வருகிறது.

தலை + ஆல் → தலை + ய் + ஆல் → தலையால்

இப்புணர்ச்சியில் இரண்டு உருபன்களிலுள்ள ஒலியன்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. எனவே இம்மாற்றத்தை 'மிகுதல்' என்றும் இம்மாற்றத்தைச் சொல்லும் விதியை 'மிகுதல் விதி' என்றும் சொல்கிறோம்.

15. $\phi \rightarrow \begin{bmatrix} - \text{உயிர்} \\ - \text{மெய்} \\ + \text{மேல்} \end{bmatrix} \Big/ \; [+ \text{உயிர்}] \text{—} [+ \text{உயிர்}]$

மரம், மனம், பணம் போன்ற - 'அம்' என்று முடியும் சொற்களுடன் வேற்றுமை விகுதிகள் சேரும்பொழுது [-த்த்-] என்ற ஒலியன்கள் சேருகின்றன. இதைப் பின்வரும் உதாரணங் களில் காணலாம்.

மரம் + ஐ → மரம் + த்த் + ஐ → மரத்தை

மனம் + ஆல் → மனம் + த்த் + ஆல் → மனத்தால்

பணம் + ஒடு → பணம் + த்த் + ஒடு → பணத்தோடு

இங்கு இரு உருபன்கள் ஒன்று சேரும்பொழுது ஒலியன்களின் எண்ணிக்கை அதிகமாகிறது. எனவே இம்மாற்றமும் 'மிகுதல்' என்றே சொல்லப்படும். இம் மிகுதலைப் பின்வருமாறு கூறலாம்.

16. φ → | — + மெய் — 2
| + அடைப்பு
| + தடை
| + முள்
| + அணரி
| — — ஒலிப்பு — | / [– அம்] — + வேற்றுமை[1]

சில சொற்களில் மாற்றம் ஏற்படும்பொழுது ஒலியன்கள் இடம் மாறியமைகின்றன. உதாரணமாக 'எனக்கு' 'உனக்கு' என்ற சொற்கள் பிராமணர்கள் வழக்கில் 'னேக்கு' 'னோக்கு'[2] என்று வழங்கப்படுகின்றன. இம்மாற்றம், 'எனக்கு', 'உனக்கு' என்ற சொற்களின் முதலிலுள்ள உயிரெழுத்தும் இரண்டாவதாகவுள்ள மெய்யெழுத்தும் இடம் மாறி அமைவதால் ஏற்படுகிறது. இரு ஒலியன்கள் இடம் மாறி அமைவதால், இம்மாற்றத்தை 'இட மாற்றம்' என்று சொல்கிறோம். இம்மாற்றத்தைப் பின்வருமாறு கூறலாம்.

17. உயிர் மெய்

1 2 → மெய் உயிர்

2 1

அதாவது ஒரு வரிசையில் 1, 2 என்று இருக்கும் உயிர் ஒலியும் மெய்யொலியும் இடம் மாறி 2, 1 என்ற மெய்யொலியும் உயிர் ஒலியுமாகி வருகின்றன என்பதாகும்.

சில மாற்றங்களில் இரண்டு ஒலியன்கள் இணைந்து ஒரே ஒலியனாக மாறுகின்றன. உதாரணமாக [க்] என்ற ஒலியனும் [வ்] என்ற ஒலியனும் ஒன்றாக இணைந்தால், கிடைக்கும் ஒலியன் [க்$^{வ்}$] ($k^{w}$) என்றிருக்கும். இவ்வொலியனை இதழ்ச் சாயல் பின்னண்ண ஒலி (labialized velar stop) என்று சொல்கிறோம். [த்] என்ற ஒலியனும் [ய்] என்ற ஒலியனும் இணைந்தால் அது [த்$^{ய்}$] ($t^{y}$) என்ற ஒரு ஒலியனாக இருக்கும். இவ்வொலி இடையண்ணச் சாயல் அண்பல் அடைப்பொலி (palatalized dental stop) என்று சொல்லப்படுகின்றது.

தமிழில் சொல்லின் இறுதியில் வரும் மூக்கொலி மறைகிறது என்றும், முக்கொலிக்கு முன்னால் உள்ள உயிரொலி மூக்கினமாக மாறுகிறது என்றும் இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது. இம்மாற்றத்தை, உயிர் ஒலியும் மூக்கொலியும் இணைந்து மூக்கின ஒலியாக மாறியது என்று கொள்ளலாம். இவ்வாறு இரண்டு ஒலியன்கள் இணைந்து ஒரு ஒலியனாக மாறு வதை 'ஒன்றாதல்' (coalescence) என்று சொல்கிறோம்.

18. உயிர் மூக்கு
 1 2 → $\begin{bmatrix} 1 \\ + \text{மூக்கு} \end{bmatrix}$ $\phi$

அதாவது, ஒரு வரிசையிலுள்ள 1-ஆன உயிர் ஒலியும், 2-ஆன மூக்கொலியும் இணையும்பொழுது 1-ஆன உயிர் ஒலி மூக்கினமாக மாறுகிறது; 2-ஆன மூக்கொலி மறைகிறது என்பதாகும்.

தமிழ் மொழியில், புணர்ச்சியில் இரு உயிர் ஒலிகளுக்கிடையில் உடம்படுமெய் வரும் என்று முன்பு கூறப்பட்டது. இதைப் பின் வரும் சொற்களில் காணலாம்.

பள்ளி + இல் → பள்ளி + ய் + இல் → பள்ளியில்

கத்தி + ஆல் → கத்தி + ய் + ஆல் → கத்தியால்

கத்தி + ஓடு → கத்தி + ய் + ஓடு → கத்தியோடு

இவற்றில் 'இ', 'இ' என்ற உயிர் ஒலிகளுக்கிடையிலும் 'இ', ஆ' உயிர் ஒலிகளுக்கிடையிலும் 'இ', 'ஓ' என்ற உயிர் ஒலிகளுக் கிடையிலும் [ய்] என்ற ஒலியன் வருகிறது. இதை இவ்வாறு சொல்லலாம்.

19. $\phi$ → [ய்] / $\begin{Bmatrix} \text{இ — இ} \\ \text{இ — ஆ} \\ \text{இ — ஓ} \end{Bmatrix}$

கீழேயுள்ள சொற்களைக் கவனியுங்கள்.

பூ + ஓடு → பூ + வ் + ஓடு → பூவோடு

பூ + உடன் → பூ + வ் + உடன் → பூவுடன்

அம்மா + உடன் → அம்மா + வ் + உடன் → அம்மாவுடன்

இவற்றில் 'ஊ', 'ஓ' என்ற உயிர் ஒலிகளுக்கிடையிலும் 'ஊ' 'உ' என்ற உயிர் ஒலிகளுக்கிடையிலும் 'ஆ', 'உ' என்ற உயிர் ஒலிகளுக்கிடையிலும் [வ்] என்ற ஒலியன் வருகிறது. இதைப் பின்வருமாறு கூறலாம்.

$$20.\quad \phi \rightarrow [\text{வ்}] \,/\, \left\{ \begin{matrix} \text{ஊ} — \text{ஓ} \\ \text{ஊ} — \text{உ} \\ \text{ஆ} — \text{உ} \end{matrix} \right\}$$

விதி-19 இரண்டு உயிர் ஒலிகளுக்கிடையில் [ய்] என்ற உடம்படுமெய் வருகிறதென்று கூறுகிறது. விதி 20-ம் இரு உயிர் ஒலிகளுக்கிடையில் [வ்] என்ற உடம்படுமெய் வருகிறதென்று கூறுகிறது. எனவே இரு விதிகளையும் ஒரு விதியில் சொல்லுவது நல்லது. விதி 19-ல் மூன்று சூழ்நிலைகள் உள்ளன.

இவற்றை அப்படியேச் சொல்லாமல் சுருக்கிச் சொல்லலாம். முன்னாலுள்ள உயிர் 'முன்னுயிர்' ஆனால் உடம்படு மெய் [ய்] வரும்; முன்னாலுள்ள உயிர் 'பின்னுயிர்' என்றால் [வ்] வரும். எனவே விதிகள் 19, 20 இரண்டையும் முறையே விதிகள் 21, 22-ல் பின்வருமாறு சொல்லலாம்.

21. $\phi$ ⟶ [ய்] / முன் உயிர் — உயிர் ஒலி

22. $\phi$ ⟶ [வ்] / பின் உயிர் — உயிர் ஒலி

இவ்விரு விதிகளையும் சிறப்பியல்புகளின் உதவியால் ஒரே விதியில் பின்வருமாறு சொல்லலாம்.

$$23.\quad \phi \longrightarrow \begin{bmatrix} — \text{உயிர்} \\ — \text{மெய்} \\ \alpha\ \text{பின்} \end{bmatrix} \Big/ \begin{bmatrix} + \text{உயிர்} \\ \alpha\ \text{பின்} \end{bmatrix} - [+\text{உயிர்}]$$

$\alpha$— இதற்கு ஆல்பா (alpha) குறியீடு என்று பெயர். இயல்புகளின் தன்மை ஒரே மாதிரியாக உள்ளபொழுது இந்த ஆல்பா குறியீடு பயன் படுத்தப்படுகின்றது.

[ய்] என்ற உடம்படுமெய் [இ] என்ற முன்னுயிரிலிருந்தும் [வ்] என்ற உடம்படுமெய் [உ] என்ற பின்னுயிரிலிருந்தும் பிறப்பவை என்று கொள்ளுவோமானால் [ய்] என்பதை முன்னொலியாகவும் [வ்] என்பதைப் பின்னொலியாகவும் கொள்ளலாம். [பின்] [முன்] என்ற இரண்டு இயல்புகளையும் எடுத்துக் கொள்ளாமல் பின் என்ற ஒரு இயல்பை மட்டும் எடுத்துக் கொண்டு [+பின்] என்றால் பின்னொலிகளையும் [-பின்] என்றால் முன்னொலிகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். விதிகள் 21, 22 - ன்படி சூழ்நிலையில், முன்னால் முன்னுயிர் இருக்குமானால் [ய்] என்ற முன்னொலியும் பின்னுயிர் இருக்குமானால் [வ்] என்ற பின்னொலியும் வருகின்றன. அதாவது உயிர் ஒலி [+ பின்] என்றால் மிகுந்து வரும் ஒலியும் [+ பின்]; உயிர் ஒலி [– பின்] என்றால் மிகுந்து வரும் ஒலியும் [— பின்] ஆகும். இதுபோன்று இயல்புகளின் தன்மைகள் ஒரே மாதிரியாக உள்ளன என்பதைக் குறிக்கத்தான் இந்த [$\alpha$] குறியீட்டைப் பயன்படுத்துகிறோம்.

'கற்றான்' என்ற சொல்லைப் பின்வருமாறு உள்ளுரை அமைப்பி (underlying representation) லிருந்து கொண்டு வரலாம்.

| | |
|---|---|
| கல் + த்த் + ஆன் | (உள்ளுரை அமைப்பு) |
| கல் + ற்ற் + ஆன் | (த்த் → ற்ற் / ல் –) |
| கற் + ற்ற் + ஆன் | (ல் → ற் / — ற்) |
| கற்ற் + ஆன் | (ற் → $\phi$ / ற்ற் -) |
| கற்றான். | |

இம்மாற்றங்களில் [ல்] என்ற ஒலியன் [ற்] என்ற ஒலியனா மாறுவதைப் பின்வருமாறு சொல்லலாம்.

24. [ல்] → [ற்]$_3$ —அடைப்பொலி

'கேட்டான்' என்ற சொல்லை உள்ளுரை அமைப்பிலிருந்து பின்வருமாறு கொண்டு வரலாம்.

| | |
|---|---|
| கேள் + த்த் + ஆன் | (உள்ளுரை அமைப்பு) |
| கேள் + ட்ட் + ஆன் | (த்த் → ட்ட்/ள் -) |

கேட் + ட்ட் + ஆன்  (ள் ⟶ ட்/ -ட்)
கேட்ட் + ஆன்  (ட் → $\phi$ / ட்ட்—)
கேட்டான்

இம்மாற்றங்களில் [ள்] என்ற ஒலியன் [ட்] என்ற ஒலியனாக மாறுவதைப் பின்வருமாறு சொல்லலாம்.

25. [ள்] ⟶ [ட்] / —அடைப்பொலி

விதிகள் 24, 25 இரண்டையும் கவனித்துப்பார்த்தால் இரண்டிற்கும் உள்ள சில ஒற்றுமைகள் தெரிய வரும். [ல்], [ள்] ஆகிய இரண்டும் விளிம்பொலிகள். இவையிரண்டும் அடைப்பொலிகளுக்கு முன்னுல் வரும்பொழுது அடைப்பொலிகளாக மாறுகின்றன. எனவே இந்த இரண்டு விதிகளையும் ஒரே விதியில் சொல்ல முடியுமா என்று பார்க்க வேண்டும். இயல்புகளின் உதவியால் இவ்விரு விதிகளையும் பின்வரும் விதிகளில் சொல்லலாம்.

$$\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ +\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} +\text{அடைப்பு} \\ +\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \Big/ \text{—} [+\text{அடைப்பு}]$$

27. $$\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ -\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} +\text{அடைப்பு} \\ -\text{முன்} \\ +\text{அணரி} \end{bmatrix} \Big/ \text{—} [+\text{அடைப்பு}]$$

இவ்விருவிதிகளையும் கவனித்துப் பார்த்தால் விதி 26 -ல் விளிம்பொலி [ + முன்] என்று இருந்தால் அடைப்பொலியும் [ + முன்] என்றுள்ளது ; விதி 27 -ல் விளிம்பொலி [—முன்] என்றிருந்தால் அடைப்பொலியும் [— முன்] என்றுள்ளது.

விதி – 23 ல் ஒரு இயல்பின் தன்மை இரு இடங்களில் ஒன்றாக இருந்தபொழுது [α என்ற ஒரு குறியீட்டைப் பயன்படுத்தி

இரண்டு விதிகளை நன்றாகச் சொன்னோம். விதிகள் 26, 27 இரண்டிலும் [முன்], [அனரி] என்ற ஒரு இயல்புகளின் தன்மைகள் ஒரே மாதிரியாக உள்ளன. எனவே இங்கு [$\alpha$], [$\beta$] (beta) என்ற இரு குறியீடுகளைப் பயன்படுத்தி இவ்விரு விதிகளையும் பின்வருமாறு ஒரு விதியில் சொல்லலாம்.

28. $$\begin{bmatrix} +\text{மெய்} \\ +\text{விளிம்பு} \\ \alpha\ \text{முன்} \\ \beta\ \text{அஊரி} \end{bmatrix} \rightarrow \begin{bmatrix} +\text{அடைப்பு} \\ \alpha\ \text{முன்} \\ \beta\ \text{அணரி} \end{bmatrix} \Big/ \text{—}\ [+\ \text{அடைப்பு}]$$

இங்கு $\alpha$ - வின் தகுதி ஒரு இடத்தில் + ஆக இருந்தால் மற்ற இடத்திலும் + ஆக இருக்கும். ஒரு இடத்தில் — ஆக இருந்தால் மற்ற இடத்திலும் — ஆக இருக்கும். இதுபோலவே $\beta$ - வின் தகுதியும் இருக்கும். அதாவது விளிம்பொலியின் இயல்புகள் [+ முன்] [+ அணரி] என்றிருந்தால் அடைப்பொலியின் இயல்புகளும் [+ முன்] [+ அணரி] என்றிருக்கும். விளிம்பொலியின் இயல்புகள் [— முன்] [+ அணரி] என்றிருந்தால் அடைப்பொலியின் இயல்புகளும் [— முன்] [+ அணரி] என்றிருக்கும். எனவே விதிகள் 26, 27 ஆகிய இரண்டிலும் ஏற்படும் மாற்றங்களை இணைத்து ஒரே விதியில் சொல்லிவிடுகிறோம்.

## II விதி வரிசை

ஒலியனியல் விதிகள் உள்ளமைப்பில் செயல்பட்டு வெளியமைப்பைக் கொண்டு வரும்பொழுது வரிசைப்படிச் செயல்படுகின்றன. விதிகளின் வரிசை, ஒரு வரிசையிலுள்ள விதிகளின் தொடர்பைக் (relation) கொண்டு பலவிதமாகப் பிரிக்கப்படுகின்றன. இவற்றைப் பற்றிப் இங்குப் பார்க்கலாம்.

ஒலியனியல் விதியானது ஒரு அமைப்பில் தான் செயல்படத் தகுந்தச் சூழ்நிலை அமைந்திருக்குமானால் அவ்விதி அவ்வமைப்பில் செயல்படும். இவ்வாறு ஒரு விதி, செயல்பட்டுக் கிடைக்கக் கூடிய அமைப்பில் மற்றொரு விதியும் செயல்படத் தகுந்தச் சூழ்நிலை இருக்குமானால் அவ்விதியும் அவ்வமைப்பில்

செயல்படும். இவ்வாறு பலவிதிகள் ஒரு உள்ளமைப்பில் ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்பட்டுச் சரியான வெளியமைப்பைக் கொண்டு வருகின்றன. உதாரணமாகக் கீழேயுள்ள சில விதிகளையும் அவைகள் செயல்படுவதையும் பார்க்கலாம்.

1. [ந்த்] → [ண்ட்] / [ள்] —

2. [ள்] → $\phi$ / — [ண்ட்]

இவ்விதிகள் இரண்டும் 'கொள் > ந்த் > ஆன்' என்ற உள்ளமைப்பில் செயல்படுவதைக் கீழேக் காணலாம்.

கொள் > ந்த் > ஆன்[4]

கொள் > ண்ட் > ஆன் (விதி - 1)

கொ > ண்ட் > ஆன் (விதி - 2)

கொண்டான்

இங்கு இரண்டு விதிகள் ஒரு அமைப்பில் ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுகின்றன. அதாவது 'கொள் > ந்த் > ஆன்' என்ற அமைப்பில் விதி -1 முதலாவதாகவும், விதி -2 இரண்டாவதாகவும் செயல்பட்டுச் சரியான சொல்லான 'கொண்டான்' என்பதைக் கொண்டு வருகின்றன. முதல்விதிச் செயல்பட்டுக் கிடைக்கக்கூடிய அமைப்பில் இரண்டாவது விதிச் செயல்படத் தகுந்தச் சூழ்நிலையுள்ளது. எனவே இரண்டாவது விதி செயல்படுகின்றது. இவ்வாறு சில விதிகள் ஒரு குறிப்பிட்ட வரிசைப்படி ஒரு அமைப்பில் செயல்பட்டுச் சரியான சொல்லைக் கொண்டுவருமானால் அவ்வரிசையிலுள்ள விதிகளை நீள் வரிசை (linear ordering) என்று சொல்கிறோம். மேலேயுள்ள விதிகள் செயல்படும்பொழுது ஒரு குறிப்பிட்ட வரிசைப்படித்தான் செயல்பட்டன. ஒருவிதி ஒருமுறைதான் செயல்பட்டது. இவ் விதிகளின் வரிசையான 1, 2 என்பதை மாற்றி 2, 1 எனச் செயல்படச் செய்தால் என்ன நடக்கும் என்று எண்ணத் தோன்றும். விதிகளை மாற்றிச் செயல்படச் செய்தால் என்ன நடக்கும் என்பதைக் கீழேக் காணலாம்.

கொள் + ந்த் + ஆன்

கொள் + ந்த் + ஆன் (விதி 2 செயல்படத் தகுந்த சூழ் நிலையில்லை. எனவே விதி 2 செயல்படவில்லை).

கொள் + ண்ட் + ஆன் (விதி - 1)

* கொள்ண்டான்.

'கொள்ண்டான்' என்ற சொல் தமிழில் சரியான சொல் இல்லை. இதிலிருந்து விதிகள் ஒரு அமைப்பில் ஒரு குறிப்பிட்ட வரிசைப்படித்தான் செயல்பட முடியும் என்றும் அவ்வரிசை மாறு மானால் சரியான சொல்லைக் கொண்டு வர முடியாது என்றும் அறியலாம்.

'ஓடிற்று' என்ற சொல் எழுத்துத் தமிழில் உள்ளது. இச் சொல் 'ஓடிச்சு' என்று பேச்சு வழக்கில் வழங்கி வருகிறது. 'ஓடிற்று' என்ற சொல் 'ஓடித்து' என்று மாறிப் பின்னர் 'ஓடிச்சு' என்று மாறியுள்ளது. இம்மாற்றங்களில் முதலில் [ற்ற்] என்பது [த்த்] என்று மாறுகிறது; பின்னர் [த்த்], [ச்ச்] - ஆக மாறு கிறது. இம்மாற்றங்களை விதிகளின் மூலம் சொல்ல வேண்டு மானால் கீழ் வருமாறு சொல்லலாம்.

3. [ற்ற்] → [த்த்] [5]

4. [த்த்] → [ச்ச்]

இவ்விதிகள் இரண்டும், 'ஓடிற்று' என்ற சொல்லில் செயல் பட்டு 'ஓடிச்சு' என்ற சொல்லைக் கொண்டுவர வேண்டுமானால் மேலேயுள்ள வரிசைப்படித்தான் செயல்பட வேண்டும். இதைக் கீழேக் காணலாம்.

ஓடிற்ற் - உ (உள்ளமைப்பு)

ஓடித்த் - உ (விதி - 3)

ஓடிச்ச் - உ (விதி - 4)

ஓடிச்சு (வெளியமைப்பு)

ஓடிற்று' என்பது காலத்தால் முந்தியச் சொல். 'ஓடிச்சு' என்ற சொல் காலத்தால் பிற்பட்டது. காலத்தால் முற்பட்டச் சொல்லிலிருந்து பிற்பட்டச் சொல் அமைந்து வந்துள்ள மாற்றங்கள் படிப்படியாக நடந்து வந்துள்ளன. இம்மாற்றங்கள் குறிப்பிட்ட வரிசைப்படித்தான் நடந்து வந்துள்ளன என்பதை மேலேக் காட்டியுள்ள எடுத்துக்காட்டிலிருந்து அறியலாம். எனவே, இதிலிருந்தும் விதிகள் வரிசைப்படித்தான் செயல்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

விதி - 1, விதி 2 ஆகிய இரண்டு விதிகளும் ஒரு அமைப்பில் செயல்படுகின்றன. விதி - 1 செயல்பட்டுக் கிடைக்கும் வெளியமைப்பில் விதி - 2 செயல்படுகிறது. எனவே இவ்விரு விதிகளும் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையன என்று சொல்லலாம். விதி -3, விதி - 4 ஆகிய இரண்டு விதிகளும் வேறு ஒரு அமைப்பில் செயல்படுகின்றன. விதி - 3 செயல்பட்டுக் கிடைக்கக்கூடிய வெளியமைப்பில் விதி - 4 செயல்படுகின்றது. எனவே இவ்விரு விதிகளும் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையன என்று சொல்லலாம். ஆனால் விதி 1 - ம், விதி 4 - ம் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையன என்று சொல்ல முடியாது. ஏனெனில் விதி - 1 ஒரு அமைப்பிலும் விதி 4 வேறொரு அமைப்பிலும் செயல்படுகின்றன. எனவே இவ்விரு விதிகளும் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையன அல்ல. இதுபோன்றே விதி - 2ம் விதி - 3ம் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையன அல்ல. ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய விதிகள் 1, 2 ஆகிய இரண்டையும் ஒரு வரிசையிலும் விதிகள் 3, 4 ஆகிய இரண்டையும் வேறொரு வரிசையிலும் காட்டியுள்ளோம். இதிலிருந்து ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய விதிகளை மட்டும் தான் வரிசைப்படுத்திச் சொல்ல முடியும் என்பதையும் ஒன்றுக்கொன்றுத் தொடர்பில்லாத விதிகளை ஒரு வரிசையில் வரிசைப்படுத்த முடியாது என்பதையும் அறியலாம்.

ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய விதிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்படுவதைப் பற்றிப் பார்த்தோம். சில நேரங்களில் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய விதிகள் ஒரு அமைப்

பில் ஒரே நேரத்தில் செயல்படுகின்றன. உதாரணமாக, இந்த இரண்டு விதிகளைப் பாருங்கள்:

5. ஆ → ஆ̃ / — ன்

6. ன் → ϕ / ஆ̃ ——

இவ்விரண்டு விதிகளும் 'வந்த்ஆன்' (வந்தான்) என்ற சொல்லில் ஒரே நேரத்தில் செயல்படுவதைக் கீழேக் காணலாம்.

வ ந் த் ஆ ன்<br>
↓ ↓<br>
விதி விதி<br>
5 6<br>
↓ ↓<br>
வ ந் த் ஆ̃ ϕ<br>
வந்தா̃ (vanta:)

'வந்தா' என்ற சொல் பேச்சுவழக்கில் சரியான சொல். ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படும் விதிகளை 'நீள் வரிசை விதிகள்' என்று முன்பு சொன்னோம். விதிகள் 5-ம், 6-ம் ஒரே நேரத்தில் செயல்பட்டுத் தேவையான சரியான சொல்லைக் கொண்டு வருவதால் இவ்விதிகள் 'உடனிகழ் வரிசை விதிகள்' (Simultaneous ordering of rules) என்று சொல்லப்படுகின்றன.

ஒலியனியல் விதிகளை நீள் வரிசையில் வரிசைப்படுத்த வேண்டுமானால் விதிகள் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையனவாக இருக்க வேண்டும் என்றும், விதிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்படுகின்றன என்றும் முன்னர்ச் சொல்லப்பட்டது. ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய விதிகளைத்தான் வரிசைப்படுத்த முடியும் என்று சொன்னால் ஒன்றுக்கொன்றுத் தொடர்பில்லா விதிகளும் உண்டு என்றாகிறது. மேலும் ஒலியனியல் விதிகள்

எல்லாவிடங்களிலும் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடையனவாக இருக்க வேண்டும் என்பது அவசியமும் இல்லை. சில விதிகள் தொடர்புடையன ; சில விதிகள் தொடர்பில்லாதவை. எனவே எல்லா விதிகளும் ஒன்றுக் கொன்றுத் தொடர்பில்லாதபொழுது எல்லா விதிகளையும் வரிசைப்படுத்தவும் முடியாது. எனவே நீள் வரிசையை ஒரு மொழியிலுள்ள எல்லா விதிகளுக்கும் ஒரு பொது வான வரிசை என்றும் சொல்ல முடியாதென்பது இதிலிருந்து தெரிகிறது.

ஒரு மொழியில் A, B, C என்ற மூன்று விதிகள் இருப்பதாகக் கொள்வோம். இம்மூன்று விதிகளில் விதி A-யும், விதி B-யும் ஒரு அமைப்பிலும்; விதி B-யும், விதி C-யும் மற்றொரு அமைப்பி லும்; விதி A-யும், விதி C-யும் மூன்றாவது அமைப்பிலும் செயல் படுவதாகக் கொள்வோம். இப்பொழுது இம்மூன்று விதிகளின் வரிசை A,B,C என்று சொல்ல முடியாது. ஏனெனில் இம்மூன்று விதிகளும் செயல்படுவதைப் பார்த்தால், இவ்விதிகளின் உறவை இரண்டு இரண்டு விதிகளுகளுக்குத்தான் காட்ட முடிமேயல்லாது மூன்று விதிகளுக்கும் சேர்த்துக்காட்ட முடியாது. மேலும், ஒரு வரிசையில் இரண்டிற்கு மேற்பட்ட விதிகள் இருந்தாலும் இரண்டிரண்டாகத் தொடர்பு படுத்தும்பொழுதுதான் அவைகளின் தொர்டர்பும் நேரடியானது என்று சொல்ல முடியும். ஒரு அமைப்பில் மூன்று விதிகள் செயல்படுமானால் முதல் இரண்டு விதிகளும் ஒன்றுக்கொன்று நேரடித் தொடர்புடையதைப் போல முதல் விதியும் மூன்றாவது விதியும் நேரடித் தொடர்புடையன என்று சொல்ல முடியாது. எனவேதான் ஒலியனியல் விதிகளை இரண்டிரண்டாகத் தொடர்பு படுத்துவது நல்லது என்று கருதப் படுகிறது இவ்வாறு ஒலியனியல் விதிகளை இரண்டாக வரிசைப் படுத்தும்பொழுது இரண்டு விதிகளுக்குமிடையேயுள்ளத் தொடர்புப் பலவிதமாக உள்ளன். இத் தொடர்புத் தன்மையைக் கொண்டு விதிகளின் வரிசைகள் பல வகையாகப் பிரிக்கப்படுகின்றது. இவ் வரிசைகளைப் பற்றி இங்குக் காணலாம். கீழேயுள்ள இரண்டு விதிகளைப் பாருங்கள்:

7. ṯ —→ ṟ / V—V
8. ṟ —→ r / V—V

இவ்விருவிதிகளும் co:ṟu (சோறு) என்ற சொல்லில் செயல் படுவதைக் கீழேக் காணலாம்.

co:ṯu
co:ṟu (விதி–7)
cɔ:ru (விதி-8)

இங்கு முதலில் விதி - 7 செயல்படுகிறது. பின்னர் விதி - 8 செயல்படுகிறது. அதாவது விதி-7 செயல்பட்டுக் கிடைக்கக்கூடிய அமைப்பில் விதி 8 செயல்படுகிறது. இதுபோன்று ஒரு உள்ளமைப் பில் ஒரு விதிச் செயல்பட்டுக் கிடைக்கக்கூடிய வெளியமைப்பில் அதனோடுத் தொடர்புடைய மற்றொரு விதி செயல்பட்டுச் சரி யான சொல்லைக் கொண்டு வருமானால் அவ்விரு விதிகளுக்கு மிடையேயுள்ளத் தொடர்பை 'நிறைவுத் தொடர்பு' (feeding relation) என்று சொல்கிறோம். இதன்படி மேலேயுள்ள விதிகள் 7, 8 ஆகிய இரண்டின் தொடர்பும் நிறைவுத் தொடர்பு என்றும் இவ்வரிசையை 'நிறைவு வரிசை' (feeding order) என்றும் சொல்கிறோம்.

இப்பொழுது 7, 8 என்றுள்ள விதிகளின் வரிசையை மாற்றி 8, 7 என்ற வரிசையில் co:ṯu என்ற உள்ளமைப்பில் செயல்படச் செய்யலாம்.

co:ṯu
co:ṯu (விதி — 8 செயல்படவில்லை)
co:ṟu (விதி 7)

விதிகளின் வரிசையை மாற்றியமைத்ததனால் முதலில் விதி — 8 செயல்பட வேண்டும். இவ்விதிச் செயல்படத்தகுந்த சூழ்நிலை யில்லாததால் செயல்படவில்லை. பின்னர் விதி — 7 செயல்படு கின்றது. இவ்வரிசை 7, 8 என்றுள்ள பொழுது இரு விதிகளும் செயல்படுகின்றன. இவ்வரிசை 8, 7 என்றுள்ள பொழுது அவை களின் நிறைவுத் தொடர்பு சிதைக்கப்படுகிறது. எனவே, ஒரு விதி மட்டும் செயல்படுகின்றது; மற்றது செயல்பட முடியவில்லை.

எனவே இவ்விரு விதிகளின் தொடர்பு 'எதிர் நிறைவுத் தொடர்பு' (Counter feeding relation) என்றும் இவ்வரிசையை 'எதிர்நிறைவு வரிசை' Counter feeding order) என்றும் சொல்கிறோம்.

கீழேயுள்ள இரண்டு விதிகளைப் பாருங்கள்:

9. ஆ → ஆ̃ / — ன்
10. ன் → ϕ / — #

இவ்விரு விதிகளையும் முன்பு உடனிகழ் வரிசையில் பார்த்தோம். இங்கு இவை ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுவதைக் காணலாம். இவ்விரு விதிகளும் 'கண்ட்ஆன்' (கண்டான்) என்ற உள்ளமைப்பில் செயல்படுவதைக் கீழேக் காணலாம்.

க ண்ட் ஆன்
கண்ட் ஆ̃ன் — 9)
கண்ட் ஆ̃ (விதி — 10)

இவ்விருவிதிகளும் நிறைவு வரிசையிலுள்ள விதிகளைப் போலவே ஒன்றன்பின் ஒன்றாக, ஒரு விதிச் செயல்பட்டுக் கிடைத்த வெளியமைப்பில் மற்றொரு விதிச் செயல்பட்டது. இப்பொழுது விதிகள் 9, 10 என்றுள்ள வரிசையை 10, 9 என்று மாற்றிச் செய்து பார்க்கலாம்.

க ண்ட் ஆன்
கண்ட் ஆ (விதி — 10)
* கண்ட் ஆ (விதி — 9 செயல்படவில்லை).

இங்கு விதி -10 மட்டுந்தான் செயல்பட்டது. விதி -9 செயல்படவில்லை.

இவ்வரிசை எதிர்நிறைவு வரிசையைப் போலக் காணப்படுகிறது. விதி -10 முதலில் செயல்படுவதால் [ன்] -னை நீக்கிவிடு

கிறது. எனவே விதி -9 செயல்பட முடியவில்லை. விதி -9ன்படி [ன்] - னுக்கு முன்னாலுள்ள [ஆ] மூக்கினமாக மாறுகிறது என்பதாகும். [ன்] முன்னர் நீக்கப்படுவதால் இவ்வொலிக்கு முன்னாலுள்ள [ஆ] மூக்கினமாகும் தன்மையை இழந்துவிடுகின்றது. அதாவது ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய இரு விதிகளில் ஒரு விதி செயல்படுவதால் மற்ற விதி செயல்பட முடியவில்லை. முதலில் செயல்படும் விதி இரண்டாவதாகச் செயல்படும் விதி அமைப்பை அழித்துவிடுகிறது. எனவே இவ்விரண்டு விதிகளுக்கு முள்ளத் தொடர்பைச் 'சிதைவுத் தொடர்பு' (bleeding relation என்றும் இவ்வரிசையைச் 'சிதைவு வரிசை' (bleeding order) என்றும் சொல்கிறோம். இவ்வரிசையை மாற்றிச் செயல்படச் செய்யும்பொழுது விதிகள் ஒன்றன் பின் ஒன்றாகச் செயல்படுகின்றன. சிதைவு வரிசையை மாற்றியமைத்த வரிசையாதலால் இதனை 'எதிர்ச்சிதைவு வரிசை' என்று சொல்கிறோம்.

விதிகள் 7-ம், 8-ம் நிறைவு வரிசை என்று சொல்லப்பட்டது. விதிகள் 9-ம், 10-ம் எதிர்ச்சிதைவு வரிசை என்று சொல்லப்படுகின்றது. இவ்விரு வரிசை விதிகளும் செயல்படும் விதத்தைக் கவனிக்கும்பொழுது எவ்வித மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது இரு வரிசைகளிலும் உள்ள விதிகள் எவ்வித தடங்கலும் இல்லாமல் அவைகளின் உள்ளமைப்பில் செயல்படுகின்றன. இரண்டு வரிசைகளிலும் உள்ள விதிகள் செயல்படும் விதம் ஒன்றுபோலவே இருப்பதால் இரு வரிசை விதிகளின் தொடர்பும் ஒன்று என்று சொல்லப்பட வேண்டும். ஆனால் இங்கு இரண்டு வரிசைகளையும் இருவேறு பெயர்களால் அழைக்கிறோம். இரு வரிசை விதிகளும் செயல்படும் விதம் வெளித்தோற்றத்தில் ஒன்று போலக் காணப்பட்டாலும் இரண்டிற்கும் சிறு வேறுபாடுள்ளது. நிறைவு வரிசையிலுள்ள இருவிதிகளையும் ஒரு உள்ளமைப்பில் 'உடனிகழ் வரிசை'ப்படிச் செயல்படச் செய்தால் இருவிதிகளும் ஒரே நேரத்தில் செயல்படுவதில்லை. ஆனால் எதிர்ச்சிதைவு வரிசையிலுள்ள இரு விதிகளும் ஒரு உள்ளமைப்பில் ஒரே நேரத்தில் 'உடனிகழ் வரிசை' ப்படிச் செயல்படக்கூடியவை. இதனை விதிகள் 5-ம், 6-ம் 'வந்த் ஆன்'

என்ற உள்ளமைப்பில் செயல்படுவதைக் காணலாம். எதிர்ச்சிதைவு வரிசையிலுள்ள இருவிதிகளும் செயல்படும் உள்ளமைப்பானது, 'உடனிகழ்வரி' சைப்படி ஒரே நேரத்தில் செயல்படத் தகுந்த அமைப்பைக் கொண்டதாக இருக்கும். ஆனால் நிறைவு வரிசை விதிகள் செயல்படும் உள்ளமைப்பானது அவ்வாறிருப்பதில்லை. இதைக் கீழேக் காணலாம்.

co:ṭu
↓
விதி - 7
↓
co: ṛu
co:ṛu

இங்கே ஒருவிதி மட்டும் தான் செயல்பட்டது. அடுத்தவிதிச் செயல்படவில்லை. இதிலிருந்து நிறைவு வரிசையும் எதிர்ச் சிதைவு வரிசையும் ஒன்றல்ல என்பதும் இரண்டும் வெவ்வேறு என்பதையும் அறியலாம்.

அடிக்குறிப்புகள்

1. [ ] 2 இங்குள்ள எண் - 2 இவ்வடைப்புக் குறிக்குள் உள்ள ஒலி இரட்டித்தலைக் (doubling) குறிக்கும்.

2 'எனக்கு' என்ற சொல் 'னேக்கு' என்றும், 'உனக்கு' என்ற சொல் 'னோக்கு' என்றும் மாறுவதை இங்கேக் காணலாம்

| | | | |
|---|---|---|---|
| என் அக்க்உ | | உன் அக்க்உ | |
| ன் எஅக்க்உ | (என் → ன்எ) | ன்உஅக்க்உ | (உன் → ன்உ) |
| ன் ஏக்க்உ | (எஅ → ஏ) | ன்ஓக்க்உ | (உஅ → ஓ) |
| னேக்க்உ | | னோக்க்உ | |
| னேக்கு | | னோக்கு | |

3. [ற்] என்பது அடைப்பொலியாக எடுத்துக்கொள்ளப் பட்டது. இலக்கணத்தில் [ற்] - றை அடைப்பொலிகளான க், ச், ட், த், ப், என்பவைகளுடன் சேர்த்து க், ச், ட், த், ப், ற் என்று கூற ப்பட்டுள்ளதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

4. [ந்த்] என்பது இறந்தகால உருபாக டுத்துக் கொள்ளப்பட்டது. 'நடந்தான்', 'எழுந்தான்' போன்ற சொற் களில் [ந்த்] என்பது இறந்தகால உருபாகவும், 'கொண்டான்', 'புரண்டான்', 'திரண்டது' போன்ற சொற்களில் [ண்ட்] என்பது இறந்த கால உருபாகவும் இருந்தாலும் [ந்த்] - தாவும் [ண்ட்] - டாவும் ஒன்றுக்கொன்றுத் தொடர்புடைய எழுத்துக்களையுடைய உருபுகள். மேலும் [ண்ட்] என்ற உருபு அணரி ஒலிகளுடனே ீய வருவதால் [ந்த்] என்பதை இறந்த கால உருபாக எடுத்துக் கொண்டு, இது அணரி ஒலிகளுக்குப் பின்னால் வரும்பொழுது [ண்ட்] - டாவாக மாறும் என்று ஒலியனியல் விதியால் சொல்ல லாம். எனவே இங்கு [ந்த்] என்பது மட்டுமே இறந்தகால உருபாக உள் அமைப்பில் வைக்கப்பட்டுள்ளது.

5. 'ஓடிற்று' என்ற சொல்லிலுள்ள [ற்ற்] என்பது [ச்ச்] என்று மாறியது என்று சொல்லாமல் [த்த்] - ஆக மாறிப் பின்னர் [ச்ச்] ஆக மாறியது என்று எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏனெனில் காற்று, ஊற்று, மாற்று ஆகிய சொற்கள் முறையே காத்து, ஊத்து, மாத்து என்று மாறி வருகின்றன. மேலும் படித்தான், குடித்தான் போன்ற சொற்கள் படிச்சான், குடிச்சான் என்று மாறுகின்றன. எனவே [ற்ற்] என்பது [த்த்] என்று மாறிப் பின்னர் [ச்ச்] என்று மாறியது என்று ▫டுத்துக் கொள்வது நல்லது. மேலும் பிராமணர்கள் பேச்சு வழக்கில் 'ஓடிற்று' என்பது 'ஓடித்து' என்று வழங்கப்படுவதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

## BIBLIOGRAPHY

1. Anderson, S. R. 1974. *Organization of Phonology*, New York: Academic Press.

2. Annamalai, E. 1975. "Phonology of Tamil Nouns" in *Dravidian Phonological Systems* (eds). Schiffman, F. H. and Eastman, M. C., South Asian Studies Programme. Institute for Comparative and Foreign Area Studies. University of Washington, Seattle.

3 Arunabarathi, N. 1976. *Glossary of Linguistics: English - Tamil*, Tamil Nulagam, Madras.

4. Koutsoundas, A. Sanders, Gerald and Noll, Graig 1974. "On the application of phonological rules", *Language* Vol. 50, No. 1.

5. Ramaswami, N. 1977. 'பிறப்பொலியனியல்', புலமை, Vol. 3, No. 4.

6. ——— 1978. "Rule ordering controversy in phonology with reference to Tamil", Seminar on Phonology, Annamalai University, Annamalainagar.

7. Sakthivel, S. 1972. *Glossary of technical terms of Anthropology*. The South India Saiva Siddhanta Works Publishing Society Tirunevelly Ltd., Madras.

இக்கட்டுரையில் மாற்றங்கள் செய்து உதவிய டாக்டர் இ. அண்ணாமலை அவர்களுக்கு என்னுடைய நன்றி. இக்கட்டுரையை எழுதுவதற்கு ஊக்கமளித்த நண்பர்கள் டாக்டர் கி. அரங்கன் அவர்களுக்கும் டாக்டர் வ. ஞானசுந்தரம் அவர்களுக்கும் என் நன்றி.

---

## குமரித் தமிழில் சில சொற்கள்

| | | |
|---|---|---|
| i:cci | (ஈச்சி) | 'ஈ' |
| i:ṉṉe | (ஈந்நெ) | 'ஈஞ்சு' |
| etuppu | (எதுப்பு) | 'சகுனம்' |

| | | |
|---|---|---|
| eṭava:ṭu | (எடவாடு) | 'பத்திரம்' |
| ekku | (எக்கு) | 'இடுப்பு' |
| e:ppu | (ஏப்பு) | 'மலை' |
| e:lu | (ஏலு) | 'திறன்' |
| atuva:ṇi | (அதுவாணி) | 'கஞ்சன்' |
| anakkam | (அனக்கம்) | 'ஒலி, ஓசை' |
| aṇṭi | (அண்டி) | 'கொட்டை' |
| aranku | (அரங்கு) | 'அறை' |
| apakaṭam | (அபகடம்) | 'ஆபத்து' |
| ayyam | (அய்யம்) | 'மோசம்' |
| a:ttalu | (ஆத்தலு) | 'தூறல்' |
| a:cce | (ஆச்செ) | 'நாள்' |
| a:ya:ri | (ஆயாரி) | 'தச்சன்' |
| omalu | (ஒமலு) | 'பனை ஓலைப்பெட்டி' |
| orumi | (ஒருமி) | 'ஒன்றுசேர்' |
| oruva:ṭu | (ஒருவாடு) | 'பல' |
| o:rme | (ஓர்மெ) | 'ஞாபகம்' |
| u:tta:mpeṭṭi | (ஊத்தாம் பெட்டி) | 'பலூன்' |
| u:ṭṭi | (ஊட்டி) | 'பன்றி' |
| u:nu | (ஊனு) | 'கோல்' |
| pi:tte | (பீத்தெ) | 'வங்கு' |
| pi:le | (பீலெ) | 'மெட்டி' |
| petappu | (பெதப்பு | 'கூட்டம்' |
| patukka | (பதுக்க) | 'மெதுவாக' |
| ti:nam | (தீனம்) | 'நோய்' |
| cammi | (சம்மந்தி | 'சட்டினி' |
| caṇṭu | (சண்டு) | 'பதர்' |

—குமரி மாவட்ட மொழியியல் கள ஆய்வுக் குறிப்புகளிலிருந்து தொகுக்கப்பட்டவை.

நன்றி: மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

# தமிழ் வழக்குகள்*

சி. சக்திவேல்
தாகூர் கலைக்கல்லூரி, புதுவை.

தமிழில் உள்ள பல்வேறு மொழி வழக்குகளையும் அவற்றின் சிறப்பியல்புகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கண நூல் வழக்குகள்: வழக்கு என்னும் சொல் இலக்கண இலக்கியங்களில் பல்வேறு பொருளில் பயன்படுகிறது. ''வழக்காவது சில சொற்பிறந்த அக்காலத்து இஃது அறத்தை உணர்த்திற்று; இது பொருளை உணர்த்திற்று; இஃது இன்பத்தை உணர்த்திற்று; இது வீட்டை உணர்த்திற்று என்று உணர்விப்பது'' என்று பொருள் கூறுவார் நச்சினார்க்கினியர்.

''வழக்கும் செய்யுளும்'' என்னும் தொல்காப்பியப் பாயிரத்திற்கு இப்பொருள் தரப்படுகிறது.

---

* (19-12-81) அன்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை.

"வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாகலான" (தொல்.மர.92)

என உயர்ந்தோர் வழக்கினையே 'வழக்கு' என்கிறது தொல் காப்பியம்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலன் நெறி வழக்கம்"

என மூன்று வழக்குகளையும் சுட்டிக் காண்பிக்கிறது.




என ஆறு வழக்குகளை நன்னூலார் கூறுவார்.

இலக்கணப் போலியை மரூஉவில் அடக்கி, குழூஉக் குறி என்பது ஆன்றோர் வழக்கு அன்று என நீக்கி வழக்கு நான்கே எனக் கொள்வார் நச்சினார்க்கினியர்.

செய்யுள் வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் தனித்தனியே புணர்ச்சி விதிகளும் இலக்கணத்துள் கூறப்பபடுகின்றன.

இவையன்றி செந்தமிழ், கொடுந்தமிழ் வழக்குகளும் பிரிக்கப் படுகின்றன. செந்தமிழ் வழக்கு எது என்பதில் கருத்து வேறுபாடு கள் உள. செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு, பதினெட்டு நிலங்களையும் திசைச்சொல் வழக்குக்குரிய நிலங்களாகக் குறிப்பர்.

**மொழிநூல் வழக்குகள்:** மொழி வழக்குகளைப் பல அடிப் படையில் பிரிப்பர் (varieties of language).

1. நிலைபேறு வழக்கும் (standard) நிலைபேறு அற்ற வழக்கும்

2. வட்டார வழக்குகள் -புவியியல் அடிப்படையில் (Geographical dialects)

3. சமுதாய வழக்குகள் (social dialects)

4. பண்பாட்டு வழக்குகள் (culural dialects)

5. செயற்பாட்டு வழக்குகள் (functional varieties)

6. இருமொழி வழக்குகள் (Bilingualism)

**1. நிலைபேறு வழக்கும் நிலைபேறு அற்ற வழக்கும்:** பொதுவாக மாறுபாடும் வேறுபாடும் நிறைந்து மேலும் பற்பல மாற்றங்களை மேற்கொள்ளும் தமிழ் போன்ற மொழியில் 'நிலைபேற்றுத் தன்மையை' முடிவு செய்வது சற்று சிக்கலானதுதான். என்றாலும் இப்பல்வேறு வழக்குகளுக்கிடையேயுள்ள பொதுவான தன்மையையும், வேறுபட்ட வழக்குக்குரியவர்கள் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தும் மொழிக் கூறுகளைத் தொகுத்து நிலைபேற்றுத் தன்மையுடைய வழக்கு நிறுவப்படுகிறது. இந்த வகையிலும் தமிழின் நிலைபேறு வழக்கு பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற இருநிலைத் தன்மை உடையதாக விளங்குகிறது.

இது தவிர மற்ற மொழி வழக்குகள் நிலைபேறு அற்றவை எனலாம். எனினும் கா்லப்போக்கில் கிளை மொழி வழக்குகள் நிலைபேறு வழக்கினான் இடம் பிடித்து விடுதலும் நிலைபேறு வழக்கின் கூறுகள் வழக்கிறந்து விடுதலும் உண்டு.

தமிழ் இருநிலை வழக்கினை 1) எழுத்து - பொதுப் பேச்சு, 2) பொதுப் பேச்சு - கொச்சைப் பேச்சு, 3) எழுத்து - கொச்சைப் பேச்சு என மூவகையாகச் சுட்டுவர் மொழியியலார் (சீனிவாச வர்மா, 1980)

**2. வட்டார வழக்குகள்:** பேச்சு வழக்கு இடத்துக்கு இடம் வேறுபடுவதையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பேசப்படும் மொழியில்

பொதுத் தன்மைகள் இருப்பதையும் நாம் காண்கிறோம். இந்த இடவேறுபாட்டு அடிப்படையில் அமைந்த வழக்குகளை வட்டார வழக்குகள் என்பர். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஐந்து வட்டார வழக்குகளைக் குறிப்பிடலாம்.

1. வடபகுதி வழக்கு
2. கிழக்குப் பகுதி வழக்கு
3. தெற்குப் பகுதி வழக்கு
4. மேற்குப் பகுதி வழக்கு
5. நாஞ்சில் நாட்டு வழக்கு

1) **வடபகுதி வழக்கு:** சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு ஆகிய பகுதிகளில் பேசப்படும் தமிழ் வழக்கினை வடபகுதி வழக்கு என அழைக்கலாம். தெலுங்கின் தொடர்பும் சென்னையில் பல மொழிகளின் தொடர்பும் இவ்வழக்கிற்குச் சில சிறப்பியல்பு களைத் தந்துள்ளன.

**ஒலியியல்:**

ழ > ய : பயம் 'பழம்'

**இலக்கணக்கூறுகள்:**

—ஆண்டே : என்னாண்டெ 'என்னிட

—கோசரம் : எனக்கோசரம் 'எனக்காக'

—ங்காட்டி : 'செய்யாங்காட்டி' 'செய்யவில்லையானால்'

**சொற்கள்:**

| | |
|---|---|
| துட்டு | 'பணம்' |
| துன்னு | 'தின்' |
| நய்னா | 'தந்தை' |
| வாத்தியாரு | 'நண்பன்' |
| இஸ்துகோ | 'இழுத்துக்கொள்' |
| டபாயி | 'ஏமாற்று' |
| பேஜாரு | 'தொந்தரவு' |

2) கிழக்குப் பகுதி வழக்கு : தென்னாற்காடு, திருச்சி, தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த பகுதியில் வழங்கும் தமிழ் வழக்கினைக் கிழக்குப் பகுதி வழக்கு எனலாம். இதன் சிறப்பியல் புகள் சில வருமாறு :

ஒலியியல் : 'ழ' 'ல' 'ள' வேறுபாடு தெளிவாக ஒலிக்கப் படுதல்

எம்பது > எம்ளது

இலக்கணம் : – ம்மாம்

{அ, இ, எ} + ம்மாம் — 'அவ்வளவு', 'இவ்வளவு', 'எவ்வளவு'

சொற்கள் :

| | |
|---|---|
| திருஷா | 'திருவிழா' |
| தர்ஷணம் | 'தரிசனம்' |
| மல்லாட்டெ | 'மணிலாக்கொட்டை' |
| முழிங்க | 'மூங்கில்' |
| கொலுத்துக்காரன் | 'கொத்தன்' |

3) தெற்குப் பகுதி வழக்கு : மதுரை, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பகுதி தனக்கென ஒரு தனி வழக்கினை உருவாக்கிக் கொண்டருக்கிறது. பண்டு இப்பகுதி செந்தமிழ் நாடு எனப்படும் பாண்டிய நாடாகவும் தென் பாண்டி நாடாகவும் குறிக்கப்படுகிறது. இவ்வழக்கின் சில தனித் தன்மைகள் வருமாறு:

ஒலியியல் :

{'ழ்', 'ள்'} > 'ள' — {வாழ், வாள்} > வாள்

இலக்கணம் :

படர்க்கைப் பன்மை - வுக அவுக 'அவர்கள்'
- ஆக வராக 'வருகிறார்கள்'

இரண்டாம் வேற்றுமை
- யெய என்னெய 'என்னை'

நிகழ்காலச் சொல்லியன்
-த்- வருதாக 'வருகிறார்கள்'

கருவி வேற்றுமை
-எ வச்சு கத்தியெவச்சு 'கத்தியால்'

சொற்கள் :

| | |
|---|---|
| ஈரங்காயம் | 'வெங்காயம்' |
| ஙக்கா | 'எங்கள் அக்காள்' |
| சிய்யான் | 'தாத்தா' |
| நீலி | 'கொடூரமான பெண்' |

4) மேற்குப்பகுதி வழக்கு : சேலம், கோவை, பெரியார், நீலகிரி, தருமபுரி மாவட்டங்களை இவ்வழக்கு இணைக்கிறது. இதன் சிறப்பியல்புகள் வருமாறு:

ஒலியியல் : சற்று நீட்டிப் பேசுகிற ஒலிப்பு முறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ழ் | > | (ல்) | பழம் | → | பலம் |
| ள் | > | (ல்) | பள்ளம் | → | பல்லம் |
| ல் | > | (ல்) | பல் | → | பல் |

இலக்கணம் : இம்மாவட்டங்களில் ஒலிப்புமுறையில் சிற்சில வேறுபாடுகள் காணப்படினும் கோவை, பெரியார் மாவட்டங்களில் /-ங்கோ/ என்ற மரியாதைப் பன்மை விகுதி ஏறத்தாழ எல்லா சொற்களின் இறுதியிலும் கையாளப்படுவதைக் காணலாம்.

ஆறாம் வேற்றுமை உருபு - ற: என்ற 'என்னுடைய'
படர்க்கைப் பன்மை - விய : அவிய 'அவர்கள்'

சொற்கள்

| | |
|---|---|
| புள்ளெ | 'பெண் பிள்ளை' |
| பய | 'ஆண் பிள்ளை' |
| அம்மினி | 'பெண் |
| ஒட்டுக்கா | 'ஒன்றாக' |
| அவுத்தே | 'அங்கே' |

5) நாஞ்சில் நாட்டு வழக்கு: கேரளத்தை ஒட்டியுள்ள நாட்டுப் பகுதியில் தமிழ் மலையாளத்தின் சாயல் பெற்ற மூக் கொலிகள் மிக்குக் காணப்படும். மலையாளத்தில் உள்ளது போலவே /ற/ /ர/ வேறுபாடு உண்டு.

இலக்கணம்:

| | | | |
|---|---|---|---|
| கருவி | — வச்சு | கத்திவச்சு | 'கத்தியால்' |
| | — கொண்டு | கத்திகொண்டு | ,, |
| | — இட்டு | கத்தி இட்டு | ,, |

ஆறாம் வேற்றுமை - அக்க : எனக்க 'என்னுடைய'
ஏகாரச் சொல்லியன் - ஆக்கும் : அவனாக்கும் 'அவனே'

சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| ஆச்செ | 'நாள்' | பகரம் | 'பதிலாக' |
| இரு | 'உட்கார்' | தோக்கு | 'துப்பாக்கி' |
| சாடு | 'குதி' | தெற்று | 'குற்றம்' |

3. சமுதாய வழக்குகள்: ஒரே இடத்தில் உள்ள மக்களின் பேச்சிலும் அவர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் காரணமாக வேறு பாடு இருப்பதைக் காண்கிறோம். இந்தியாவில் சாதிகளே சமுதாய வேறுபாடுகளுக்கும் பெரிதும் காரணமாக உள்ளன. எனவே சமுதாய மொழிவழக்கு வேறுபாடுகளை நாம் சாதிகளின் அடிப்படையிலேயே பிரிக்கவேண்டியுள்ளது. அந்த அடிப்படையில்

தமிழ்ச் சமுதாயத்தினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1) பிராமணர்; 2) பிராமணர் அல்லாதார்; 3) அரிசனர். இவை ஒவ்வொரு வழக்கிலும் சில உட்பிரிவுகள் இருப்பினும் பிராமணர் அல்லாதாரிடையேதான் உட்பிரிவுகள் மிக அதிகம் என்றாலும் தொகுப்பு வசதிக்காக இம்மூன்று பெரும்பிரிவுகளாகப் பிரித்துக் கொள்வர், மொழியியலார். இதில் பிராமணர் பேச்சு வழக்குகளில் ஐயர், ஐயங்கார் என்ற பிரிவுகள் உள்ளன. அரிசனப் பிரிவிலும் சில சிறு பிரிவுகள் உள்ளன. என்றாலும் இவற்றில் பொதுத் தன்மை அதிகம். ஆனால் பிராமணர் அல்லாத பிரிவில் பல சாதிகள் பல வேறுபட்ட வழக்குகளை உடையதாகையால் அதில் 'மொழியியல் பொதுத் தன்மை' (commonalt ) குறைந்து 'மொழியியல் வேற்றுமை' (diversity) மிக்குக் காணப்படுகின்றது. மேலும் பிராமணர்களின் பேச்சு வழக்கில் மொழியியற் சமநிலை நீடிப்பதோடு இடத்திற்கு இடம் மொழி மாறுபாடுகள் அவர்கள் வழக்கில் அதிகமாக இடம் பெறுவதில்லை. மூன்றாம் பிரிவிலும் ஏறத்தாழ சமநிலை உள்ளது. ஆகவே தமிழகத்தின் சமுதாய வழக்குகளைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.




இனி இம்மூன்று வழக்குகளின் மொழியியற் கூறுகளைக் காண்போம்.

1) பிராமணர் வழக்கு:

ஒலியன்கள் : /ஹ/ & /க்ஷ/

இலக்கணக் கூறுகள் :

படர்க்கைப் பன்மை : - வா : அவா 'அவர்கள்'
- ஆ : வந்தா 'வந்தார்கள்'
தன்மை ஒருமை : நே- : நேக்கு 'எனக்கு'
முன்னிலைப் பன்மை: - ஏள் : போனேள் 'போனீர்கள்'

சொற்கள் :

அத்திம்பேர் 'சகோதரியின் கணவர்'
ஆத்துக்காரி 'மனைவி'
மாட்டுப்பொண் 'மருமகள்'
ஆம்படையான் 'கணவன்' போன்றவை

2) பிராமணர் அல்லாதார் வழக்கு :
(ஷ)

ஒலியன் : /ச/ /ஸ/ ஸனி (ஸ) கஸ்டம் 'கஷ்டம்'
(ஷ) சண்முகன் 'ஷண்முகன்'

இலக்கணம் :

படர்க்கைப் பன்மை - வங்க : அவங்க 'அவர்கள்'
- ஆங்க : வராங்க 'வருகிறார்கள்'

முன்னிலை ஒருமை ஒன்- : ஒனக்கு 'உனக்கு'
எண்ணுப் பெயர் - ஆவது : ஆறாவது
- ஆம் : ஆறாம்

நாம் முன்பே கண்டதுபோல இவ்வழக்கில் சமநிலையின்மை பெரும் அளவில் உள்ளது. மேலும் இவ்வழக்கில் செட்டியார் வழக்கு, முதலியார் வழக்கு, படையாட்சி வழக்கு, யாதவர் வழக்கு, வேளாளர் வழக்கு போன்ற பல உட்பிரிவுகளை மொழி

யியலார் பிரிப்பர். அதனால், இது தனி வழக்கு என்பதைவிட அந்தந்த வட்டார வழக்குகளில் மிகுதியாக இடம்பெற்றுள்ள கூறுகளின் தொகுப்பு என்பதே பொருந்தும்.

3) அரிசன வழக்கு

| | | |
|---|---|---|
| ஒலிக்கூறுகள் : | கயட்டம் | 'கஷ்டம்' |
| | ca : ru | 'சாறு' |
| | sa : ḍi | 'ஜாடி' |

இலக்கணக்கூறுகள் :

| | | |
|---|---|---|
| படர்க்கைப்பன்மை - வுய | அவிய | 'அவர்கள்' |
| முன்னிலை-பன்மை - ஈக | போனீக | 'போனீர்கள்' |
| காலம் காட்டல் - அப்ளெ | வரப்ளெ | 'வரும்போது' |

சொல் :

| | |
|---|---|
| பண்ணையாடி | 'முதலாளி' |
| அவுக | 'அவர்கள்' |

4. பண்பாட்டு அடிப்படையிலான வழக்குகள் : பொதுவாக ஒரே இடத்தில் அல்லது ஒரே சாதிப் பிரிவில் உள்ளவர்களில் கல்லாதவர்க்கும், சிறிது கல்வி கற்றவர்க்கும், மிகப்படித்தவர்க்கும் இடையிலே வேறுபாடுகளைக் காண்கிறோம். அவரவர் பெற்ற நூலறிவு, கல்விக்கூடங்களில் கற்பிக்கப்படும் பழக்கவழக்கங்கள், அவர்கள் பழகும் பிற அறிஞர்கள் ஆகிய காரணங்களால் கற்றவர் களின் பேச்சு வழக்கு மாற்றம் பெறுகின்றது. இந்த அடிப்படை யில் 1) கல்லாதார் வழக்கு, 2) கற்றோர் வழக்கு, 3) மிகக் கற்றோர் வழக்கு எனப் பிரிக்கலாம்.

கல்லாதார் வழக்கு : கொத்தடிமைகளாகவும், கூலி ஆட்க ளாகவும் இருந்து கல்வி பெறும் வாய்ப்பை முழுமையாக இழந்த வர்களின் வழக்கு இதுவாகும். இவர்கள் பேச்சில் அந்தந்த வட்டார, சமுதாய வழக்கின் சிறப்புக் கூறுகள் மிகுந்து காணப் படும். இதனால் பிற வட்டாரத்தை அல்லது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இவர்கள் பேச்சைப் புரிந்து கொள்வது கடின

மாயிருக்கும். கொச்சை வழக்கும் இழிவழக்கும் கூட இதில் காணலாம். பண்பாட்டுக்குறைவின் காரணமாக அவையல்கிளவி களும் இழிசொற்களும் நிறைந்திருக்கும்.

2) கற்றோர் வழக்கு : ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்த பொதுமக்களின் வழக்கு இதுவாகும். இதில் பேச்சுத் தமிழின் பொதுத்தன்மையும் வட்டார வழக்குகளின் சிறப்புத் தன்மையும் சம அளவில் கலந்திருக்கும்.

3) மிகக் கற்றோர் வழக்கு : கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்வி கற்றோரின் வழக்கு வட்டார வழக்குகளி லிருந்து பெரிதும் வேறுபட்டு தமிழின் பொதுத்தன்மையும், எழுத்து வழக்கின் பண்புகளும், பிறமொழிக் கலப்பும் நிறைந்தி ருக்கும். இம்மூன்று வழக்கு வேறுபாடுகளுக்கும் சில சான்றுகளைக் காண்போம்.

| கல்லாதார் வழக்கு | கற்றோர் வழக்கு | மிகக் கற்றோர் வழக்கு |
|---|---|---|
| வர்றீக | வர்றீங்க | வருகிறீர்கள் |
| ஓட்டரை | ஓட்டல் | ஹோட்டல் |
| ஒர்ருவா | ஒருருபா | ஒன் ருபி |

சொற்களைத் தெளிவாக ஒலிப்பது, பிறமொழிச் சொற்களை மாறுபாடின்றி ஒலிப்பது ஆகிய வழக்கு பண்பாட்டு மேம்பாட்டால் வளர்கிறது. மிகக் கற்றோர் இடையிலும் நகரத்தில் வாழ்வோ ரிடமும், பிராமண சமூகத்தினரிடமும் ஆங்கில, வடமொழிக் கூறுகள் மிகக் காணப்படும். தனித் தமிழ்க் கொள்கையுடையவர் களின் பேச்சு தூய எழுத்துத் தமிழாகவே இருப்பதையும் காணலாம்.

5. செயற்பாட்டு அடிப்படையிலானவழக்குகள்: ஒரே மனிதன் வேறுவேறு காரணங்களுக்காக மொழியைப் பயன்படுத்தும்பொழுது வேறுவேறு வழக்குகளைப் பயன்படுத்துகிறான். இந்தப்பயன்பாட்டு அடிப்படையிலான வழக்குகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.




அ) பொதுப் பேச்சு வழக்கு: இது நாம் சாதாரணமாக ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளப்பயன்படுத்தும் வழக்காகும்.

ஆ) முறைமைப் பேச்சு வழக்கு: இது நாம் நாடகம், வானொலி, இலக்கிய மேடைகள் ஆகியவற்றில் பேசுவதற்குப் பயன்படுத்தும் வழக்கு. இவ்வழக்கு எழுத்து வழக்குடன் பெரிதும் ஒத்துக் காணப் படும். சொற்களின் ஒலிப்பும், இலக்கணக் கூறுகளும் தெளிவாக இருப்பதுடன் 'மொழிமிகை' (redundancy) மிக்குக் காணப்படும். 'தலைவர் அவர்களே' என்பது போன்ற மிகைச் சொற்களையும் முறைமைச் சொற்களையும் மிகுதியும் கையாள்கிறோம்.

இ) சிறப்புப் பேச்சு வழக்குகள்: அறிவியல், மருத்துவம், பொறியியல் முதலிய தொழில் செய்வோர் அந்தத் தொழில் தொடர்பான கலைச் சொற்களையும் மரபுகளையுமே பயன் படுத்திப் பேசுவர். அதுபோலவே சிறப்புப் பாடங்கள் கற்போரும் கற்பிப்போரும் பயன்படுத்தும் வழக்கு அந்தந்தத் துறையின் சிறப்பு வழக்கு எனலாம்.

ஈ) கொச்சை வழக்கு: மிக நெருக்கமானவர்களுடனும் தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுடனும் பேசும்பொழுது பொதுவான,

பேச்சிலிருந்து சற்றுத் தரம் குறைந்த சொற்களையும் ஒலிமுறை களையும் இலக்கண அமைப்புகளையும் கையாளுகிறோம். இதனைக் கொச்சை வழக்கு எனலாம்.

உ) குறுமொழி வழக்கு: மாணவர்கள், தரகுக் காரர்கள் போன்ற குழுவினர் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் சில சிறப்புச் சொற்கள், சொற்பொருள்கள் முதலியவற்றை இவ்வழக்கு குறிக் கிறது. என்னம்மா, மச்சி, மச்சான் முதலிய சொற்களின் புழக்கம் இதற்குச் சான்று.

ஊ) இழிமொழி வழக்கு: கீழ் மக்கள் சண்டையிடும்போதும், குடித்துவிட்டு உளரும் போது பயன்படுத்தும் இழிந்த சொற்களும் அவையர் கிளவிகளும் நிறைந்தப் பேச்சு இழிமொழி வழக்கு ஆகும்.

2) எழுத்து வழக்கு: நாம் எழுதுவதற்குப் பயன்படுத்தும் வழக்குகள் எழுத்து வழக்குகள் எனப்படும்.

அ) பொதுவழக்கு: நாம் பொதுவான கட்டுரைகளும், பிற பொதுச் செய்திகளும் எழுதப் பயன்படுத்தும் வழக்கு இதுவாகும்.

ஆ. முறைமை வழக்கு நாம் அலுவலக மடல்கள், ஆவ ணங்கள், கிரயப் பத்திரங்கள், கடிதங்கள் போன்றவை எழுத ஒரு முறைமையை வைத்துள்ளோம். நம் கடிதங்கள் பொதுவாக 'அன்புள்ள' என்று தொடங்குவதுகாண்கிறோம். இந்த முறைமை களில்சிறப்பாகப் பயன்படுத்தப்படுவது ஒருவகையான 'காட்சி வழ க்கே' (eye dialect). அதாவது இவ்வழக்குகள் காதுகளைவிட கண் களுக்கே பெரிதும் உரியவை. வலப்பக்கம் மேலே ஊரும் நாளும் எழுதுதல்; கீழே கையொப்பமிடல்; அனுப்புநர்; பெறுநர்; பொருள் பார்த்தல் போன்றவை இடப்பக்கம் வரிசைப்படி அமைதல் போன்ற இம்முறைகள் இன்றைய வழக்கில் பெரும்பாலும் ஆங்கி லேயர்களின் ஆவண வழக்கைப் பின்பற்றியவை. அதுபோலவே கிரயப்பத்திரங்கள், பணமுறிகள், விண்ணப்பங்கள், வாணிகமடல் கள் ஆகியவற்றில் இந்த எழுதும் முறைமை வலியுறுத்தப் படு கிறது.

இ) சிறப்பு வழக்கு : ஒவ்வொரு தொழில், கலை துறைகளுக்கும் உரிய சிறப்பான சொற்களும் வழக்குகளும் உள்ளன. இலக்கியம் படைப்போரும், செய்யுட்கும் உரைநடைக்கும் உரிய சிறப்பு வழக்குகளைப் பின்பற்றுகின்றனர், என்றாலும் ஒவ்வொரு படைப்பாளரும் தனக்கென ஒரு தனி வழக்கினையே நிறுவ முயல்கின்றனர். இன்றைய இலக்கிய வழக்கினைத் தனித்தமிழ் வழக்கென்றும், புதுக்கவிதை வழக்கென்றும், பிற வழக்கென்றும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தூய தமிழ்ச் சொற்களையேப் பயன்படுத்துவதும் ஆக்கிக் கொள்வதும் முதல் வகை. வடமொழி, ஆங்கிலச் சொற்களை மிகுதியும் கலந்து, புதிய சொற்கட்டுகளை உண்டாக்க முயல்வது இரண்டாம் வகை முதல் வகையினர் சந்தம், யாப்பு முதலிய ஒலிகட்குச் சிறப்பு தருவர். இரண்டாமவர் காட்சி வழக்குகளை (eye dialects) முயல்வர்.

ப
டி
யி க
ல் மா
வி ர மெ ... து ... வா ... க
ழு ய
ந் உ
தா
ன்

என்பது போன்றவை இவை. ஓசை ஒழுங்கை விட வாக்கியங்களை இடையிடையே பிரித்துப் போட்டுக் காட்டுவதில் அக்கரை கொள்வர். மரபுக் கவிதைகளில் இன்று காலாவதியாகிவிட்ட சித்திரக் கவியும் ஒருவகைக் காட்சி வழக்கேயாம்.

ஈ) கொச்சை வழக்கு : பேச்சு வழக்கிலுள்ள கொச்சை வழக்கினை அப்படியே எழுத முயலும் முயற்சியைஇன்றைய எழுத்தாளர்களிடம் பரவலாகக் காண்கிறோம். நாடகங்கள், உரை

நடை இலக்கியங்கள், நாட்டுப்புறப்பாடல்கள் ஆகியவற்றில் பாத்திரங்கள் பேசும் நேர்முகப் பேச்சுகளை அப்படியே எழுதுவதற்காக இம்முறை பயன்படுகிறது. சிலரால் இழிமொழிவழக்கும் குறுமொழி வழக்கும்கூட எழுத்தில் கையாளப்படுகிறது.

உ) **இழிமொழி வழக்கு:** ஆபாசப் புத்தகங்கள், மற்றும் இழிவான பத்திரிகைகள், துண்டறிக்கைகளில் பயன்படுத்தப்படும் இழிந்த சொற்களும் அவையல் கிளவிகளும், சாதாரண சொற்களுக்கு இழிந்த பொருள் தருதலும் இழிமொழி வழக்காகும்.

6. **இருமொழி வழக்குகள்:** தமிழ் மக்கள் பிற மொழி மக்களுடன் கொண்ட தொடர்பால் இருமொழி வழக்குகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை மூன்று பிரிவுகளாக்கலாம்.

1) அந்நியர் தமிழகத்தில் குடியேறியதால் ஏற்பட்ட இருமொழி வழக்கு

2) தமிழகத்தைச் சுற்றியுள்ள பிறமொழி மக்களுடன் கொண்ட தொடர்பால் ஏற்பட்ட இருமொழி வழக்குகள்.

3) தமிழர்களின் குடியேற்றத்தால் ஏற்பட்ட இரு மொழி வழக்குகள்.

1) **அந்நியர் தமிழகத்தில் குடியேறியதால் ஏற்பட்ட வழக்குகள்:** தமிழகத்தை ஆங்கிலேயர் ஆண்டதால் தமிழகத்தில் தமிழ் - ஆங்கில இருமொழி வழக்குகளைக் காண்கிறோம். சிற்றூர்ப்புறங்களில் சிறிதளவு ஆங்கிலச் சொற்களிருந்தாலும் பெருநகர்ப்புறங்களிலும் கற்றவர் இடையிலுமே இவ்விருமொழி வழக்கு மிக்குக் காணப்படுகிறது.

புதுச்சேரி, காரைக்கால் பகுதியில் பிரெஞ்சு ஆட்சி காரணமாக தமிழ் - பிரெஞ்சு இருமொழி வழக்கினைக் காணலாம்.

நாயக்கர் ஆட்சியில் தெலுங்கும், முகமதியர் ஆட்சியில் உருதும், இன்றைய நடுவணரசு ஆட்சியில் இந்தியும் இருந்தாலும் இவற்றின் மிகச் சில சொற்களே ஆட்சித் தமிழுடன் கலந்தன

என்பதைத் தவிர வேறு மாற்றம் எதுவும் நிகழவில்லை. எனினும் முகமதியர்களிடையே தமிழ்-உருதும், சௌராஷ்டிரர் இடையே தமிழ்-சௌராஷ்டிரமும், தெலுங்கர்களிடையே தமிழ்-தெலுங்கும் சில இந்திக்காரர்களிடையே தமிழ்-இந்தியும் இருமொழி வழக்காக உள்ளன. இவர்கள் வழங்கும் தமிழில் பிறமொழிச் சொற்கள், ஒலிகள், இலக்கண அமைப்புகள் நிறைந்துள்ளன.

2) **அண்டைமொழித் தொடர்பால் ஏற்பட்ட இருமொழி வழக்குகள்:** வட ஆற்காடு மாவட்டத்தில் ஆந்திரத் தொடர்பால் தமிழ்-தெலுங்கு வழக்கும், கிருட்டினகிரி, ஓசூர் பகுதியில் கன்னடத் தொடர்பால் தமிழ்-கன்னட வழக்கும், நாஞ்சில் நாட்டில் கேரளத் தொடர்பால் தமிழ்-மலையாள வழக்கும் இருப்பதைக் காண்கிறோம். ஓசூர் பகுதியில் தமிழ், தெலுங்கு, கன்னடம் மூன்றும் இணைந்து வழங்குகிறது.

3) **குடியேற்றத்தால் ஏற்பட்ட இருமொழி வழக்குகள்:** தமிழர்கள் உலகில் ஏறத்தாழ ஐம்பத்திரண்டு நாடுகளில் குடியேறியுள்ளனர். அந்தந்த நாட்டு மொழிகளுடன் இணைந்து ஆங்காங்கே இருமொழி வழக்குகள் உருவாகியுள்ளன.

| | |
|---|---|
| இலங்கை | தமிழ்-சிங்களம் |
| மலேயா—சிங்கப்பூர் | தமிழ்-மலாய் |
| அமெரிக்கா—இங்கிலாந்து | தமிழ்-ஆங்கிலம் |
| பிரான்சு | தமிழ்-பிரெஞ்சு |
| வட இந்தியா | தமிழ்-இந்தி (அல்லது அந்தந்த வட இந்திய மொழி) |

போன்ற பல இருமொழி வழக்குகள் உருவாகி உள்ளன.

இவையன்றி (pidgin, creole) என்று வருணிக்கப்படும் மிகக் குறைந்த மொழித் தொடர்பே தரும் இருமொழி வழக்குகள் முடிப்பு

வெள்ளையரிடம் வேலைசெய்த பட்லர்கள், புதுவையில் பிரெஞ்சுக் காரர்களிடம் பணியாற்றிய 'குசின்காரிகள்' என்னும் வேலை யாட்கள், அங்கு சைகோன், இந்தோ-சைனா, வியட்நாம் முதலிய பகுதியில் இருந்து வந்து குடியேறிய creole பேசும் மக்கள், இங்கு புதிதாக வந்து வட்டிக்கடை வைத்துள்ள சேட்டுகள், மோரீஸ், மடகாஸ்கர் பகுதியில் வாழும் தமிழர்கள் ஆகியோரின் வழக் கினைக் கூறலாம்.

இவ்வாறு தமிழ் மொழியில் பல்வேறு வழக்குகள் இருப்பதை ஓரளவு இக்கட்டுரை பிரித்துக் காட்டுகிறது என்றாலும் இதுவே முழுமையாகிவிடாது. இங்கே குறிப்பிட்ட ஒவ்வொரு வழக்கிலும் மேலும் பல உட்பிரிவுகள் உள்ளன. இதில் குறிப்பிடாத சில சிறு வழக்குகளும் உள்ளன. அவையனைத்தையும் அகலமாகவும் ஆழ மாகவும் ஆய்ந்து மொழியியல் வரைபடம் தயாரிப்பது இவ்வாய்வில் பெரும் பயன்தரும்.

### துணை நூல்கள்

மா. சண்முக சுப்பிரமணியம், 1977. சட்டத் தமிழ், கழக வெளியீடு : சென்னை.

இராமலிங்கனார், கி. 1968. ஆட்சித் துறைத் தமிழ், கழக வெளியீடு : சென்னை.

கருணாகரன், கி. 1975. சமுதாய மொழியியல், பாரி நிலையம், சென்னை.

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம், கழக வெளியீடு : சென்னை.

தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம், கழக வெளியீடு : சென்னை.

சீனிவாச வர்மா, கோ. 1977. இளை மொழியியல், அ. த. மொ கழகம், அண்ணாமலைநகர்.

சீனிவாச வர்மா, கோ. 1980. இருமொழியம், அ. த. மொ. கழகம், அண்ணாமலைநகர்.

தண்டபாணி தேசிகர், நன்னூல் விருத்தியுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

Agesthialingom, S., 1967. *A Generative Grammar of Tamil* (DLP. 11), Annamalai University : Annamalainagar

Agesthialingom, S., 1970. 'Three Dialects of Tamil' *Pakha Sanjam*

Fishman, J. A. 1971. *Sociolinguistics – A Brief Introduction* Rowley, Mass.

Juanita V. Willamson, 1971, *A Various Language* - Holt Rinehart and Winston, INC., New York.

Irulappan, K. M., 1980. 'Tamil Diglossia' in *Heritage of Tamil Language and Grammvr* IITS : Madras.,

Karunakaran, K. 1970. 'Tamil Dialects - a classification' Proceedings of the 2nd Conf. Seminar of the AIUTTA, Trichy.

Karunakaran, K. & C. Sivashanmugam, 1981, *Study of Social Dialects in Tamil,* AITLA, Annamalainagar.

மொழியியல் 5, 4. (1982)

# மொழிவழி பொழுதுபோக்குகள்

அ. பிச்சை
மாநிலக்கல்வி கருவூலம், சென்னை.

## முன்னுரை

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் மொழியை உருவாக்கினான். தனது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் தெரிவிக்கும் செய்திப் பரிமாற்றக் கருவியாகப் பயன்படுத்தினான்; பயன்படுத்தி வருகின்றான். நாளடைவில் பேச்சுமொழி ஓரளவு செப்பம் பெற்றது. மொழியைப் பயன்படுத்தி வாய்மொழி இலக்கியங்கள் படைக்கவும் பெற்ற அறிவையும் அனுபவத்தையும் பாதுகாக்கவும் திறன்பெற்றான். எழுத்தைக் கண்டு பிடித்தான்; பின்பு எழுத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் கம்பியூட்டர்களை உருவாக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டான். இன்று பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் பல்வேறு சூழ்நிலைகளில் — துறைகளில் தகவல் தொடர்புக்கும் பொழுது போக்கிற்கும் பயன்படுத்தி வருகின்றான். இக்கட்டுரையில் மொழியைப் பயன்படுத்திப்

பொழுது போக்க உதவும் சில 'மொழி விளையாட்டுகள்' (Verbal games / Linguistic plays) மொழியியல் கண்ணோட்டத்தில் விளக்கப் படுகின்றன.

### எது பெரிது

ஓர் ஒலி இயல்பான மாத்திரையிலிருந்து நீண்டு ஒலிப்பதனை அளபெடை என்பர். பொருளின் தன்மைக்கும் சொல்லின் ஒலிப் பளவுக்கும் ஒரு தொடர்பு கிடையாது. வலிய பெரிய விலங்காம் புலியைச் சுட்டும் சொல் இரண்டு எழுத்துக்களால் ஆகியுள்ளது, எளிய சிறிய பிராணியாம் எறும்பைச்சுட்டும் சொல் நான்கு எழுத்தில் அமைந்துள்ளது. ஆனால் குழந்தைகள் ஒலிக்கும் பொருளுக்கும் (Sound and Meaning) அளவு அடிப்படையில் தொடர்பு உண்டு என்று எண்ணி ஏமாறுகின்றனர்.

எடுத்துக்காட்டாக, குழந்தைகளிடம் "நூறே பெரிதா" அல்லது "தொண்ணூறே பெரிதா?" என்று கேட்டால், சில குழந்தைகள் "தொண்ணூறே" என்று பதில் கூறும். எண்ணிக்கையில் தொண்ணூற்றைக் காட்டிலும் நூறு பெரியதாக இருந்தாலும் உச்சரிக்கும் ஒலியளவில் "தொண்ணூறு" நூறைக் காட்டிலும் பெரிது. இதைப் போன்றே ஆயிரம் பெரிதா, நூ றேஎ பெரிதா என்று கேட்கும் போது "நூ றேஎ" என்பதை நீட்டிச் சொன்னால் குழந்தைகள் "நூ றேஎ" என்று கூறுவார்கள். எதை அள பெடுத்துச் சொல்கின்றோமோ அது பெரிது என்று எண்ணிக் கூறும் போது கேட்பவருக்கு உவகை தோன்றுகின்றது. இச் சொல் விளையாட்டில் மேற்கூற்று ஒலியன்களின் (Suprasegmental phonemes) பங்கு குறிப்பிடத் தக்கது.

### மொழி மரபு

ஒரு பிரிவினர் ஒரு பெயரைச் சொல்ல, அதற்குப் பொருத்த மான வினைச் சொல்லையோ அதனோடு பொருள் தொடர்புடைய மற்றொரு சொல்லையோ மற்றொரு பிரிவினர் சொல்ல வேண்டும். தவறாகச் சொல்பவர் விளையாட்டிலிருந்து நீக்கப் படுவர். இவ்விளையாட்டுத் தமிழகப் பள்ளிகளில் விளையாடப் படுகின்றது.

1. காக்கா பற பற.
2. குருவி பற பற.
3. பருந்து பற பற.
4. கொக்கு பற பற.
5. வாத்து பற பற.

மேலே தரப்பட்டுள்ள தொடர்களில் ஐந்து பெயர்ச் சொற்களும் பறவையினத்தைச் சார்ந்தவை. ஆனால், முதல் நான்கு மட்டும் தான் பறக்கும் இயல்புடையவை. 'வாத்து' பறவையினத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் பறக்கும் தன்மையற்றது. இருப்பினும் பறவையே. குழந்தைகள் பறவை இனத்தைச் சார்ந்தவை யெல்லாம் பறக்கும் என்று எண்ணி 'வாத்து' என்பதையும் ஒப்புடைமை (Analogy) அடிப்படையில் கூறிவிடுகின்றனர். இது போன்ற தொடர்களும் பாட்டுக்களும் மொழிப் பொருள் மரபினைக் கற்றுக் கொடுப்பதற்குப் பயன்படுகின்றன. ஒரு விளையாட்டில் குழந்தைகள் கவனமாக ஈடுபடுவதையும் கேட்கும் திறனையும் (listening skill) சோதிப்பதற்கு இவ்விளையாட்டு உதவும்.

**வினாவுக்குள்ளே விடை**

மாணவர்கள் சில வினாக்களை விரைவுடன் கேட்பார்கள். அவற்றிற்கு உடனே பதில் சொல்ல வேண்டும். அக்கேள்விகளுக்கு விடை அவற்றினுள்ளே இருக்கும். கேள்விக்குள்ளே விடையைத் தேடாமல் பெரும்பாலோர் வெளியே ஏதாவது ஒன்றைச் சிந்திப்பர். இவ்வுத்தி அடிப்படையில் எழுந்த செய்யுளைச் சித்திரக் கவிகளுள் ஒன்றாகக் (வினாவுத்தரம்) கூறுவர், இலக்கணக்காரர். மொழியுணர்வுமிக்கவர்கள் இவ்வுத்தியைக் கண்டுபிடித்து விடையைச் சொல்லி விடுவார்கள்.

1. எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால்?
2, கம்பராமாயணத்தை எழுதியவர் யார்?
3. நந்திக் கலம்பகம் யார் மேல் பாடப்பட்டுள்ளது?

இக்கேள்விகளுக்கு விடை கேள்விகளுக்குள்ளே இருப்பதைக் காணலாம்.

**வினாவிடைச் சங்கிலி**

கேள்வி, விடை வாக்கியங்களை ஒவ்வொன்றாகப் பிள்ளைகள் விளையாடுவர். ஒவ்வொரு விடையிலும் ஓர் அடிப்படைச் சொல் (key word) இருக்கும். இச்சொல்லின் முதற்பகுதியினை மீண்டும் மீண்டும் விரித்துச் செல்வர். அப்படி விரித்துச் செல்வது ஒருவரின் சொல்வளத்தையும் கற்பனைத் திறனையும் சார்ந்துள்ளது. இந்தச் சொல் விளையாட்டை 'சொல்லடுக்கு' (Limericks) என்று ஆங்கிலத்தில் கூறுவர். தமிழகப் பள்ளிகளில் ''தேன் தேன், என்ன தேன்?'' என்பதும், ''பூ பூ, என்ன பூ'' என்பதும் ஒலிக்கக் காணலாம்.

எடுத்துக்காட்டாக,

| | |
|---|---|
| நீ எங்கே போனாய்? | - ஊருக்குப் போனேன்' |
| என்ன ஊர்? | - மயிலாப்பூர்' |
| என்ன மயில்? | - காட்டு மயில்' |
| என்ன காடு? | - ஆறு காடு' |
| என்ன ஆறு? | - பாலாறு' |
| என்ன பால்? | - கள்ளிப் பால்' |
| என்ன கள்ளி? | - இலைக் கள்ளி' |
| என்ன இலை? | - வாழையிலை' |
| என்ன வாழை? | - கற்பூர வாழை' |
| என்ன கற்பூரம்? | - ரசக் கற்பூரம்' |
| என்ன ரசம்? | - மிளகு ரசம்' |
| என்ன மிளகு? | - வால் மிளகு' |
| என்ன வால்? | - நாய் வால்' |
| என்ன நாய்? | - மர நாய்' |
| என்ன மரம்? | - பலாமரம்' |
| என்ன பலா? | - வேர்ப் பலா' |
| என்ன வேர்? | - வெட்டி வேர்' |
| என்ன வெட்டி? | - பனை வெட்டி' |
| என்ன பனை? | - தாளிப் பனை' |
| என்ன தாளி? | - விருந்தாளி' |
| என்ன விருந்து? | - நிலா விருந்து' |
| என்ன நிலா? | - பிறை நிலா' |

என்ன பிறை? - நெற்றிப் பிறை'
என்ன நெற்றி? - பெண் நெற்றி'
என்ன பெண்? - மணப் பெண்'
என்ன மணம்? - பூ மணம்'
என்ன பூ? - மாம்பூ'
என்ன மா? - அம்மா'

இந்த நீண்ட பாடலில் ஒருவர் 'நீ எங்கே போனாய்' என்று வினவுகிறார். 'ஊருக்குப் போனேன்' என்று இரண்டாம் நபர் பதில் சொல்கிறார். முதல் நபர் பதிலில் உள்ள 'ஊர்' என்னும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு 'என்ன ஊர்' என்று கேட்கிறார். இரண்டாம் நபர் 'மயிலாப்பூர்' என்று கூறுகின்றார். மயிலாப்பூர் என்பது ஒரு கூட்டுச் சொல் (compound word) ஆகும். இதில் ஒரு அடைமொழியும் அல்லது சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் உள்ளன. முதல் நபர், பதிலில் உள்ள முதல் சொல்லை அல்லது சிறப்புப் பெயரை அடிப்படையாகக் கொண்டு கேட்க வேண்டும். இரண்டாம் நபர் தமது பதிலில் சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் வரும் ஒரு தொகைச் சொல்லைச் சொல்ல வேண்டும். இப்படியாகக் கேள்வியும் பதிலும் அமையும். இறுதியில் இரண்டாம் நபர் பிரித்துக் காண முடியாத ஒரு தனிச் சொல்லைச் சொல்லி (அம்மா) முடித்து விட வேண்டும்.

இது போன்ற பாடல்கள் கேள்வி கேட்கும் திறனையும் சொல்லடுக்கும் திறனையும் வளர்க்கும். வகுப்பை இரண்டாகப் பிரித்துப் போட்டி போல நடத்துவதற்கும் வாய்ப்புண்டு. எல்லோரும் முழு ஈடுபாட்டோடு பங்கு பெறலாம். மொழித் திறனையும் கற்பனைச் செழுமையும் வளர்ப்பதற்கு இதனால் அடிப்படை ஏற்படும். இடைக்கால அந்தாதி இலக்கியத்துக்கு இவ்வகையான சொல்லடுக்கு முன்னோடியாக இருந்திருக்கலாம்.

### செந்தமிழும் நாப்பழக்கமும்

மாணவர்களிடையும் மற்றவர்களிடையும் சில குறிப்பிட்ட தொடர்கள் அல்லது வாக்கியங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றைக் கவனமாக உச்சரிக்க வேண்டும். இல்லாவிட்டால், ஒலிமயக்கம்

(fluctuation) ஏற்பட்டு நகைப்புக்குள்ளாகி விடுவார்கள். அத்தொடர்களில் குழப்பத்தையும் உறழ்வையும் தோற்றுவிக்கும் சில ஒலிகள் தொடர்ந்து வரும்.

1. ஓடுற நரியிலே ஒருநரி கிழநரி
   கிழநரி முதுகிலே ஒருபிடி நரைமயிர்.

2. யாரு தச்ச சட்டை?
   எங்க தாத்தா தச்ச சட்டை.

3. எங்க ஊர்த் தச்சன் நல்ல தச்சன்
   தஞ்சாவூர் தச்சன் இன்னும் நல்ல தச்சன்.

முதல் எடுத்துக் காட்டில் ற,ழ,ம,ர,ய என்னும் நெகிழ்வொலி கள் (liquids) அல்லது தொடரொலிகள் (continuants) அடிக்கடி பயின்று வருகின்றன. இரண்டாவது மற்றும் மூன்றாவது எடுத்துக் காட்டில் அண்ணப்பகுதியில் (palatal region) பிறக்கும் சில ஒலி கள் தொடர்ந்து வருகின்றன. ஒலிப்பு முயற்சி, ஒலிப்பிடம் அருகருகே இருப்பதால் இவ்வொலிகளை விரைவாக உச்சரிக்கும் போது கவனத்துடன் ஒலிக்க வேணடும்; இல்லாவிட்டால் உளறல் ஏற்பட்டு விடும். சிலர் விரைவாகச் சொல்லும் போது மாற்றிக் கூறிவிடுவார்கள். இதைக் கேட்டு மற்றவர்கள் மகிழ்வார்கள்.

### இரகசிய மொழி

மொழி என்பது செய்தித் தொடர்புச் சாதனமாகும். ஒருவர் பேசுகின்றார் என்றால் ஒரு செய்தி மற்றொருவருக்குப் பரிமாறப் படுகின்றது என்று பொருள். ஒரே ஒரு மொழியை மட்டும் பேசு கின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு இரகசியத்தைப் பரிமாறிக் கொள்வது கடினமாகின்றது. இச்சூழ்நிலையில் பள்ளிப் பருவ மாணவர்கள் பிறர் புரிந்து கொள்ளஇயலாத இரகசிய மொழியை (secret language) உருவாக்கிக் கொள்கின்றனர்.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் பல ஊர்களில் ஒவ்வொரு எழுத்திற்கு முன்னும் 'க' என்னும் அசையைச் சேர்த்துப் பேசப் படும் இரகசிய மொழி பரவலாகக் காணப்படுகிறது. பேசுபவர் 'க' அசையைச் சேர்த்து (encoding) பேசுவார்; கேட்பவர் 'க'

அசையை நீக்கிப் (decoding) பொருள் கொள்வார். இவ்வுத்தியை அறியாதவர் இரகசிய மொழியைப் புரிந்து கொள்ள முடியாது. இரகசியமான செய்திகளைப் பரிமாறிக் கொள்வது மட்டுமின்றித் தனக்குப் பிடிக்காத மற்ற நண்பர்களைத் திட்டவும், பட்டப் பெயர் களைச் சொல்லிக் கேலி செய்து பொழுது போக்கவும் இந்த இரகசிய மொழியைப் பேசுகின்றனர். இம் மொழியின்படி, கழுதை என்னும் சொல் 'கக- கழு- கதை' என்று சொல்லப்படும். இந்த எடுத்துக் காட்டில் முன்னொட்டு முறை (prefixation) பின் பற்றப்படுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் மற்றொரு வகையான இரகசிய மொழியும் மாணவர்களிடையே வழக்கில் உள்ளது. 'க' என்னும் அசையைச் சேர்ப்பதற்குப் பதிலாகச் சொல்லின் முதல் எழுத்தை-அசையை அடுத்து 'இல்' அல்லது 'ஐ' என்னும் உருபைச் சேர்த்துப் பேசுவர். எடுத்துக்காட்டாக, 'ஒனக்கு என்ன தெரியும்' என்னும் வாக்கியம் 'ஒயிலொனக்கு எயிலென்ன தெயி லெரியும்' என்று கூறப்படும். இவ்வாக்கியத்தில் ஒவ்வொரு சொல்லின் முதல் எழுத்தினை அடுத்து 'இல்' என்னும் உருபும், மீண்டும் அதே உயிரொலியும் வருகின்றன.

இந்த எடுத்துக்காட்டில் பின்னொட்டுமுறை (suffixation) கையாளப்பட்டுள்ளதை அறியலாம். இவ்வகையான மொழிகளை ஆராய்வது மொழியின் தோற்றம், பயன், மொழியை ஆக்கும் திறன் ஆகியவற்றைப் பற்றிய பல உண்மைகளைப் பெற இயலும். இந்த இரகசிய மொழிகளைப் பேசுவதற்குப் பழக்கமும் பயிற்சியும் தேவை. இது பெரியோர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வில்லை. படைப்புத் திறன் மிக்க பள்ளிப் பருவ மாணவர் களிடையே மட்டும் வழக்கில் உள்ளது. இவ்விதமான மறை மொழிகள் (modified speeches) பிலிட்பைன்ஸ் நாட்டில் வாழும் ஹனுனூ (Hanunoo) மக்களிடத்தில் பொழுது போக்கிற்காகவும் இரகசியத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன என்று உறரால்டு சி. கான்கிளின் கூறுகின்றார்.

குறுக்கெழுத்துக் கட்டம்

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்ட சொற்களை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்குவார்கள். பின்பு, நீளவாக்கிலும் (Syntagmatically) செங்குத்தாகவும் (Paradigmatically) படிப்பார்கள். இரண்டு முறையிலே படித்தாலும் சொல்லின் அமைப்பும் பொருளும் மாறாமல் இருக்கும்.

வகை - 1

| | | |
|---|---|---|
| க | ர | டி |
| ர | யி | ல் |
| டி | ல் | லி |

| | | |
|---|---|---|
| சி | வா | ஜி |
| வா | யி | லே |
| ஜி | லே | பி |

| | | |
|---|---|---|
| கோ | ம | தி |
| ம | க | ன் |
| தி | ன் | னி |

வகை - 2

| | | |
|---|---|---|
| அ | ழ | கு |
| ர | — | ண |
| சு | க | ம் |

| | | |
|---|---|---|
| ப | ங் | கு |
| ட | — | ல |
| கு | ள | ம் |

| | | |
|---|---|---|
| அ | ம் | மா |
| ப் | | த |
| பா | ட | ம் |

இவற்றைப் போன்ற பல எடுத்துக்காட்டுகள் வழக்கில் காணலாம். வட்ட வடிவத்தில் இது போன்ற எழுத்துக் கட்டங்கள் அமைந்து வரலாம். சித்திரக் கவியில் பாம்பு போன்ற வடிவங்களில் அமைந்து வருவதை இவண் நினைவு கூரலாம்.

எழுத்துமாறிப் பொருள்கோள்

மொழியில் சில சொற்களோ தொடர்களோ விநோதமாக அமைந்து வருகின்றன. அதாவது, சில சொற்களை முதல் எழுத்திலிருந்து வலப்பக்கம் நோக்கிப் (Forward) படித்தாலும், இறுதி எழுத்திலிருந்து இடப்பக்கம் முதல் எழுத்தை நோக்கிப் (Backward) படித்தாலும் பொருள் மாறாமல் இருக்கும். சில எடுத்துக்காட்டுக் கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. திதி, மாமா.
2. பாப்பா, காக்கா, கற்க, குடகு, வாழ்வா.
3. விகடகவி, நீதிபதி நீ.

பெரும்பாலும் இவ்வகையான சொற்கள் உயிர் எழுத்தால் தொடங்குவதும் இல்லை; முடிவதும் இல்லை. எழுத்துமாறிச் சொற்கள் சொல்லின் முதலிலும் ஈற்றிலும் உயிர்மெய்யெழுத்துக் களை மட்டும் பெற்று வருகின்றன. மேலும், உயிர்மெய்யெழுத் துக்களில் சில முதலிலும் ஈற்றிலும் கூட வாரா. எனவே, இவ் வகையான சொற்களைக் கூற, மொழியின் முதல், இடை, கடை என்னும் இடங்களில் தமிழ் எழுத்துக்கள் பயின்று வரும் முறை (Phonemic Distribution) பற்றிய அறிவு வேண்டும்.

**சொல்லாக்கம்**

ஒரு சொல்லின் உள்ள ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை நீக்குவதன் மூலமும் (Deletion) சேர்ப்பதன் மூலமும் (Addition) இடமாற்றம் (Rearrangement) செய்வதன் மூலமும் புதிய சொற் களைப் படைக்க முடியும். எடுத்துக்காட்டாக, 'குதிரை' என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதிலிருந்து குதி, குரை, திரை என்னும் மூன்று சொற்களை ஒரு சமயத்தில் ஒரு எழுத்தை நீக்குவதன் மூலம் பெற இயலும். மேலும், இரண்டு மூன்று பேர்கள் எழுத்தினைச் சேர்த்து விளையாடுவதைக் காணலாம். சினிமாவின் அல்லது விலங்கின் பெயரின் முதல் எழுத்தை ஒருவர் எழுத மற்றொருவர் தொடர்ந்து எழுதி முடிப்பார். யார் எழுதி முடிக்கின்றாரோ அவரே வெற்றி பெறுவார். இவ்விளையாட்டு பொழுது போககவும், சொல்வளத்தைப் (lexicon) பெருக்கவும் துணை புரிகின்றது.

**விடுகதை**

தொல்காப்பியர் காலம் தொட்டு மக்கள் வழக்கில் இருந்து வருவது ''பிசி'' என்னும் விடுகதையாகும். இதனைப் ''புதிர்'' என்றும் சொல்வார்கள். இது சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்க்கும் ஆற்றல் உடையது. இதனை அறிவு விளையாட்டுக் களுள் (games of strategy) ஒன்றாகக் கூறுவர். ஒன்றிரண்டு

வரிகளிலும் உருவகக்கதைகள் போலவும் விடுகதைகள் அமைந்து வருதல் உண்டு. மொழியாற்றலும் கற்பனைத் திறனும் மிக்கவர்கள்தாம் இதில் ஈடுபட இயலும். கிராமப்புறங்களில் போட்டியாகவும் நடத்தி மகிழ்வார்கள். தமிழின் ஒலி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விடுகதைகள் சொல்வது உண்டு. எடுத்துக் காட்டாக,

தம்பிக்கு எட்டுவது

அண்ணனுக்கு எட்டவில்லை. அது என்ன? (உதடு)

இந்த எடுத்துக்காட்டில் 'தம்பி' என்னும் சொல்லை உச்சரிக்கும் போது இதழ்கள் தொடுகின்றன. 'அண்ணன்' என்னும் சொல்லை உச்சரிக்கும் போது இதழ் தொடுவதில்லை. எனவே, ம, ப, என்னும் ஒலிகளின் ஒலிப்பு அடிப்படையில் (articulation) விடுகதை தோன்றியுள்ளது.

விடுகதைகள் பலவகைப்படும். ஒரு பொருளை இயல்பாம் வருணிப்பதாலும், உவமைகளால் விளக்குவதாலும், இயற்கைத் தன்மையைக் கூறி மறுத்துக் கூறுவதாலும், இருபொருள் தரும் கேள்விகளைக் கேட்பதாலும் விடுகதைகள் தோன்றுவதுண்டு. சில நேரங்களில் விடுகதையைப் புரிந்து கொள்ள கதைச் சூழலே தேவைப்படும். எடுத்துக்காட்டாக,

''வெட்டியதால் சாகவில்லை;

வெட்டாமல் இருந்திருந்தால் செத்திருப்பேன்;

செத்ததால் சாகவில்லை;

சாகாமல் இருந்திருந்தால் செத்திருப்பேன்.''

இந்த விடுகதையில் உள்ள சொற்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது போலத் தோன்றும். ஒரு தலைவன் தலைவியிடம் தான் இரண்டு ஆபத்துக்களிலிருந்து தப்பி வந்ததைக் கூறுகின்றான். அவன் வரும் வழியில் (இருட்டில்) ஒரு குழி இருந்தது. மின்னல் வெட்டியதால் குழியில் கீழே சாகாமல் தப்பி விட்டேன். மேலும் ஒரு பாம்பை வழியில் பார்த்தான். அந்தப் பாம்பு செத்திருந்ததால் இவன் பிழைத்துக் கொண்டான். எனவே, மின்னல், பாம்பு

என்ற சொற்களைச் சூழலோடு இணைத்துப் பார்க்கும்போது புதிர் விடுவிக்கப்படுகின்றது. இவ்விடுகதை வாக்கியத்தின் முழுமையான பொருளை உணர்ந்து கொள்ள ''சூழல்'' தேவை என்பதை வலியுறுத்துகின்றது.

### பட்டப் பெயர்கள்

இயற்பெயருக்குப் பதிலாக வந்து வழங்கும் சிறப்புப் பெயர்கள் மற்றும் கேலிப் பெயர்கள் பட்டப் பெயர்கள் (nick names) எனப்படும். ஒரு குடும்பத்தில், தெருவில், பள்ளியில், கல்லூரியில், வேலை பார்க்கும் இடத்தில் தெளிவிற்காகவும், விளையாட்டிற்காகவும் மரபிற்காகவும் பட்டப் பெயர்கள் வைப்பதுண்டு. இப்பெயர்கள் உடலின் தோற்றம், மற்றும் நிறம், செயல், நடத்தை, பழக்கவழக்கங்கள், செய்தொழில், தவறான உச்சரிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுகின்றன. இப்பெயர்கள் கேலி செய்யும்போதோ திட்டும்போதோ பயன்படுத்தப்படுகின்றன.

ஆங்கிலத்தில் 'Stern' என்பவர் 'Nerts' என்று அழைக்கப்படுகிறார். அதாவது பெயரின் எழுத்துக்களை மாற்றித் தலைகீழாக வாசிப்பதன் மூலம் பட்டப் பெயர்களை உருவாக்கி அளிக்கின்றனர். தமிழ்ச் சொல்லின் எழுத்துக்களில் இத்தகைய நெகிழ்ச்சி இல்லாததால் ஆங்கிலத்தில் உள்ளது போன்ற பட்டப் பெயர் வைக்கும் முறை கிடையாது. ஆனால், ஒரு சொல் தவறாக உச்சரிக்கப்பட்டால், தவறாக உச்சரிக்கப்பட்ட சொல் ஒருவரின் பட்டப்பெயர் ஆகிவிடுகின்றது. இதன்படி, ஔவையார் என்னும் சொல்லை 'அவ்வையார்' என்று உச்சரிக்காமல் ஒ-ளவையார் (O|avaiyār) என்று உச்சரித்ததால் தவறாக உச்சரித்தவர் ஒ-ளவையார் என்னும் பட்டப்பெயரைப் பெறுகிறார். இவ்வாறே தசரதன், கொத்தமங்கலம் சுப்பு என்னும் சொற்களை 'தசரதன்' என்றும் 'சுப்பு மங்கலம் கொத்து' என்றும் உச்சரித்து பட்டப்பெயர்களைப் பெறுகின்றனர். 'முக்கா(ல்) துட்டு' வேண்டுமென்று தந்தையிடம் அடிக்கடிக் கேட்டவன், இறுதியில் அவன் 'முக்கா' என்னும் பட்டப் பெயரைப் பெற்றுவிடுகிறான். உச்சரிப்புப் பிழையாலும் அடிக்கடிக்

கூறும் சொல்லாலும் (Repetition) பட்டப் பெயர்கள் பெறுவோர் குறைவு.

உருவத்தின் அடிப்படையில் உருவாகும் பட்டப் பெயர்களே ஏராளம். ஒருவரின் உருவத்தைக் குறிப்பிட்ட ஒத்த அமைப்புள்ள பொருளோடு இணைத்துச் சிந்தித்து ஒப்புமை ஆக்கத்தின் (Analogical Creation) அடிப்படையில் பட்டப் பெயர்களை வைக்கின்றனர். குட்டையான ஒருவர் 'குட்டைக் கத்தரிக்காய்' என அழைக்கப்படுகிறார். ஒல்லியானவர் 'கொத்தவரங்காய்' என அழைக்கப்படுகிறார். தடித்த பெண் 'சொரக்காய்' எனப் பெயர் சூட்டப்படுகின்றாள். வெள்ளை நிறமுடையவர் 'வெள்ளெலி' என்றும் 'வெள்ளைப் பாச்சா' என்றும் பெயரிடப்படுகிறார்.

வைக்கப்படும் பட்டப் பெயர் வைப்போரின் மனப்பாங்கை (attitude) வெளிப்படுத்த வல்லது. வைக்கப்பட்ட பட்டப் பெயர் பொருத்தமாக இருந்தால் தான் எல்லோரும் ஏற்றுக் கொள்வர்; அழைப்பர். பொருத்தம் இல்லாவிட்டால் கால வெள்ளத்தில் கரைந்து அழிந்து விடும். காலத்திற்குத் தக்கவாறு புதுப்புதுப் பட்டப் பெயர்கள் தோன்றலாம் ; மறையலாம். பட்டப் பெயர்கள் ஒருவகையான ஆகு 'பயரே. 'குட்டைக் கத்தரிக்காய்' என்பது குட்டையான ஒருவரைச் சுட்டும் போது இச்சொல்லை 'உவமையாகு பெயர்' என்று கொள்வதில் தவறில்லை.

முடிவுரை

இதுவரையில் மக்களிடையே, குறிப்பாக, மாணவர்களிடையே வழங்கும் சில விளையாட்டுக்களை அறிந்தோம். இன்னும் பல வாய்மொழியாக வழங்கி வரலாம். அவற்றையெல்லாம் தொகுத்து மொழியியல் அடிப்படையில் விளக்க வேண்டியது மானிட மொழியியலாரின் மற்றும் சமுதாய மொழியியலாரின் கடமையாகும். மேலும், சிலேடைச் செய்யுட்களிலும் நாட்டுப்புற நகைச் சுவைக் கதைகளிலும், பரிகாசத் தன்மையைக் கொண்ட நலுங்கு — ஏசற் பாடல்களிலும் (fclk parody) மொழியை அடிப்படையாகக் கொண்டு அமையும் பொழுது போக்கும் கூறுகள் உள்ளன. இவற்றை நவீன உரைப்பகுப்பு 'discourse analysis) முறைப்படி

விளக்க வேண்டும். மொழியின் வழியான பொழுது போக்கு வகைகளின் தோற்றம், அமைப்பு, பரவல் இயக்கம் ஆகியவற்றை விளக்கமுறையிலும், வரலாற்று - ஒப்பியல் முறையிலும் விரிவாக ஆராய வேண்டும் ; ஆராய இடமிருக்கிறது.

## துணை நூல்கள்


இராமசுவாமி, மு., 'பட்டப் பெயர்கள்', பரல்கள் : 1 பக் : 107 - 121. தமிழ் ஆய்வாளர் மன்றம், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ. சித்திரக் கவி விளக்கம், பதிப்பாளர் : வி. கு. சுவாமிநாதன், 1939. மதுரை.

பாலசுப்பிரமணியன், இரா., தமிழர் நாட்டு விளையாட்டுக்கள், 1980. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

Formkin, Victoria and Robert Road Man, 1978. (Rpt) **An Introduction to Language**, PP. 279 - 281. New York.

Hymes, Dell (ed.) 1964. **Language in Culture and Society**, PP. 291 – 304, Bombay.

Platt, John, T. and K. Heidi Platt, 1975. **The Social Significance of Speech**, NHS : **Amsterdam**.

## ஈழ நாட்டு இலக்கண நூல்கள்

ஈழ நாட்டுப் புலவர்கள் பல இலக்கண நூல்களைத் திருத்திப் பதித்தும், உரை இயற்றியும் பணிபுரிந்தது மட்டுமன்றிச் சில இலக்கண நூல்களையும் புதுமுறையில் ஆக்கித்தந்துள்ளர். நாவல ருடைய இலக்கண வினாவிடையினையும் இலக்கணச் சுருக்கத் தையும் யாவரும் அறிவர். 'தமிழ் வியாகரணம்' எனும் நூலை நெவின்சு சிதம்பரப்பிள்ளை எழுதினார். சவுந்தரநாயகம் பிள்ளை மாணவர் கற்பதற்கு இலகுவாக 'நன்னூற் சுருக்கம்' தந்தார். மெல்லோப் பாதிரியார் 'உவமான விளக்கம்' இயற்றினார். 'நன்னூற் கருப்பை'யினை ஆக்கியவர் சரவணமுத்துப் புலவர். 'இலக்கணச் சந்திரிகை', 'வினைப்பகுபத விளக்கம்' என்பன சுன்னைக் குமாரசுவாமிப் புலவர் தமிழ்நாட்டுக்களித்த அரிய நூல்கள். முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் செய்த 'நன்னூல்' உதாரண விளக்கமுங்' குறிப்பிடத்தக்கது.

— க. பொ. இரத்தினம்
இலங்கையில் இன்பத்தமிழ்
பக்கம். 59 - 60, 1959.
கலைவாணி புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

## அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடுகள்

1. மொழியியல் - வாழ்வும் வரலாறும் (History of Linguistics)

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
M, A, Ph. D, (Kerala) Ph. D., (Ind. U. S. A.)

**டாக்டர். புஷ்பவல்லி, M.A., Ph. D.,**

மொழியியல் அறிஞர்கள் பலர் மொழியியல் வளர்ச்சிக்கு வேரும் விதையுமாக நின்றனர். அவர்களுடைய வாழ்வு, வரலாறு, அவர்கள் ஆராய்ச்சியில் கண்ட வெற்றி இன்னோரன்ன பல செய்திகளையும் பல்வேறு மொழியியல் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் விளக்குவது இந்நூல்.

பக்கம் 458) (விலை ரூ. 16/-

2. கிளை மொழியியல்

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M. A., Ph. D.,**

ஒரே மொழி வங்கும் நாட்டில் கூட வட்டாரம், இனம், சாதி, தொழில், சமூகம் முதலிய வேறுபாடுகள் மூலம் பேச்சு மொழி வேறுபடுகிறது. தமிழில் அவ்வாறு வேறுபடுகின்ற பேச்சு மொழிகளைப்பற்றி விரிவாக விளக்கிக்கூறும் முதல் நூல் இந்நூல்.

பக்கம் 226) (விலை ரூ. 10/ -

3. மொழித்திட்டமிடுதல் (Language Planning)

**டாக்டர் கி. கருணாகரன் M. A., Ph. D.**

மொழித் திட்டமிடுதலில் இன்றைய நிலையில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ள முக்கியமான சில கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அவற்றின் விளக்கங்களையும் எளிய நடையில்

எடுத்தியம்புவது இந்நூல். தமிழின் புதுமையாக்கம், எழுத்துரு வாக்கம், நிலைபேறாக்கம் முதலியவற்றைப்பற்றி அறிவியல் கண்ணோட்டத்துடன் விளக்குகிறது இந்நூல்.

பக்கம் 165) (விலை ரூ 7/-

4. உலக மொழிகள் - திராவிட மொழிகள் I

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**

M. A., Ph. D., (Kerala), Ph. D., (Ind. U. S. A)

திராவிட மொழிகளின் வாழ்வு, வரலாறு, இலக்கியம் இலக்கணம், கல்வெட்டு போன்ற இன்னோரன்ன பல செய்திகளையும் திராவிட மொழிகட்கும் மற்ற மொழிகட்குமுள்ள பல்வேறு உறவினையும் விளக்குவது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஐந்தாவது நூல் இது.

பக்கம் 250) (விலை ரூ. 12/-

5. உலக மொழிகள் - திராவிட மொழிகள் II
(Dravidian Languages)

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**

M. A. Ph. D., (Kerala), Ph. D., (Ind. U. S. A)

இருபத்திரண்டுக்கும் மேற்பட்ட திராவிட மொழிகளின் வடிவங்களை ஒப்பிட்டுத்தொல் திராவிட மொழியிலுள்ள ஒலியமைப்பு-பெயர் இலக்கண அமைப்பு ஆகியவற்றைச் சான்றுகாட்டி ஒப்பிலக்கண அடிப்படையில் ஆராய்வது இந்நூல். 'உலகமொழிகள்' என்ற வரிசையில் ஆறாவது நூல் இது.

பக்கம் 265) (விலை ரூ. 15/-

6. நரிக்குறவப் பழங்குடி மக்கள்

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M. A, Ph. D.**

இந்நூல் நரிக்குறவர்களின் வாழ்க்கை முறையையும் சுற்றுப் புறச் சூழலுக்கேற்ப அவர்கள் மேற்கொள்ளும் பழக்க வழக்கங் களையும் விளக்குகிறது. மேலும் அவர்கள் வாழ்வில் அமையும் பண்பாட்டுச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுகிறது.

பக்கம் 96) (விலை ரூ. 4/ -

7. எழுத்துச் சீர்திருத்தம் (Script Reform)

**டாக்டர் செ. வை. சண்முகம், M. A. M. Litt., Ph. D.**

எழுத்துச் சீர்திருத்தம் என்பது தமிழ் வரிவடித்தில் செய்யப் படும் சீர்திருத்தம் மட்டுமன்று; எழுத்தின்தொகை, சொல்லெழுத்து பிறமொழிச் சொற்களைத் தழுவும் முறை ஆகியவைகள் பற்றியும் செய்ய வேண்டிய திருத்தம் என்ற நோக்குடன் இந்நூல் எழுதப் பட்டுள்ளது. இனிச் செய்யப்பட வேண்டியவைகளும் தமிழ்நாடு அரசு வெளியிட்ட எழுத்துச் சீர்திருத்தம் குறித்த ஆணை பற்றிய விமர்சனமும் இறுதி இயலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பக்கம் 240) (விலை ரூ. 12.50/ -

8. ஒலியியல் (Phonetics)

**டாக்டர் சு. இராசாராம் M. A., Ph. D.**

தமிழொலிகளின் வகை, பிறப்புமுறை ஆகியவற்றோடு பொது வாக ஒலியைப் பற்றியும் அதன் ஆய்வு முறைகள் மற்றும் பேச் சுறுப்புக்களைப் பற்றியும் இந்நூல் விவரித்துக் கூறுகிறது. ஒலி யியல் கலைச் சொற்கள் ஒவ்வொன்றும் விளக்கத்தோடு இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

பக்கம் 180) விலை ரூ. 15/-

9. எழுத்திலக்கணக்கோட்பாடு
(Phonological Theoires in Tamil Grammars)

**டாக்டர் செ. வை. சண்முகம் M. A,. M. Litt., Ph. D.**

தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமி நாதம், ஆகிய நூல்களின் எழுத்ததிகாரத்தில் காணப்படும் மொழி யியல் கோட்பாடுகள், எழுத்ததிகார அமைப்பு, பிறப்பியல், தொல்காப்பியரின் 'எழுத்து', முதலும் சார்பும், எழுத்தியலின் களன், எழுத்தியல், பதவியல், புணரியல், அடிநிலைக் கிளவி, புணரியல்களின் அமைப்பு, சாரியை என்று பதினோரு இயல்களி விளக்கப்பட்டுள்ளன. முதல் இயலான 'இலக்கணமும் மொழியி லும்' என்பதில் இலக்கணத்துக்கும் மொழியியலுக்கும் உள் உறவு, மொழியியல் நோக்கில் இலக்கணத்தை ஆராயும் முறை இந்த நூற்றாண்டில் இலக்கண ஆய்வின் வரலாறு ஆகியனவ கடைசி இரண்டு இயல்களான 'போக்குகள்' 'உத்திகள்' என்ப வற்றில் இலக்கணங்களிடையே காணப்படும் ஆய்வுப்போக்கு இலக்கண உத்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. ஆங்காங்கே உ யாசிரியர்களின் கருத்துகளும் மொழியியல் நோக்கில் பரிசீலிக்க பட்டுள்ளன. பொதுவாக இந்தநூல் எழுத்ததிகாரத்தை ஒ நோக்கிலும் மொழியியல் நோக்கிலும் படிப்பதற்கு உதவிய இருக்கும்.

பக்கம் 306) (விலை ரூ 20

10. சொல்லியல் 1 (Morphology) – பெயரியல் (Noun)

**டாக்டர் ச. அகத்தியலிங்கம்,**
M. A., Ph. D, (Kerala), Ph. D., (Ind. U S. A)

தமிழ் மொழியின் சொல்லியல் பற்றி இக்கால மொழியிய கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்வது இந்நூல்.

முதல் இயலான 'சொல்லியல் கொள்கைகளும் விளக்கங்களும்' என்ற தலைப்பில் தற்கால மொழியியல் கோட்பாடுகளும், பெயரியல் என்ற இரண்டாம் இயலில் தமிழ்ப் பெயர்ச்சொற்களின் வகைப்பாடு

களும் அவற்றின் காரணங்களும், பதிலிடுபெயர்கள், எண்ணுப் பெயர்கள் போன்றவையும் விளக்கப்படுகின்றன. மூன்றாவது இயலான 'எண் பால் பகுப்பு' என்ற தலைப்பில் எண் அமைப்பும் பால் அமைப்பும் விளக்கப்பட்டுள்ளன. 'வேற்றுமை' என்னும் இயலில் வேற்றுமைகளின் அமைப்பும் ஆக்கமும், பொருளும் போக்கும் ஆராயப்படுகின்றன. பொதுவாகத் தமிழ் மொழியின் பெயர்ச்சொல் அமைப்பு பற்றிப் பல புதிய விளக்கங்களை இதில் காணலாம். பல்வேறு புதிய கோணங்களில் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. சொல்லியல் என்ற வரிசையில் முதல் நூல் இது.

பக்கம் 280) (விலை ரூ. 21/ -

**11. Linguistic Convergence**

Dr. K. KARUNAKARAN, M.A, Ph D, DiP, in Kannada

This mornagraph deals with some of the problems related to the use of languages in contact situations, and as a result the development of some commonness in the structure of the languages. The topics discussed include nature and direction of convergence, use of minority languages in multilingual situation, mass communication diglossia and linguistic convergence, social setting - language development and linguistic convergence, and current issues and research related to the study of convergence.

[pp. 188] [price Rs.10/

**12. இருமொழியம்(Bilingualism)**

**டாக்டர் கோ. சீனிவாசவர்மா, M. A. Ph, D.**

ஒருவர் இரண்டு மொழிகளைக்கற்று அவைகளைப் பேசும் பொழுது, அவருடைய பேச்சில் ஒரு மொழியின் கூறுகள் மற்றொரு

மொழியில் கலந்து வழங்குகின்றன. மொழித் தொடர்பு நீண்ட காலம் நிலைத்திருந்தால் தொடர்பு கொண்ட மொழிகள் ஒன்று மற்றொன்றாலோ அல்லது இரு மொழிகளுமோ தாக்கத்திற்குட் படலாம். அவ்வாறு தாக்கம் நிகழும் பொழுது பிற மொழிக் கூறுகள் குறுக்கீடாகவோ, அல்லது கடனாகவோ வரும். இவை களை மொழி அடிப்படையிலும், சமுதாய அடிப்படையிலும் விரி வாக விளக்கிக் கூறும் முதல்நூல் இந்நூல்.

பக்கம் 152) (விலை ரு. 15/-

13. **Study of Social Dialects in Tamil**

**K. KARUNAKARAN & C. SIVASHANMUGAM**

This book deals with the study of social dialects in Tamil from the point of view of social stratification of language. The various theoretical aspects pertaining to the study of linguistic variation have been discussed in detail, and the same suitably illustrated from the Tamil speech behaviour. Tamil speech differentiation as reflected in the rural urban, semi-urban set up has been described and the variations thus identified have been conditioned with the help of the social parameters contexts, etc.

pp 141) (Price Rs. 10/-

14. **சொல்லியல் - வினையியல் - 1**

MORPHOLOGY - VERB - 1

**டாக்டர். ச. அகத்தியலிங்கம்**

M. A., Ph. D, (Kerala), Ph. D., (Ind. U. S. A.)

சொல்லியல் என்ற வரிசை நூல்களில் இரண்டாவது நூல் இது. தலைப்புக்கேற்ப தமிழ் வினைச் சொல்லின் அக அமைப்பைப் பற்றி மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்வது, வினைச்சொல் விளக்கம், தமிழில் புதுவினையாக்கம், வினைவகைப்பாடு, பிற வினை, காரணவினை. இணைப்புருபு, ஏவல் வினை, காலம், எதிர்மறை ஆகிய ஒன்பது பகுதிகளைக் கொண்டது இந்நூல். வினைச்சொல் என்றால் என்ன என்பதை அமைப்பு அடிப்படையிலும் பொருள் அடிப்படையிலும் ஆராய்வது முதல் பகுதி. இரண்டாவது பகுதியில் தமிழில் புதுவினைகள் எவ்வாறு ஆக்கப் படுகின்றன என்பதும் அவ்வாறு ஆக்கப்படுவதற்குக் காரணங்கள் என்னென்ன என்பதும் இவை போன்ற பிற செய்திகள் விரிவாக ஆராயப்படுகின்றன. இதையடுத்து வரும் மூன்றாவது பகுதியில் தமிழ் வினைச் சொற்களை வெவ்வேறு அடிப்படையில் விளக்கிப் பின்னர் காலவெழுத்துக்களைப் பொறுத்தமட்டில் எத்தகைய வகைப் பாடுகள் உள்ளன என்று விரிவாக ஆராயப்படுகின்றது. இதன் பின்னர் பிறவினை, காரணவினை, ஏவல்வினை, காலம், எதிர் மறை ஆகிய இலக்கணக் கூறுகள் பல வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றன. எனவே தமிழ் வினைச்சொற்கள் பற்றித் தற் கால மொழியியல் கண்ணோட்டத்தில் விரிவாக தந்துள்ள நூல் இதுவே.

இன்னும் எத்தனையோ இலக்கணக் கூறுகள் வினைச் சொல் லில் காணக்கிடக்கின்றன. இவை அடுத்து வரும் வினையியல்-2 என்ற நூலில் இடம் பெறும்.

பக்கம். 212) விலை ரூ. 16/-

15. சங்கத்தமிழ் (அச்சில்)

**டாக்டர். ச. அகத்தியலிங்கம்**

16. பாடம் பயிற்றுமுறை (அச்சில்)

**டாக்டர். மா. சு. திருமலை**

## உறுப்பினர்களுக்கு

தமிழ் இலக்கணம், மொழியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் மொழியியலில் வெளியிடுவதற்கு அனுப்ப வேண்டுகிறோம். கட்டுரையாளர்களுக்கு இருபத்தைந்து படிகள் (reprints) இலவசமாக வழங்கப்பெறும். கட்டுரைகளைத் தெளிவாகத் தட்டச்சு (type) செய்து இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். தங்கள் நண்பர்களையும் மொழியியல் கழக உறுப்பினர்களாக்கி மொழியியல் வளர்ச்சிக்கு உதவ வேண்டுகிறோம்.

## மொழியியல் இதழ் வெளியீடு பற்றிய குறிப்பு


1. வெளியீட்டாளர் & ஆசிரியர் — டாக்டர் ச. அகத்தியலிங்கம்,
செயலாளர், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற்கழகம்,
மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர் 608 002.

2. அச்சிட்டோர்: சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர் 608 002.

# மொழியியல்

தொகுதி 5 — எண் 4

ஏப்ரல் – ஜூன் 1982

## உள்ளுறை

தமிழ் இலக்கணம் கற்பித்தல்

தெ. பொ. மீனாட்சிசுந்தரன் — 1-32

முதற் சங்கத் தமிழ் : நின்மெய் ஸாஅர

கி. லே[illegible]னாத முத்தரையன் — 3[illegible]-72

ஒலியனியல் விதிகள்

என். இராமசாமி — 73--98

தமிழ் வழக்குகள

சி. சக்திவேல் — 99-116

மொழிவழிப் பொழுதுபோக்குகள்
அ மங்கை — 117-130